4 298

# சீமானின் திருமணம்



ஸ்டார் பிரசுரம்

# சீமானின் திருமணம்

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1971
MADURAI-2

ஐவான் துர்கனேவ்

தமிழாக்கம் :

நா. பாஸ்கரன்

ஸ்டார் பிரசுரம்

திருவல்லிக்கேணி
சென்னை—5

மேலக் கோபுரத் தெரு
மதுரை

முதற் பதிப்பு: அக்டோபர், 1956

உரிமை பதிவு

விலை ரூ. 1-0-0

Star Publications

Triplicane
Madras-5

West Tower St.
Madurai.

எவரெடி அச்சகம் மதராஸ்-17

# முன்னுரை

ருஷ்ய நாட்டுப் பிரபல இலக்கியக் கர்த்தாக்களில் ஒருவரான துர்கநேவ் 1857–ல் எழுதிய "ஆஸ்யா" (Asya) என்ற குறுநாவலின் மொழி பெயர்ப்புத்தான் இந்தச் 'சீமானின் திருமணம்'

டால்ஸ்டாய், செகாவ், புஷ்கின் போன்றே பேரிலயக்கியங்களைப்படைத் தவர் துர்கநேவ். அவர் கதைகளில் உலவும் பாத்திரங்கள் மிகச் சொற்பம்தான். என்றாலும் அந்தப் பாத்திரங்களின் பாவங்களும், பண்புகளும் இருக்கிறதே அவை தனிச்சிறப்புடையவை. என்றைக்கும் மறக்க முடியாதவை.

இந்த நாவலில் வரும் பாத்திரமான ஆஸ்யாவைத்தான் பாருங்கள். அவள் ஒரு பிரத்தியேக வார்ப்படம். அவள் அசைவுகளிலும், நெளிவுகளிலும் தான் எத்தனை அர்த்தபாவங்கள் !

இந்த நாவல் எழுதப் பெற்று ஏறத்தாழ நூற்றுண்டுகள் ஆகின்றன. இப்

பொழுது தான் முதன் முதலில் தமிழில் வெளிவருகிறது.

இந்த ஆங்கில நாவலைப் படித்ததும் உடனே தமிழில் கொண்டுவர வேண்டும் என்ற துடிப்பு ஏற்பட்டது. இதைத் தமிழாக்க எனக்கு உற்சாக மூட்டிய என் அன்பு நண்பர் திரு. ஆர். கே. கண்ணன் அவர்களுக்கு நான் நன்றி செலுத்த வேண்டும். பரவிய முறையில் பலவிதமான அருமையான நூல்களை வெளிக் கொணரும் ஸ்டார் பிரசுரத்தார் இந்த நூலையும் அழகாக வெளியிட்டிருக்கிறார்கள். அவர்களுக்கு என் நன்றியும் வணக்கமும்.

அன்பு,

10-10-1956
சென்னை.

நா. பாஸ்கரன்.

MADURAI UNIVERSITY LIBRARY
MADURAI-2

# சீமானின் திருமணம்

நான் சொல்லப்போவது மிகப்பழைய சரித்திரம். எனக்கு இருபத்தி ஐந்து வயது நடந்த சமயத்தில் இந்தச் சம்பவம் நிகழ்ந்தது. அப்பொழுதுதான் என்னிச்சையாக செல்வதற்குரிய வயது வந்தது. வெளியூர் சுற்றுப்பிரயாணங்கள் செய்ய ஆரம்பித்தேன். மற்றவர்கள் சொன்னது போல் மேல்படிப்புக்காகச் செல்லவில்லை. இந்தப்பரந்த உலகத்தைப் பார்த்துவரலாமே என்ற ஆசைதான். இளம் வயது. திடசரீரம்; உணர்ச்சிமிகுந்த உற்சாகம், இத்தனையோடும் கொள்ளைப் பணமும் இருந்தது. பின் கேட்க வேண்டுமா என்ன? எந்தவிதமான பொறுப்புகளோ அல்லது சங்கடங்களோ எனக்கு இல்லை. ஒருவார்த்தையில் சொல்ல வேண்டுமெனில் நான் நினைத்ததையெல்லாம் செய்யமுடியும். அது எனது வாழ்க்கையின் வஸந்தகாலம். மனிதன் மரம் செடியைப் போன்றவனல்ல, அவனுக்கு வஸந்தகாலம் எப்போதோ கொஞ்ச நாள்தான் வந்து போகும் என்பது எனக்கு அப்பொழுது அவ்வளவாகத் தெரியாது. வாலிபத்தில் இன்பத்தை மனிதன் கொள்ளை கொள்ளையாகப் பருகுகிருன். என்ருலும் அவனுக்கும் ஒரு காலம் வரும். அப்பொழுது அனுபவித்த இன்பத்தின் ஒரு துளியாவது கிடைக்காதா என்று ஏங்குவான். அதைப் பற்றியெல்லாம் இப்பொழுது ஏன் பேச வேண்டும்?

எந்தவிதமானத் திட்டமோ தீர்மானமோ குறிக்கோளோ இன்றி எங்கெங்கோ போனேன். நினைக்கும் பொழுதெல்லாம் என் பயணம் நிற்கும். மீண்டும் ஏதாவது நினைத்தால், வேறு புதிய முகங்களைக் காண வேண்டுமென்ற ஆசை யெழுந்தால் என் பயணம் மறுபடியும் தொடங்கும். எனக்குப் பிடித்தமான ஒரே விஷயம் மனித ஜீவன்கள்தாம். களிப்புத் தரும் கலா பொக்கிஷங்களும் சுவை பொருந்திய ஞாபகச் சின்னங்களும் எனக்கு வெறுப்பை மூட்டின. வழிகாட்டியைக் கண்டாலே எனக்கு ஆத்திரம் பற்றிக் கொண்டுவரும். நான் டிரஸ்டனில் இருப்பதையே விரும்பவில்லை. அந்தச் சூழ்நிலையே எனக்கு வேதனையாக இருந்தது. இயற்கைச் சூழ்நிலை எனக்குப் பிடித்தமானது தான். ஆனால் அதிர்ச்சியூட்டக்கூடிய எந்தக் காட்சிகளையும் —மலைச்சிகரங்கள் நீர்வீழ்ச்சிகள் — போன்ற கவனத்தை ஈர்க்கக்கூடிய இயற்கைக் காட்சிகளை எனக்குப்பிடிப்பதில்லை. இயற்கைக் காட்சிகள் தலை நீட்டி என்னைப்பார் என்று சொல்வதைப் போன்றியிருப்பவைகளைப் பார்க்க எனக்குப் பிடிப்பதில்லை. மனிதர்களை உயிரும் உணர்ச்சியும் உள்ள மனித முகங்களை, அவர்களின் பேச்சுக்களை, அவர்களின் நடமாட்டங்களை, ஆனந்த ஆர்ப்பாட்டங்களை, களிப்பு நிறைந்த சிரிப்பொலிகளைப் பார்க்காமலும் கேட்காமலும் என்னால் இருக்கவே முடியாது. கூட்டத்தைக் கண்டாலே எனக்குக் குஷிதான். ஆம்; அவர்கள் ஓடினால் நானும் ஓடுவேன், அவர்கள் சப்தமிட்டால் நானும் சப்தமிடுவேன். அதேபொழுதில் அவர்கள் எப்படி எல்லாம் செய்கின்றனர் என்பதையும் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டிருப்பேன். எனக்கு இன்பமூட்டும் பிரதான விஷயமே மனிதர்களை பார்த்துக் கொண்டிருப்பதுதான். அவர்களை வெறுமே பார்த்துக் கொண்டிருக்கமாட்டேன். எல்லையில்லா சந்தோஷத்தோடு, அடக்கமுடியா துறுதுறுப்போடு அவர்களைப் பற்றி நான் ஆராய்ச்சி செய்து கொண்டிருப்பேன்.

நான்சொல்ல வேண்டியதை விட்டுவிட்டு எங்கேயோ செல்கிறேனே.

இருபது வருடங்களுக்கு முன்னுல் ரைன் நதியில் இடது கரையிலிருக்கும் ஜெர்மனியைச் சேர்ந்த "ச —" நகரில் வசித்துக்கொண்டிருந்தேன். தண்ணீர் குழாய்க் கருகில் சந்தித்த ஒரு இளம்விதவையின் கவர்ச்சி என்னை அலைக்கழித்ததால் நான் தனிமையான இடத்தை நாடித் தவித்துக் கொண்டிருந்தேன். அவள் அழகி! புத்திசாலியும் கூட! சரஸக்காரி! எல்லோருடனும் சரளமாகப் பழகுவாள், என்னேடும் கூடத்தான்! முதலில் என்னை ஊக்குவித்தாள். பின்னர் என்னைக் குரூரமாக வஞ்சித்துவிட்டு ஒரு அழகான பவேரிய பட்டாளத்து ஆபீஸரோடு ஓடிவிட்டாள். என் இதயத்திலே அவள் ஏற்படுத்திய புண் அவ்வளவு ஆழ மானது என்று கூறிவிட முடியாதுதான். இருப்பினும் என் எண்ணத்தில் ஏதோ ஒரு இருள் சூழ்ந்திருந்தது. நான் கொஞ்ச நாட்களுககுத் தனிமையிலேயே இருக்க விரும்பி னேன். —தனிமையில் இளமைக்கு ஒரு ஆறுதல்— எனவே 'ச' — நகரத்திலேயே ஒரு வீடு பிடித்திருந்தேன்.

இந்தச் சிற்றூரின் அமைப்பே எனக்குப் பிடித்திருந்தது. இரண்டு பெரிய மலைகளின் அடிவாரத்தில் அந்த ஊர் இருந்தது. உயர்ந்த சுவர்களும், பெரிய கோபுரங்களும் நீண்டநாளை எலும்மிச்சை மரங்களும் இருந்தன. கலகலப் பாக ஓடிக்கொண்டிருக்கும் களிப்புப்பொங்கும் ரைன் நதியின் மீது இருக்கும் உயர்ந்த பாலங்கள். அவை எல்லா வற்றையும்விட அங்கிருக்கும் அருமையான 'ஒயின்' எனக்கு அதிகம் பிடித்திருந்தது. அழகுபொருந்திய ஜெர் மானிய ஆரணங்குகள், அந்தக் குறுகளான தெருக்களிலே மந்தகாஸமான மாலை வேலைகளில் குறுக்கும் நெடுக்கும், நடை பழகிக்கொண்டிருப்பார்கள், அயலூர்க்காரர்களுக்கு மாலை வந்தனம் தெரிவித்தபடியே. பழைய காலத்துக் கட்ட

டங்களின் உயர்ந்த கூரைகளின் பில்ஞலிருந்து சந்திரன் உதயமாகி வானத்தின் மேல் விளிம்புக்கு வரும்பொழுது கூட சிலர் அந்த இடத்தை விட்டுப்போக மாட்டார்கள். அந்தமாதிரி நேரங்களில் அந்தச் சிறிய ஊரைச்சுற்றுவதில் எனக்குப் பரமானந்தம். வானத்திலிருந்து பூமிக்கு 'ஒளி வெள்ளம்' பாய்ந்துகொண்டிருக்கும். அந்த ஊர் பூராவும் அமைதியும் சாந்தமும் குடிகொண்டிருக்கும். பக்கத்தி லிருக்கும் அந்தக் கட்டடத்தின் உயர்ந்த விளிம்பிலேயுள்ள திசைகாட்டும் சேவல் மீது நிலவொளி பட்டு அதைப் பசும் பொன்ஞகப் பிரதிபலிக்கச் செய்யும். அதன் வர்ண ஜாலங்களைப் பக்கத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ரைன் நதியில் பார்த்துக்களிக்க முடியும். சிறிய வீடுகளிலேயுள்ள குறுகிய ஜன்னல்களுக்குள் அசைந்தாடி ஒளிவிட்டுக் கொண்டிருக்கும் மெழுகு வத்திகளைக் காணலாம்! ஜெர்மா னியர்கள் மிகவும் செட்டாக வாழ்பவர்களில்லையா? கொத்துக்கொத்தான திராட்சைக்கனிகள் அந்தக் கற்சுவர் களுக்கும் வெளியே தலைகாட்டிக் கொண்டிருக்கும். முக் கோண வடிவத்திலிருக்கும் அந்தச் சிற்றூரின் சதுக்கத்தின் மையத்திலுள்ள மிகப்பழைய கிணற்றின் நிழலில் ஏதோ அசைவது போல் தெரிந்தது. அரைத்தூக்கத்திலுள்ள நகர் காப்போனின் ஊதுகுழல் சப்தம் அந்த இரவின் அமைதி யைக் குலைத்ததுபோல் இருந்தது. எங்கிருந்தோ ஒரு நாய் மெதுவாகக் குரைத்தது. அங்குள்ளோர் முகங்களிலே தென்றல் தவழ்ந்துகொண்டிருந்தது. எலுமிச்சை மரங்களி லிருந்து வரும் இனிய நறுமணத்தை எல்லோரும் நன்ருக இழுத்துச் சுவாசித்துக் கொண்டிருந்தனர். ஒருவன் வாயிலி ருந்து 'கிரெட்சன்' என்ற வார்த்தை மெதுவாக வெளி வந்தது. அந்த வார்த்தையில் ஆச்சர்யமும் கேள்வியும் மறுகித்தொனித்தது.

ரைன் நதிக்கரையிலிருந்து ஓரிரு மைல்களுக்குள்ளி ருந்தது 'சா—நகரம்.' சலசலவென்ற இரைச்சலோடு

ஓடிக்கொண்டிருக்கும் ரைன் நதியைக் காண நான் அடிக்கடி செல்வதுண்டு. ரைன் நதிக்கரையிலுள்ள மிகப்பெரிய ஒற்றைப் பன்னீர் மரத்தடியில் கிடக்கும் கல் ஆசனத்தில் அமர்ந்துகொண்டு மணிக்கணக்காக, என்நெஞ்சத்தில் வந்து போன அந்த இளம் சலனபுத்தியுள்ள விதவையை நினைத்து உருகிக்கொண்டிருபபேன். வாள்களால் துளைக்கப்பட்டு ரத்தம் வடிந்துகொண்டிருக்கும் மார்போடுள்ள அழகிய, பால்வடியும் முகமுள்ள கன்னிமரியாளின் சிறிய உருவச் சிலை அந்த இலைகளினூடே பரிதாபகரமாக எட்டிப் பார்த்துக் கொண்டிருந்தது. அந்நதியின் எதிர்க்கரையில் நான் இருக்கும் ஊரைவிட கொஞ்சம் பெரிதான ‘ல — நகரம்’ இருக்கிறது. ஒரு நாள் எனக்கு மிகப்பிடித்தமான அந்தக் கல்லாஸனத்தில் உட்கார்ந்துகொண்டு, நதியையும் வானத்தையும், திராட்சைத் தோட்டத்தையும் மாறி மாறிப் பார்த்துக்கொண்டே இருந்தேன். பக்கத்தில் கோதுமை நிறத் தலைமுடியுடைய சில குழந்தைகள் அங்கு வந்த படகின் தார்பூசிய அடிபாகத்தைப் பிடித்திழுத்து அதைக் கரைக்குக் கொண்டுவந்து நிறுத்தினர். தோணிகள் வலிய துடுப்புப் பிரயோக மின்றியே தண்ணீர்போகும் போக்கில் மெதுவாக ஊர்ந்து கொண்டிருந்தன. ஆற்றில் பசுமையான அலைகளின்மீது ஒளிபட்டுச் சுழன்றுச் சுழன்று தண்ணீர் போய்க்கொண்டிருந்தது. திடீரென்று எங்கிருந்தோ எழுந்த சங்கீதத்தின் ஓசை என் காதுகளுக்குக் கேட்டது. அதை நான் மிகக் கவனமாகக் கேட்டேன். ‘ல —நகர’த்திலிருந்து வரும் ஒரு ஜெர்மானிய நடன சங்கீதம்தான். ஒரு வாத்தியம் விட்டு விட்டு ஓசை எழுப்பிக்கொண்டிருந்தது. வயலின் வெறுமையான சோக உணர்ச்சியைக் கொட்டிக் கொண்டிருந்தது. புள்ளாங்குழல் இன்ப ஊற்றை இறைத்துக்கொண்டிருந்தது.

வெல்வெட்டுச் சட்டையும், நீலமேஜோடும், நல்ல. பூட்ஸ்களையும் அணிந்துகொண்டு அப்பொழுது அந்தப்

பக்கம் வந்த ஒரு கிழவனை நோக்கி "அங்கு என்ன நடக்கிறது?" என்று கேட்டேன். தனது வாயிலிருந்த புகை பிடிக்கும் குழாயை ஒரு பக்கத்திலிருந்து இன்னொரு பக்கத்திற்குத் தள்ளிக்கொண்டே "ஓ அதுவா? 'ப—நகரி'லிருந்து, அங்கேதங்களது 'கோமர்ஸிசை' கூட்டுவதற்காக மாணவர்கள் வந்திருக்கிறார்கள்" என்றார்.

"அதைப்பார்க்க எனக்கு ரொம்ப விருப்பம்" என்று நான் எனக்குள்ளேயே சொல்லிக்கொண்டேன். நான் 'ல'—வுக்கும் இதுவரை சென்றதில்லை. உடனே படகுக்காரனைக் கூப்பிட்டேன். நதியைக்கடந்து அக்கரை சென்றேன்.

## 2

'கோமர்ஸ்' என்றால் என்ன என்று சிலருக்குத் தெரியாமலிருக்கலாம். ஒரு ஜில்லாவிலுள்ள அல்லது ஒரு மாகாணத்திலுள்ள எல்லா மாணவர்களும் ஓரிடத்தில்கூடி உயர்தரமான விருந்து சாப்பிடுவது. அது ஜெர்மானிய மாணவர்களுக்கிடையே இருந்துவரும் நீண்டநாளைய பழக்கம். ராணுவ உடைகளையும், உயர்ந்த குதியுள்ள பூட்ஸ்களையும், சிறிய குல்லாய்களையும், குறிப்பிட்ட நிறமுள்ள சின்னங்களையும் அணிந்திருப்பர், வழக்கமாகவே அந்த விருந்துகளையெல்லாம் ஒரு முதியவரின்—அனுபவஸ்தரின்—தலைமையில்தான் நடத்துவர். நீண்ட நேரம் விருந்து நடக்கும். இடையிலே குடிப்பார்கள்; பாடுவார்கள்; புகை பிடிப்பார்கள்; குதியாட்டம் போடுவார்கள். இடைஇடையே அங்குள்ள பழமைப்பித்தர்களைத் திட்டிக்கொண்டுமிருப்பார்கள். சில வேலைகளில் வாடகைக்குக்கூட அவர்கள் வாத்தியக்காரர்களை அமர்த்தி வாசிக்கச் சொல்வதுண்டு.

இப்படிப்பட்ட ஒரு கோமர்ஸ் 'ல—நகர'த்தில் 'சூரியன்' நிலைய'த்திற்கு முன்னுலுள்ள ஒரு பெரிய தோட்டத்தில் நடந்தது. அந்தத் தோட்டத்திலும், நிலையத்திலும் பெரிய கொடிகள் 'படபட'த்துப் பறந்து கொண்டிருந்தன. அடர்த்தியான எலுமிச்சை மரங்களுக்குக் கீழுள்ள மேஜைகளில் மாணவர்கள் அமர்ந்திருந்தனர். ஒரு மேஜையின் கீழே உயர்ந்த சாதி நாயொன்று உட்கார்ந்திருந்தது. வாத்தியக்காரர்கள் கொஞ்சம் தள்ளி அவர்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் இடத்திலே அமர்ந்து மெதுவாக வாசித்துக்கொண்டிருந்தனர். இடை இடையே கொஞ்சம் 'பீர்' சாப்பிடுவது அவர்களுக்கு உற்சாகத்தை யளித்துக்கொண்டிருந்தது. அந்தத்தோட்டத்திற்கு முன்னுலுள்ள தெருவிலெல்லாம் நிறைய ஜனங்கள் குழுமியிருந்தனர். புதிய விருந்தினர்களைப் பார்த்து ரஸிக்கும் இந்த அருமையான சந்தர்ப்பத்தை இழந்துவிட 'ல--நக'ரின் மக்கள் விரும்பவில்லைபோலும்! அந்தப் பார்வையாளர்களின் கூட்டத்திலே நானும் ஐக்யமானேன். அந்த மாணவர்களின் முகங்கள் எனக்கு உற்சாக மூட்டின. அவர்களின் பேச்சு அன்பு தவழும் பார்வை, இளமையின் மினுமினுப்பு, கலகலப்பான சிரிப்பொலி எனக்கு இன்பமூட்டின. ஆம் அவர்களின் சிரிப்பு! உலகத்திலேயே அதற்கு ஈடாக வேறு எதைத்தான் சொல்ல முடியும்.. அவர்களின் இனிய சுபாவங்கள் இவையெல்லாம் எனக்கு எல்லையில்லா இன்பமூட்டின. நானும் அவர்களிலே ஒருவனுக ஆகிவிடவேண்டும் என்றுகூட என் மனம் அடித்துக்கொண்டது.

" இன்னும் பார்த்து முடியவில்லைய்யா ஆஸ்யா" என்று ருஷ்ய பாஷையில் பேசும் ஒரு ஆண் குரல் என் பின்னுலிருந்து கேட்டது.

" இன்னும் கொஞ்ச நேரம் இருப்போமே" என்று ஒரு பெண் குரல் அதே பாஷையில் பதிலளித்தது.

நான் வேகமாகப் பின்னுக்குத் திரும்பினேன்......என் பார்வை தொளதொளப்பான ஒரு சட்டையும், ராணுவத் தொப்பியும் அணிந்திருந்த ஒரு வாலிபன் மீது பட்டது. அவன் ஒரு ஒல்லியான, சுமாரான உயரமுள்ள, வைக்கோல் தொப்பியால் ஏறத்தாழ முகத்தின் மேல் பாகத்தை மூடிக் கொண்டிருந்த ஒரு இளம் பெண்ணின் கையைப்பிடித் திருந்தான்.

“நீங்கள் ருஷ்யர்களா ?” என்வார்த்தை என்னையறியா மலேயே என் உதடுகளிலிருந்து வெளிவந்துவிட்டது.

“ஆம்” என்று சிரித்தபடியே சொன்னான் அந்த இளைஞன். “இப்படிப்பட்ட ஒரு ஊரின் மூலையில் ருஷ் யர்கள் இருப்பார்கள் என்று நான் எதிர்பார்க்கவே இல்லை” என்றேன்.

“நாங்களும் கூடத்தான்” அந்த இளைஞன் சொன்னான் இப்படி, “ஆனால் எல்லாம் நல்லதிற்குத்தான். நான் எங்களை அறிமுகப்படுத்துகிறேன். எனது பெயர் காகின். என் பக்கத்திலிருப்பது எனது...” அந்தப் பேச்சில் ஏனோ கொஞ்சம் தடங்கல் ஏற்பட்டது. “என்னுடைய தங்கை. அது சரி உங்கள் பெயரென்ன ?”

“நான் என் பெயரைச் சொன்னேன். பிறகு நாங்கள் ஒருவரோடொருவர் பேச ஆரம்பித்தோம். காகினும்கூட என்னைப்போலவே ஊர் சுற்றுவதில் பிரியமுள்ளவன். அப் படித்தான் இந்த ஊருக்கு ஒரு வாரத்திற்குமுன் வந்துசேர்ந் திருக்கிறான். உண்மையாகச் சொன்னால் வெளியூர்களில் ருஷ்யர்களோடு உறவு வைத்துக்கொள்ள எனக்கு அவ் வளவு விருப்பமில்லை. ஆனால் தூரத்திலிருந்தே அவர் களின் நடையுடை பாவனைகளைக் கவனித்தே அவர்கள் யார் என்று என்னால் சொல்லிவிட முடியும். எப்பொ ழுதுமே ஒரு மிதந்த மனோபாவத்தோடு கவலை யற்று

அதிகார தோரணையோடு எதைப்பற்றியும் அக்கரை இல்லாதவர்களாக இருப்பார்கள்; ஆனால் திடீரென்று ஜாக்கிரதையாகவும் எதையோ எதிர்பார்த்து இருப்பவர்களைப் போலவும் காணப்படுவர். அமைதியின்றி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் ஜாக்கிரதையோடு பார்ப்பர்; ஆனால் மறுபடியும் கம்பீரமாகக் கவலையற்றுப் பார்த்துக் கொண்டிருப்பர். என்னைப் பார்த்துக் கொண்டிருந்த காகின் என்னவோ நினைத்து வேறுபக்கம் திரும்பினான். "ஐயோ நான் ஒன்றும் முட்டாள்தனமாக செய்துவிடவில்லையே, என்னைப்பார்த்து அவர்கள் சிரிக்கிறார்களா, என்ன?" சில விநாடிகள் சென்றன. மீண்டும் நான் சுய நினைவுக்குவந்தேன். நான் பொதுவாக ருஷ்யர்களை ஒதுக்கினேன். ஆனால் காகின் மீது ஏனோ எனக்குப் பிரியம் ஏற்பட்டது. சில முகங்கள் பார்ப்பதற்கு அழகாகவும், அமைதியும் சாந்தியும் கோண்டதாயும், ஏதோ ஒருவித இதமளிப்பதாகவும் இருக்கின்றனவே, அந்த ரகத்தைச் சேர்ந்தது காகினுடைய முகம். சாந்தி தவழும் முகம், அகன்ற விசாலமான கண்கள். சுருண்ட அழகான கேசம். அவன் பேசுவதைக் கேட்டால், அவன் முகத்தையே பார்க்காவிட்டாலும்கூட அந்தப் குரலிலேயே புன்சிரிப்புப் புரள்வது தெரியும்.

தங்கை என்று அவன் கூறிக்கொண்ட அந்தப் பெண்ணை ஒருமுறைப் பார்த்தேன். மிகவும் அழகாக இருந்தாள். அந்த உருண்டையான வெண்பட்டு முகத்திலே, அந்தச்சிறிய எள்ளுப்பூ மூக்கிலே,குழந்தைக்கன்னங்களிலே, கருமையான ஒளிமிகுந்த கண்களிலே ஏதோ ஒரு தனித்த—பிரத்தியேகமான தேஜஸ் குடிகொண்டிருந்தது. அவள் உடற்கட்டு செதுக்கிவைத்த சிலை போல்தான் இருந்தது; எனினும் இன்னும் அவள் 'உரிய' வயதை அடையவில்லை என்றுதான் தோன்றிற்று. நிச்சயமாக அவன் அவளது அண்ணனைப்போல் இல்லை.

“எங்களுடன் எங்கள் வீட்டிற்கு வருகிறாயா?” என்று கேட்டான் காகின்.

“நாங்கள் எப்பொழுதும் ஜெர்மானியர்களையே பார்த்து அலுத்துவிட்டோம். நிச்சயமாக இந்த மாணவர்களெல்லாம் இன்னும் கொஞ்ச நேரத்திலே நாற்காலிகளால் அடித்துகொண்டு கண்ணாடிகளை யெல்லாம் உடைக்கப் போகிறார்கள். இதையெல்லாம் பார்க்க அவஸ்தையாக இருக்கும். வீட்டுக்குப் போகலாமா? நீ என்ன சொல்லுகிறாய், ஆஸ்யா?”

அந்தப் பெண் தலையை அசைத்தாள்.

காகின் சொன்னான். “நாங்கள் ஊருக்கு வெளியே வசிக்கிறோம். திராட்சைத் தோட்டத்திற்கு......

“திராட்சைத் தோட்டத்திற்கு நடுவே உயரமான இடத்தில் தனிமையாக அமைந்திருக்கிறது எங்கள் வீடு. பார்ப்பதற்கு மிக அழகாக இருக்கும். உனக்கு நிச்சயமாகப் பிடிக்கும். எங்களுக்காகப் பால்கூட வாங்கி வைத்திருக்கிறேன் என்று வீட்டுக்காரி கூறியிருக்கிறாள். சீக்கிரம் இருட்டிவிடப்போகிறது நீ ரைன் நதியைக் கடக்க வேண்டுமானால் நிலவு வந்ததற்குப் பின்னால் போகலாமே” என்றான் காகின்.

நாங்கள் நடந்தோம். அந்த ஊரின் குறுகலான வாசல் கதவுகளை கடந்து சென்றோம்—பெரிய பாறாங்கற்களாலான உயர்ந்த கோட்டைச் சுவர் இருந்தது, திறந்த வெளி வந்தது அந்தச் சுவரை யொட்டியே ஒரு நூறு கெஜதூரம் நடந்து சென்றோம், ஒரு சிறிய கதவு இருந்தது. காகின் அந்தக் கதவைத் திறந்து உயரமான பாதை வழியாக எங்களை அழைத்துச் சென்றான். பாதையில் இருமருங்கிலும் திராட்சைக்கொடி கொத்துக் கொத்தாகத் தொங்கிக்கொண்டிருந்தது. மேற்கிலிருந்த அந்த இரத்தச்சேறு பசுமையான

திராட்சைக் கொடியில்பட்டது. அந்தப்பூக்களின் மகரந் தத்தில், அந்த வரண்ட பூமியில்'கற்களால்,பதிக்கப்பட்டிருந்த பாதையோரத்தில், மலையுச்சியில் அந்தச் சிறிய வீட்டின் வெண்மையான சுவர்களில், வளைந்துநிற்கும் கருமையான தூண்களில், அதிலுள்ள அழகான ஜன்னல்களில் எல்லாம் அந்த மாலைச் சூரியனின் மங்கலான ஒளிபட்டுத் தெறித்து கொண்டிருந்தது.

"இதுதான் எங்களுடைய இடம்." காகின் கூறினன். "அதோ பால் கொண்டுவருகிருளே, அவள்தான் எங்கள் வீட்டுக்குச் சொந்தக்காரி. நாம் இப்பொழுது சாப்பிடுவோம். ஆனால் அதற்குள் உன்னைச் சுற்றிலுமுள்ள இடத்தைப் பாரேன். இந்தக்காட்சி உனக்குப் பிடித்திருக்கிறதா?"

"அந்தக்காட்சி உள்ளபடியே நன்ருகத்தான் இருந்தது. நாங்கள் இருந்த இடத்திற்குக் கீழே பசுமை நிறைந்த இரு கரைகளுக்கு மத்தியில் வெள்ளியை உருக்கிவிட்டாற்போல் ரைன் நதி ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் ஓரிடத்தில் மாலைக் கதிரவனின் பொன்னெளி பட்டதால் தங்கப்பாறைப் போல் ஜொலித்தது. ஆற்றின் கரையிலுள்ள அந்தச் சிறிய ஊரிலுள்ள சகல வீடுகளும் தெருக்களும் நன்ருகத் தெரிந் தன. எட்டுகிற தூரம்வரை பயிர்களாலும், மலைகளாலும் சூழப்பட்டிருந்தது. ஆனால் மேலே பார்ப்பது இன்னும் இனிமையாக இருந்தது. சலனமற்ற அந்த நீலவானத்தின் எல்லை, பார்க்குமிட மெல்லாம் பசுமையாகத்தோன்றும் அந்த சூழ்நிலை எனக்கு ரொம்பப் பிடித்திருந்தது, காற்று குளிர்ச்சி யாகவும், மென்மையாகவும் இருந்தது. உயரமான இடங்களி லே காற்றுகூட சற்று ஒய்யாரமாக உலவுமோ என்னவோ!

"தங்குவதற்கு அருமையான இடதைத்தேடி கண்டு பிடித்திருக்கிருய் நீ!" என்றேன் நான்.

"இந்த இடத்தைக் கண்டு பிடித்தது ஆஸ்யாதான்" என்ருன் காகின். "வா ஆஸ்யா. சாப்பாடு முதலிய

வற்றைக் கொண்டுவரச்சொல். நாம் இங்கேயே உட்காந்து சாப்பிடுவோம். நீ சங்கீதத்தைக் கூட நன்ருகக்கேட்க முடியும், உனக்கு கேட்கிறதா?'' என்று என்னைப் பார்த்துக் கேட்டான் காகின். "பக்கத்திலிருந்து கேட்பதற்கு அந்த நடன சங்கீதம் நன்ருகத்தான் இருக்கும். கொஞ்சம் தூர மாகப்போய் விட்டால் இடையே ஏற்படக்கூடிய மோசமான சப்தங்களும் சேர்ந்து நமது மஞேரம்மியமான உணர்ச்சி களை யெல்லாம் சிதறடித்துவிடுறது.''

ஆஸ்யா —அந்தப் பெண்ணின் பெயர் அன்ஞதான். எனினும் காகின் ஆஸ்யா என்றுதான் கூப்பிடுகிருன், நானும் கூட உங்கள் அனுமதியோடு அப்படியே கூப்பிடுகிறேன் — வீட்டுக்கார அம்மாளோடு உள்ளே போனுள். ஒரு கூஜா நிறைய பால், சர்க்கரை, பேரிக்காய்கள், ரொட்டி,கரண்டிகள் முதலியவைகளைத் தாங்கிய தட்டுகளோடு வந்தார்கள். நாங்கள் அனைவரும் உட்கார்ந்து சாப்பிட அரம்பித்தோம் ஆஸ்யா தலையில் அணிந்திருந்த தொப்பியைக் கழற்றினுள். அழகாக வாரிவிடப்பட்டிருந்த அவள் கூந்தல் காதுகளை மறைத்துக்கொண்டு கழுத்தைச் சுற்றித் துவண்டது. ஆரம் பத்தில் என்னைக்கண்டால் அவளுக்குக் கூச்சம் தான். எனி னும் காகின் அதையெல்லாம் போக்கடித்தான்.

"ஏன் இப்படி ஒருமாதிரியாகப் பார்க்கிருய் ஆஸ்யா? அவர் ஒன்றும் உன்னைக்கடித்து தின்றுவிடமாட்டார். ஆஸ்யா முறுவலித்தாள், கொஞ்ச நேரம் கழித்து அவளுக்கே சுபாவ மான பாணியில் என்னேடு பேச ஆரம்பித்தாள். அவளைப் போல் ஓய்வின்றி ஓடியாடிக்கொண்டிருக்கும் பிராணியை நான் பார்த்ததே இல்லை. கொஞ்ச நேரம்கூட அவள் சும்மா உட்கார்ந்திருப்பதில்லை. எழுந்து வீட்டுக்குள்ளே ஓடுவாள்; திரும்பியும் வெளியே வருவாள் தனக்குள்ளேயே பாட்டுப் படுவாள், வேடிக்கையாகச் சிரிப்பாள். எப்பொழுதோ நடந்த எதையோ நினைத்து அடிக்கடி சிரித்துக்கொண்டிருப்

பாள். அவளது விரிந்த பெரிய ஒளிபொருந்தியகண்கள் எதிரே கூர்மையாக எதையோ நோக்கும். அடிக்கடி ஏனோ அவளது கண் இமைகள் மூடித்திறக்கும். அவளது பார்வையிலே தெளிந்த அமைதியும், சாந்தமும் குடிகொண்டிருக்கும்.

நாங்கள் ஏறத்தாழ இரண்டு மணி நேரம் பேசிக்கொண்டிருந்திருப்போம், பொழுதுபோய் நீண்ட நேர மிருக்கும். மாலை மறைந்த கிழக்கு வானத்திலே சந்திரோதயதுக்கு முன்னிருக்கும் ஒரு செவ்வொளி படர்ந்திருந்தது. அதுவும் மறைந்து மெதுவாக வெளுத்து பின்னர் வானவிளிம்புக்கு நிலவு வந்தது. நாங்கள் பேசிக்கொண்டே இருந்தோம். எங்களைச் சுற்றி காற்று எப்படி அமைதியாவும் சாந்தமாகவும் வீசிக்கொண்டிருந்ததோ அவ்வளவு அமைதியாய் நாங்களும் பேசிக்கொண்டிருந்தோம். காகின் அனுப்பியிருந்த திராட்சை ரஸம் வந்தது. மெதுவாகச் சாப்பிட்டுக்கொண்டிருந்தோம். இப்பொழுதும் சங்கீதம் எங்களுக்குக் கேட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது ஏனோ இனிமையாவும் இருந்தது. நிலவொளி ஊரின் மீதும், நதியின்மீதும் காய்ந்துகொண்டிருந்து. ஆஸ்யா ஏனோ திடீரென்று சோர்வாகக் காணப்பட்டாள். அவள் சடைப்பின்னல் அவள் கண்களை மறைத்தது. அவள் கொஞ்சம் நேரம் மௌனமாக இருந்தாள். தான் தூங்கப்போவதாகச் சொல்லிவிட்டு வீட்டுக்குள் போய்விட்டாள். நான் அவளைப் பார்த்துக்கொண்டே இருந்தேன், அவள் அறைக்குள்ளே போய் மெழுகு வர்த்தியைக்கூட கொளுத்தாமல் மூடியிருந்த ஜன்னலுக்கருகிலேயே நின்று கொண்டிருந்தாள். கடைசியாக நிலவு வான உச்சிக்கு வந்தது, அதன் குளிர்ச்சி பொருந்திய ஒளி, ரைன்நதியோடு விளையாடிக் கொண்டிருந்தது. இப்பொழுது எல்லாமே வேறு விதமாகத் தெரிந்தன. சில புதிய ஒளி பெற்றன. சிலவற்றில் கருமை படர்ந்தது. எங்களிடம் உள்ள திராட்சைரசம் நிரம்

பிய கோப்பைகள் கூட ஏதே புதிதாகத் தேன்றின ! காற்று தனது இறக்கைகளை மடக்கிக்கொண்டு செத்துவிட்ட பற வையைப்போல் திடீரென்று விழுந்துவிட்டது பூமியிலிருந்து ஒரு மாதிரியான வெப்பம் கிளம்பியது.

"நான் வீட்டிற்குப் போகும்நேரம் வந்துவிட்டது. இன்னும் கொஞ்ச நேரம் போனல் என்னை அக்கரைக்குக் கொண்டு செல்ல படகுக்காரன் கிடைக்கமாட்டான்" என்றேன்.

"ஆம்; நேரம் அதிகம்தான் ஆகிவிட்டது" காகினும் சொன்னன். நாங்கள் மலையிலிருந்து கீழிறங்கி பாதை வழியே சென்ருேம். பின்னலிருந்து சிறிய கற்கள் உருண் டோடி வந்தன! திரும்பிப் பார்த்தோம், ஆஸ்யா எங்களுக் குப் பின்னே ஓடிவந்து கொண்டிருந்தாள்!

"நீ தூங்கிக்கொண்டிருக்கிருய் என்று நினைத்தேன்" என்ருன் காகின், ஆனல் அவள் நிற்காமல் ஒரு பதிலும் சொல்லாமல் ஓடினள். கீழே அந்த மாணவர்கள் இருந்த நிலையத்தின் விளக்கொளி மரங்களுக் கடியிலே பட்டது. மேலே நிலவு. அந்தக்காட்சி பார்ப்பதற்கு மனேரம்மியாக இருந்தது. ஆஸ்யா படகுக்காரனிடம் பேசிக் கொண்டிருந் தாள். நான் படகில் தாவி உட்கார்ந்து கொண்டு எனது புதிய நண்பர்களுக்கு வணக்கம் செலுத்தினேன். அடுத்த நாள் என்னைவந்து சந்திப்பதாகக் காகின் வாக்களித்தான். காகின் கையைப்பிடித்து அழுத்தமாகக் குலுக்கினேன். என் கையை ஆஸ்யாவிடம் நீட்டினேன். அவள் மெதுவாக என் னைப்பார்த்துத்தலையை யசைத்தாள். தண்ணீரின் ஓட்டத்திலே படகு வேகமாகப் போயிற்று நல்ல உடற்கட்டுடைய கிழட்டு படகுக்காரன் தன் சத்தி பூராவையும் திரட்டி கறுத்த தண்ணீ ரில் தன் படகைத் தள்ளிக் கொண்டிருந்தான்.

"நீ தண்மதியின் ஒளிக்கற்றையினூடே போய்க்கொண் டிருக்கிருய்" என்று கத்தினள் ஆஸ்யா. "வணக்கம்" என்று

மறுபடியும் கத்தினுள் ஆஸ்யா. "ஆம் நாளை வரை" என்ருன் காகின்.

படகு இக்கரையை வந்துசேர்ந்துவிட்டது நான் கீழிறங்கி பின்னுல் திரும்பிப்பார்த்தேன். அடுத்த கரையில் யாரும் இருப்பதாகத்தெரியவில்லை. நதியின் குறுக்கே பட்ட நிலவின் ஒளிக்கற்றை தங்கத்தால் பாலம் போட்டதுபோல் தோன்றிற்று. பழைய பாணியில் வாசிக்கப் பட்ட ஜர்மானிய நடன சங்கீதம் எனக்கு விடை கொடுப்பதுபோல் தோன்றிற்று. அந்த நறுமணமுள்ளகாற்றைச் சுவாசித்துக்கொண்டே,வயல் களினூடே புகுந்து எனது அறையைப்போயடைந்தேன். என்னுள்ளத்திலே ஒரு இனிமையான களைப்பும், நிறைவேருத ஒருவித ஆசையும் மண்டியிருந்தது. நான் சந்தோஷமாக இருந்தேன். ஆனுல் எதனுல் நான் இப்படி சந்தோஷப்படுகிறேன், எதனுல் ? என்று புரியவில்லை. நான் எதைப்பற்றியும் நினைக்கவில்லை......நான் சந்தோஷமாக இருந்தேன்.

நான் இரவு உடுப்புகளை அணிந்துகொண்டு படுக்கப் போனேன். என்னுள் ஒரு இனிமை யுணர்ச்சி நிரம்பி இருந்தது. கண்கள் மூடப்போகும் சமயத்தில்தான் எனக்கு நினைவு வந்தது. அன்று மாலை பூராவும் நான் அந்தக் குரூர உள்ளம் படைத்த அழகியை ஒருமுறைக்கூட நினைக்கவே இல்லை. "இதற்கு என்ன அர்த்தம் ?" என்று நான் என்னையே கேட்டுக்கொண்டேன். "அப்படியானுல் நான் காதல் வசப் பட்டுவிட்டேனு ?" இந்த எண்ணத்திலேயே தொட்டிலிலே படுத்துறங்கும் சிறு குழந்தையைப்போல உறங்கிவிட்டேன்.

# 3

அடுத்தநாள் காலை நான் கண்விழித்த பிறகும்கூட கட்டிலைவிட்டு எழுந்திருக்காமல் அப்படியேகிடந்தேன். என் ஜன்னல் கதவை யாரோ தட்டுவதுபோல் ஒரு சப்தம்

கேட்டது. அதன் பிறகு யாரோ கூப்பிடுவது போல் இருந்தது. ஆம், அது காகின் சப்தம்தான் என்று புரிந்து கெண்டேன்,

"இன்னும் நீ துங்கினுல், என் சித்தார் சத்தத்தால் உன்னை எழுப்பிடுவேன்" என்று பாடிக்கொண்டுவந்தான்.

வேகமாக எழுந்து கதவுகளைத் திறந்தேன் "காலை வந்தனம். நான் உன் தூக்கத்தைக் கலைத்து விட்டேனு ? இதோ இந்தக் காலையைப் பார்! எவ்வளவு ரம்மியமாக இருக்கின்றது. ஜிலு ஜிலு வென்று வீசும் காற்று ஒரு புதுமணத்தைக் கொடுக்கிறது. அங்கே பார் அந்தக் காலைக்குயில்கள் அற்புதமாக'கீதமிசைப்பதை..."

அவனது சுருண்ட வழவழப்பான கேசமும், திறந்த கழுத்தும் ரோஜாக்கன்னங்களும் காலை எப்படி நிர்மலமாக இருந்ததோ அங்ஙனமே அவனுமிருப்பதைக் காட்டின.

நான் உடுத்திக்கொண்டதற்குப் பிறகு நாங்கள் ஒரு தோட்டத்திற்குச் சென்ளேம். காபிகொண்டுவரச் சொல்லிக் குடித்துவிட்டுப் பேசிக் கொண்டிருந்தோம். காகின் தனது எதிர்காலத் திட்டங்களையெல்லாம் சொல்லிக் கொண்டிருந்தான், வாழ்க்கை நடத்துவதற்குள்ள வசதிகளெல்லாம் ஒழுங்காக இருப்பதால் தான் தனது நேரத்தைப் பூராவும் கலைக்காகவே அர்ப்ணித்துவிட வேண்டுமென்று துடித்துக் கொண்டிருப்பதாகக் கூறினுன். எனினும் நாட்கள் இவ்வவு வீணுகக் கழிந்துவிட்டனவே என்றுதான் வருத்தப் பாட்டான். நான் எனது திட்டங்களைச்சொன்னேன். அதோடு கூடவே எனது நிறைவேருத காதலைப்பற்றிய ரகசியத்தையும் செல்லி வைத்தேன். ஏனே எனது பேச்சு அதிகமாக அவனுடைய அனுதாபத்தைப் பெறவில்லை. தனது சாதுவான குணத்தின் காரணமாக ஏதோ கொஞ்சம் தலையசைத்து விட்டுத் தன்னேடுவந்து தன் வீட்டில் அவன் வரைந்துள்ள படங்களை வந்து பார்க்கக் கூப்பிட்டான். நானும் தடையின்றி ஒப்புக் கொண்டேன்.

அப்பொழுது ஆஸ்யார் வீட்டிலில்லை. அவள் எங்கேயோ பாழ் மண்டபங்களைப் பார்க்கப் போயிருக்கிறாள் என்று வீட்டுக்கார அம்மாள் சொன்னாள். 'ல-நகர'த்திற்கு ஒரு சில மைல்களுக்கப்பால் அந்தப் பாழடைந்து போன நிலப்பிரபுத்துவ மாளிகைகள் இருக்கின்றன. காகின் தனது பெட்டியைத்திறந்து காட்டினான். அவனது சித்திரங்களின் 'யதார்த்தம்' இருந்தது. ஒரு தனித்துவம் இருந்தது. ஆனால் ஒன்றுகூட பூரணமாக முடிக்கப்படவில்லை. அவைகளில் ஒருவித தளர்ச்சியும், கவலையீனமும் காணப்பட்டன. நான் அவைகளைப் பற்றி எப்படி நினைத்தேனோ அவற்றை அப்படியே காகினிடம் சொன்னேன்.

"ஆம், ஆம். அவை அப்படித்தான் இருக்கின்றன. அவை அரைகுறையாகவும் வளர்ச்சி பெறாமலும்தான் இருக்கின்றன, நான் என்ன செய்யட்டும்? அவற்றைப் பற்றித்தான் நான் இன்னும் ஒழுங்காகப் படிக்கவில்லையே. அதோடு கூட என்னிடம் ஒரு தளர்ந்த போக்கு வேறு இருக்கிறது. எதையாவது செய்ய வேண்டுமென்று நினைக்கும் பொழுது பெரிய மலைகளையேகூட கவிழ்த்து விடலாம் போல் தோன்றுகிறது. ஆனால் அதை நடை முறையில் கொண்டு வர வேண்டுமெனில் ஏதோ காரணமற்ற பலஹீனங்களெல்லாம் நம்முள் குடிபுகுந்து விடுகின்றனவே.

உற்சாகப்படுத்துகிற முறையில் ஏதாவது சொல்லலாம் என்று நினைத்தேன். ஆனால் அதற்குள் தன்கையால் ஏதோ சைகை காட்டினான். அங்கிருந்த படங்களை யெல்லாம் எடுத்து சோபாவின் மீது திணித்தான்.

"எனக்குப் போதுமான அளவுக்குப் பொறுமை யிருந்திருந்தால் நான் ஏதாவது உருப்படியாகச் செய்ய முடியும். இல்லாவிட்டால் நான் ஒன்றுக்கும் உருப்படாத முண்டமாகவே இருப்பேன்" என்று பற்களைக்கடித்துக்கொண்டு

பேசினுன். "சரிவா, நாம் ஆஸ்யாவைப் பார்க்கப் போக லாம்."

நாங்கள் வீட்டைவிட்டு வெளியே புறப்பட்டோம்.

# 4

சீரிந்துபோன சாம்ராஜ்யக் கோட்டைகளுக்குப் போகும் பாதை சருக்கலாக இருந்தது. குறுகலான மரங்கள் நிறைந்த பள்ளத்தாக்கைக் கடந்துதான் அதற்குச் செல்ல வேண்டும். அந்தப் பள்ளத்தாக்கின் கீழே வேகமாக போய்க்கொண்டிருக்கும் நீரோடை ஒன்றிருக்கிறது. மலை களையெல்லாம் தாண்டி வேகமாக ஓடி, அந்த மகாநதியோடு கலக்க வேண்டும் என்ற துடிதுடிப்பில் அது ஓடுவதுபோல் இருந்தது. சூரிய ஒளிபட்ட இடங்களெல்லாம் ஒரு தனி அழகு சொட்டிக்கொண்டிருந்தது. இதையெல்லாம் பார்க்கச் சொன்னுன் காகின். காகின் ஒரு பெரிய சித்திரக்காரனுக இல்லாமலிருக்கலாம். ஆனுல் அவன் ஒரு கலைஞன் என்பது அவன் வார்த்தைகளினுலேயே தெரிந்தது. குறிப் பிட்ட இடத்திற்குச் சீக்கிரமே வந்து விட்டோம். திறந்த மலை யின் உச்சியில் கறுத்த, அகலமான, இரண்டாகப்பிளவு பட்ட ஒரு கோபுரத்தின் சிகரம் தெரிந்தது. இரண்டு பக்கங்களிலும் பெரிய சுவர்கள் எழுப்பப்பட்டிருந்தன. அங்கேயும், இங்கேயும் உள்ள கற்கள் மீதுகொடிகள் படர்ந் திருந்தன. பழைய கொத்தளங்களிருந்தும், நொறுங்கிப் போன வளைவுகளிருந்தும் வாடிப்போன கோணல் மாணலான மரங்கள் தொங்கிக் கொண்டிருந்தன. கற்கள் நிறைந்த ஒரு பாதை அந்த வாசற்படிக்கு வழிகாட்டிற்று. அந்த வாசற்படி இன்னும் நன்ருகவே இருந்தது. நாங்கள் அங்கு நுழையப்போகும் சமயத்தில் அந்தக் கரடு முரடான

கருங்கற்களின் மீது வேகமாக ஓடி வரும் ஒரு பெண்ணுருவம் தெரிந்தது. அவள் திடீரென்று ஒரு முனையில்வந்துநின்றாள். இன்னும் கொஞ்சம் போயிருந்தால் அதலபாதாளம் தான். அவள் அதன் முனையில் நின்றாள்.

" ஏன், அது ஆஸ்யாதான். பைத்தியக்காரி," என்றான் காகின்.

நாங்கள் அந்த வாசல்கதவைக்கடந்து சென்றோம். பாழடைந்ததோட்டம். அங்கே நெருஞ்சி முட்களும், அத்திமரங்களும்தான் நின்றன. அந்த அலங்கத்தின் மீது நிற்பது ஆஸ்யா தான். எங்கள் பக்கம் பார்த்துச் சிரித்துக்கொண்டிருந்தாள். ஆனால் இருந்த இடத்தைவிட்டு அசையவே இல்லை. காகின் சைகைகாட்டி அவளைக்கூப்பிட்டான். அவள் அலட்சியப் போக்குக்கு நான் உரக்கத் திட்டிக்கொண்டிருந்தேன்.

" அவளைத்திட்டாதே. அவள் குணம் உனக்குத் தெரியாது. அவள் வேண்டுமென்றே கோபுரத்தின் உச்சிக்கே கூடப்போய்விடுவாள். சும்மா இருந்து இங்கிருப்பவர்களின் போக்கைப் பார்த்துக் கொண்டிருப்போம்" என்றான் காகின்.

நான் என்னைச்சுற்றிலும் பார்த்தேன். ஒரு மூலையில் மரத்தினாலான ஒரு சிறு வீட்டில் ஒரு கிழவி மேஜோடு பின்னிக்கொண்டே மூக்குக்கண்ணாடியின் வழியாக எங்களை உற்றுப்பார்த்துக் கொண்டிருந்தாள். அந்த இடத்தைச் சுற்றிப் பார்க்கிறவர்களுக்கு இஞ்சி ரொட்டியும் 'பீரும்' விற்றுக் கொண்டிருந்தாள். அங்கிருந்த ஒரு பலகையில் உட்கார்ந்து கொண்டு பெரிய பீங்கான் தம்ளரில் கொடுக்கப்பட்ட 'பீரை' குடித்துகொண்டிருந்தோம். ஆஸ்யா அசையாமல் அதே இடத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். கால்களைமடக்கி வைத்துக்கொண்டிருந்தாள். அவள் தலையைச் சுற்றி ஒரு 'ஸ்கார்ப்' கட்டியிருந்தாள். அவளது அழகுபொருந்திய உருவம் நிர்மலமான ஆகாயத்தினால் மேலும் அழகாகப்

பிரகாசித்தது. எனினும் அவளைப் பார்க்கும்பொழுது எனக்கு ஒருவிதமான வெறுப்புணர்ச்சிதான் மேலோங்கி இருந்தது. முந்திய நாளில் அவளைப்பார்த்தபொழுது ஏதோ அவளிடம் இயற்கையாக இல்லாத ஒருவித உறுதி யிருந்தது. தன்னைப்பற்றி எங்களுக்கு ஒருவித அப்பிரா யத்தை அவள்உண்டாக்க விரும்புகிருள்போல இருக்கிறது. ஏன் இப்படியெல்லாம் செய்கிருள்? என்ன குழந்தைத் தந் திரமிது? இப்படி அவளைப்பற்றி நான் எண்ணிக்கொண்டி ருக்கும்போது அவள் என்னை நன்ருக ஊடுருவிப்பார்த்தாள். பிறகு சிரித்தாள். பிறகு சுவரிலிருந்து இரண்டு தாவலில் குதித்து ஓடி வந்து அந்தக் கிழவியிடம் தண்ணீர் கேட்டாள்.

" நான் தாகத்திற்காக இவளிடம் தண்ணீர் கேட்கிறேன் என்று நினைக்கிருயா? இல்லை. அங்கே அந்தச் சுவரில் சில புஷ்பச் செடிகள் இருக்கின்றன. அவைகள் தண்ணீ ரின்றி வாடுகின்றன. அதற்குத்தான் கேட்கிறேன்." என்று அவள் தன் அண்ணனைப்பார்த்துச் சொன்ஞள்.

" காகின் அதைக்காதில் போட்டுக்கொள்ளவே இல்லை. தண்ணீர் நிறைந்த கண்ணுடித் தம்ளரைக் கையில் பிடித்துக் கொண்டு அந்தக் கோபுரத்தின் மேல் தட்டுக்கு ஓடினுள். இங்கேயும் அங்கேயும் கொஞ்சம் நின்றபடி அங்கு போய்க் குனிந்து ஓரிருதுளித் தண்ணீரை அதில் ஊற்றினுள். தண் ணீர் மின்னிற்று. அவளது அங்க அசைவுகள் அழகாக இருந்தன. அவள் மீது இன்னும் எனக்கு ஒருவித வெறுப் புத்தான். எனினும் அவளது சுறுசுறுபபையும் மிருதுத் தன்மையையும் என்னுல் போற்ருமல் இருக்க முடியவில்லை! ஒரு பயங்கரமான இடத்திலே வந்து நின்றுகொண்டு திடீ ரென கிரீச்சிட்டுக் கத்தினுள். பின் பலமாகச் சிரித்தாள். எனக்கு மேலும் அவள்மீது வெறுப்புத்தான் வந்தது.

" ஏன் இப்படி வெள்ளாடுமாதிரி மலைமீது ஓடுகிருய்?" என்று கேட்டாள் அந்தக் கிழவி.

எல்லாத்தண்ணீரையும் அந்தச்செடியில் கொட்டிவிட்டு நாங்கள் நின்ற இடத்திற்கு விளையாட்டுத்தனமாகவே இறங்கி ஓடிவந்தாள். அவள் புருவங்கள், மூக்கு, உதடுகள் எல்லாம் எங்களை ஏளனம் செய்வதுபோல் இருந்தன. அவளது கறுத்த விழிகள் பாதி தைரியத்தாலும், பாதி சந்தோஷத்தாலும் சுருங்கின. "எனது நடத்தை சரியில்லை என்று நினைக்கிறாய். இல்லையா? அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஆனால் நீ என்னை விரும்புகின்றாய் என்பது எனக்குத் தெரியும்" என்று சொல்வதுபோல் இருந்தது அவளது முகம்.

"உனது செய்கை நன்றாக இருந்தது" என்று கீழ் ஸ்தாயியில் சொன்னான் காகின்.

திடீரென தன் செய்கைக்கு வருந்துபவள்போல் காணப்பட்டாள். அவளது கண்கள் பூமியை நோக்கின. தன் குற்றத்தை உணர்ந்ததைப்போல் அமைதியாக வந்து எங்கள் பின்னே உட்கார்ந்தாள். இப்பொழுதுதான் நான் சரியாக அவள் முகத்தைப் பார்த்தேன். இப்படி கணத்துக்குக் கணம் மாறிக்கொண்டிருக்கும் கண்களை நான் பார்த்ததே இல்லை. சில நிமிடங்களில் அவள் முகம் வெறுப்பாக மாறியது. துக்கம் தோய்ந்த தோற்றத்தை அவள் முகம் பிரதிபலித்தது. அந்தப் பார்வை பெரிதாவும், திடமாகவும், அமைதியாகவும் எனக்குத் தோன்றிற்று. ஏதோ நிரந்தரமான அமைதியிலே ஆழ்ந்துவிட்டவள்போல் காணப்பட்டாள். நாங்கள் அந்த இடம் பூராவையும் சுற்றிப்பார்த்து ரசித்துக் கொண்டிருந்தோம். ஆஸ்யாவும் எங்கள் பின்னாடேயே வந்துகொண்டிருந்தாள். சாப்பாட்டு நேரம் வந்தது. அந்தக் கிழவியிடம் பணம் கொடுத்து காகின் இன்னுமொரு கோப்பை 'பீர்' வாங்கி என்பக்கம் திரும்பி "உனது எண்ணத்திலே இருக்கும் இதய ராணியின் நலத்துக்காக" என்று கூறினான்.

"அவருக்கு—உங்களுக்கு அப்படி ஒரு பெண் இருக்கிருளா?" என்று சடக்கென்று கேட்டாள் ஆஸ்யா.

"யாருக்குத்தான் இல்லை?" என்ருன் காகின்.

ஏதோ ஒரு கணம் ஆஸ்யா சிந்தித்தாள். அவள் முகம் மறுபடியும் மாறியது. கொஞ்சம் விறைப்பாகவும், ஏளனமாகவும் பார்த்தாள்.

வீட்டுக்கு வரும் வழியில் இன்னும் சப்தமாக 'கலாட்டா' செய்துகொண்டும், சிரித்துக்கொண்டும் வந்தாள். தன்னிடமுள்ள கைக்குட்டையைத் தலையைச்சுற்றிக் கட்டிக்கொண்டாள். ஒரு மரத்தின் பெரிய கிளையை ஒடித்து துப்பாக்கிப் பிடித்திருப்பதுபோல் தோளிலே சாய்த்துப் பிடித்துக்கொண்டு நடந்தாள், அழகும் கௌரவமும் பொருந்திய ஒரு ஆங்கில குடும்பத்தைச் சந்தித்தோம் என்ற நினைவிருக்கிறது. அங்கு வந்த அத்தனை பேரும் யாரோ உத்திரவிட்டதுபோல் ஆஸ்யாவையே உற்று நோக்கினர். ஆவள் அவர்களைக் கேலிசெய்வதுபோல் பாட ஆரம்பித்தாள். நாங்கள் வீடுபோய்ச் சேர்ந்ததும் ஆஸ்யா தன்னறைக்குள் போய்விட்டாள். சாப்பாடு எல்லோருக்கும் பரிமாறப்பட்டபொழுது தான் அவள் மறுபடியும் எங்கள்முன் தோன்றினாள். அழகான உடுப்பணிந்துகொண்டு, தலையை நன்ருக வாரிவிட்டுகொண்டு, கையுறைகளெல்லாம் அணிந்துகொண்டு வந்து உட்கார்ந்தாள். அமைதியாகவும், சம்பிரதாயப் பூர்வமாயும் அவள் மேஜை அருகில் உட்கார்ந்திருந்தாள். சாப்பாட்டைத் தொடவே இல்லை. தண்ணீர் தம்ளரை எடுத்துக்கொண்டு மெதுவாக உறிஞ்சிக்கொண்டிருந்தாள். நல்ல குடும்பத்திலே பிறந்து, நன்ருக வளர்க்கப்பட்ட ஒரு இளம் சீமாட்டியைப்போல் எனக்குக்காட்சியளிக்கவேண்டும் என்று அவள் விரும்புகிருள் என்பது நன்ருகவே தெரிந்தது. காகின் எதுவுமே சொல்லவில்லை. அவள் இஷ்டப்படியெல்லாம் இருக்க காகின் அவளை அனுமதிக்கிருன் என்பதுதெளிவாக

எனக்குப் புரிந்தது. எப்பொழுதோ ஒருமுறை தன் ஒரு தோளை குலுக்கிக்கொண்டு என்னைப் புன் சிரிப்போடு பார்ப்பான். "அவள் குழந்தை, அவளிடம் அன்பாயிரு" என்று சொல்வதுபோலிருந்தது அந்தப் பார்வை. சாப்பாடு முடிந்ததும் ஆஸ்யா எழுந்து கொஞ்ச நேரம் நின்ருள். தன்னுடைய தொப்பியை எடுத்து அணிந்துகொண்டே "திருமதி லூயி அம்மையார் வீட்டிற்குப்போய்வரட்டுமா?" என்று காகினிடம் அனுமதி கேட்டாள்.

"எப்பொழுதிருந்தம்மா என்னிடம் அனுமதி கேட்க ஆரம்பித்திருக்கிருய்?" வழக்கமான புன்சிரிப்போடுதான் காகின் கேட்டான். எனினும் அதல் அதிர்ச்சியடைந்ததின் சாயை படர்ந்திருந்தது. "எங்களுடன் இருப்பது உனக்கு அலுத்துவிட்டதோ?"

"நிச்சயமாக அப்படி இல்லை. அவளை இன்று பாக்க வருகின்றேன் என்று நேற்றே வாக்குக் கொடுத்துவிட்டேன். அதோடும்கூட நீங்களிருவருமே சந்தோஷமாகப் பேசிக் கொண்டிருக்கமுடியும், மிஸ்டர் "ந" அவர்கள் என்னைச் சுட்டிக்காட்டி, உனக்கு வேறு ஏதாவது விஷயங்களைச் சொல்லுவார்" என்று கூறி அவள் எங்களிடமிருந்து போய்விட்டாள்.

"லூயி அம்மையார், ஜெர்மன் நகரமொன்றின் பிரதான அதிகாரியாயிருந்த ஒருவரின் மனைவி. விதவை. நல்லவள்; ஆனுல் அறிவில்லாதவள்" என்று என்னைப் பாராமலேயே சொன்னுன் காகின் "அவளுக்கு ஆஸ்யாமீது ரொம்பப் பிரியம். தன்னைவிடத் தாழ்ந்தவர்களாக இருக்கும் ஜனங்களிடம் பழகுவதற்கு ஆஸ்யாவுக்கு விருப்பமதிகம். இப்படிப்பட்ட குணங்களே தாங்கள் உயர்ந்தவர்கள் என்ற பெருமையிலிருந்து வருவதுதான். செல்லம் கொடுத்த தனுல் அவள் கொஞ்சம் கெட்டுத்தான் இருக்கிருள். நீயும் பார்த்திருப்பாய் என்று கொஞ்ச நேரமௌனத்திற்குப் பிறகு

கூறினன். "ஆனல் அதற்காக என்ன செய்ய முடியும். என்னல் யாரிடமுமே கண்டிப்பாக இருக்கமுடிவதில்லை. அதிலும் அவள் விஷயத்தில் இன்னும் மோசம். நான் அவளிடம் அப்படி தாராளமாகத்தான் இருக்கவேண்டியிருக்கிறது."

நான் பதிலே சொல்லவில்லை. காகின் விஷயத்தை மாற்றினன். அவனைப்பார்க்க பார்க்க எனக்கு அவன்மீது விருப்பம்தான் ஏற்படுகிறது. நான் அவனைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்துவிட்டேன். சரியான ருஷ்யனின் குணதிசயங்கள் பூராவும் அவனுக்கிருந்தன. எப்பொழுதும் உண்மை பேசக்கூடியவன், நேர்மையானவன், ஸ்திரபுத்தியுள்ளவன். ஆனல் அவனிடம் கண்டிப்பே இருப்பதில்லை. வேகமும் உறுதியும் அவனுக்குக் கிடையவே கிடையாது. இன்னும் அவனிடம் வாலிபத்தின் பூரண முறுக்கு ஏறவில்லை. அழகும் புத்திசாலித்தனமும் நிறைய இருந்தது. அவன் வளர்ச்சியடைந்தால் எப்படிப்பட்டவனுக இருப்பான் என்பதை என்னல் நிர்ணயிக்க முடியவில்லை, உள்ளபடியே ஒரு கலைஞனுவான? கலைஞனுக வேண்டுமெனில் தொடர்ந்து சலியாது உழைக்கவேண்டும்.

"உழைப்பு. உன்னல் நிச்சயமாக முடியாது. நீ உழைக்கமாட்டாய்" என்று எனக்குள்ளே நினைத்தேன். எனினும் அவனைப்பார்க்கும் யாரும் அவனை விரும்பாமலிருக்க முடியாது. கொஞ்ச நேரம் சோபாவில் சாய்ந்து கொண்டும், கொஞ்ச நேரம் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டும் மூன்று நான்கு மணிநேரம் பேசிக்கொண்டுமிருந்தோம். இந்த நான்கு மணி நேரத்தில் நாங்கள் இருவரும் நெருங்கிய நண்பர்களாகி விட்டோம்.

சூரியன் மேற்கு வானத்தில் மறைந்துவிட்டான். நான் வீடுபோக வேண்டிய நேரமும் வந்துவிட்டது. ஆனல் ஆஸ்யா மட்டும் இன்னும் வந்துசேரவில்லை.

“ தான் நினைத்ததையெல்லாம் செய்யக்கூடியவள் ஆஸ்யா. நான் கொஞ்சதூரம் உன்னைக்கொண்டுவந்து விடுகிறேன். போகும்பொழுது லூயி அம்மையாரின் வீட்டையும் எட்டிப்பார்ப்போம். அங்கு ஆஸ்யா இருக்கிறாளா, இல்லையா என்று. அந்த வீடும்கூட அதிக தூரத்திலில்லை ” என்றான் காகின்.

கொஞ்சதூரம் போய், ஒரு குறுகலான சிறிய தெரு வழியாகத் திரும்பினோம். இரண்டு அகலமான ஜன்னல்களையுடைய நான்கு மாடி வீடு ஒன்று இருந்தது. இரண்டாவது மாடி,கீழ்க்கட்டடத்தின்மீது சாய்ந்து தெருப்பக்கத்தில் நீட்டிக்கொண்டிருந்தது. மூன்றாவது மாடியும் நான்காவது மாடியும் இரண்டாவது மாடிமீது சாய்ந்திருந்தன. கலகலத்துப் போயிருக்கும் கற்களும், மேல்மாடிகளைத் தாங்கிக்கொண்டிருக்கும் இரண்டு பெரிய தூண்களும், ஓடுகள் வேயப்பட்ட கூறையும், தெருமீது நீட்டிக்கொண்டிருந்து. அது, ஏதோ ஒரு ராட்ஸசப் பறவை தன் இறக்கைகளை எல்லாம் ஒடுக்கிப் படுத்திருப்பதைப்போன்றிருந்தது.

“ ஆஸ்யா. அங்கே இருக்கிறாயா?” என்று காகின் சப்தமாகக் கூப்பிட்டான். மூன்றாவது மாடியில் ஜன்னல் திறக்கும் சப்தம் கேட்டது. அந்த அறையின் வெளிச்சத்தில் ஆஸ்யாவின் சிறிய கறுத்த தலை தெரிந்தது. அவளுக்குப் பின்னாலிருந்து பற்களையெல்லாம் இழந்த, பார்வை மங்கிய ஒரு ஜெர்மானிய மூதாட்டி பார்த்துக்கொண்டிருந்தாள்.

“ நான் இங்கேதான் இருக்கிறேன் ” என்று தனது முழங்கையை ஜன்னலில் ஊன்றியபடியே கூறினாள் ஆஸ்யா. “ நான் சந்தோஷமாகத்தான் இருக்கின்றேன். இதோ இதைப்பிடித்துக்கொள் ” என்று ஒரு பூவை எடுத்து காகினிடம் எறிந்தாள். “ என்னை உன் மனத்தில் குடிகொண்ட மங்கை என்று எண்ணிக்கொள்.”

பின்னால் நின்ற லூயி சீமாட்டி சிரித்தாள்.

"'ந' வீட்டிற்குப் போகிறார். என்னிடம் விடைபெற்றுக் கொள்ளத்தான் வந்தார்" என்றான் காகின்.

"அப்படியா? அப்படியானால் அந்தப்பூவை அவரிடம் கொடுத்துவிடு. நான் சீக்கிரம் வந்துவிடுகிறேன்." என்று ஆஸ்யா பின்னுக்கிருந்த லூயிக்கு முத்தம் கொடுத்தாள். காகின் மௌனமாக அந்தப்பூவை என்னிடம் கொடுத்தான். நானும் மௌனமாகவே அதை வாங்கி எனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு வேகமாக சென்று நதியைக் கடந்து அக்கரை போய்ச்சேர்ந்தேன்.

நான் வீட்டிற்கு நடந்துகொண்டிருக்கும்பொழுது எந்த ஒரு பிரத்தியேக விஷயத்தைப்பற்றியும் நினைத்துக்கொண்டு போகவில்லை. ஆனால் ஏனோ என் மனத்தில் ஒரு புதிய பாரம் அழுத்துவதுபோல் இருந்தது என்பது மட்டும் நினைவிருக்கிறது. ஏதோ ஒரு வேகமான வாசனை என்னைப் பிடித்து நிறுத்தியதைப் போன்றிருந்தது. அந்த வாசனை எனக்குப் பழக்கமானதுதான் என்றாலும் ஜெர்மனியில் அந்நாற்றம் இருப்பது அரிது. நான் திடீரென்று கவனித்தேன். சாலைக் கருகில் கஞ்சாச்செடிகள் இருப்பது கண்டேன். வயல் வெளிகளிலிருந்து வந்த மணம் எனக்கு என் சொந்த நாட்டை ஞாபகப்படுத்தியது. சொந்த நாட்டிற்குப் போக வேண்டுமென்ற உணர்ச்சி என்னை உந்தித் தள்ளிற்று. நான் ருஷ்யக்காற்றைச் சுவாசிக்கவும் ருஷ்ய மண்ணில் நடக்கவும் விரும்பினேன். நான் இங்கு என்னதான் செய்துகொண்டிருக்கின்றேன்? ஏன் இந்தப் பழக்கமற்ற ஊரில் பழக்கமற்றவர்களோடு சுற்றிக்கொண்டிருக்க வேண்டும்?" என்று எண்ணினேன். என் நெஞ்சிலிருந்த பாரம் ஏதோ ஒருவித கசப்பான வெறியை உண்டாக்கியது. நான் வீடு வந்து சேரும்பொழுது எனது மன

நிலை நேற்றைய மன நிலையாக இல்லை. காரணமற்ற ஒரு கோப உணர்ச்சி நிரம்பியிருந்தது. கொஞ்ச நேரத்திற்கு என்னால் ஒன்றுமே செய்ய முடியவில்லை. என்னால் சமாளிக்க முடியாத அளவுக்கு ஒரு அலுப்பு உணர்ச்சியில் என்னை ஆழ்த்தியது. கடைசியாக நான் உட்கார்ந்து கொண்டு அந்தச் சலன புத்தியுள்ள இளம் விதவையைப் பற்றி நினைத்தேன். ஒவ்வொரு நாளும் நான் தூங்கப்போவதற்குமுன் அவள் நினைவுகள் தான் என்நெஞ்சில் நிறைந்திருக்கும். அவளது கடிதங்களிலொன்றை எடுத்தேன். அதைப் பிரிக்கக்கூட இல்லை. என் எண்ணம் எங்கேயோ தாவியது. நான்......ஆஸ்யாவைப்பற்றி நினைக்க ஆரம்பித்தேன். நான் காகினிடம் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஏதோ பேச்சுவாக்கில் அவன், தான் ருஷ்யாவுக்குப் போக முடியாமலிருப்பதற்குரிய தடைகளைப்பற்றி ஏதோ சொன்னது என் நினைவுக்கு வந்தது. "உண்மையிலேயே ஆஸ்யா அவன் தங்கைதானா?" என்று உறக்கக்கத்திவிட்டேன்.

நான் எனது உடுப்புகளையெல்லாம் களைந்துவிட்டு தூங்குவதற்காகப் படுக்கையில் சாய்ந்தேன். ஆனால் ஒரு மணி நேரம் கழித்து எழுந்து என் முழங்கைகளைததலையணையில் ஊன்றிக்கொணடு உட்கார்ந்து "பலமாக சிரிக்கும் அந்த சலன உள்ளம் கொண்ட சிறு பெண்ணைப்பற்றி சிந்திக்கத் தொடங்கிவிட்டேன்.

"பர்னேசினா என்ற இடத்திலுள்ள மண்டபத்துச் சித்திரங்களில் காண்கிற ரபேல் கலாத்தியா என்கிற பெண்ணின் உருவத்தைப்போல அவளிருக்கிறாள்..... ......என்று முணுமுணுத்தேன்......அவள் அவன் தங்கையாக இருக்க முடியாது.

நிலவொளியிலே அந்த விதவையின் கடிதம் வெண்மையாக, கீழே, தரையிலே விழுந்து கிடந்தது.

# 5

அடுத்தநாள் காலை நான் நதியைக் கடந்து மறுபடியும் 'ல'—நகரத்துக்குப் போனேன். காகினைப் பார்க்கத்தான் அங்கு போகிறேன் என்று எனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாலும்கூட ஆஸ்யாவைப் பார்க்கவேண்டும், அவள் நடவடிக்கைகளையெல்லாம் கவனிக்கவேண்டும் என்ற எண்ணம்தான் என்னை அங்கே கொண்டு சென்றது என் பதை என் இதயம் சொல்லிற்று. நான் அங்கு சென்ற போது இருவருமே அங்கு உட்கார்ந்திருந்தனர். முதல் நாளிரவு பூராவும் நான் ருஷ்யாவைப்பற்றி நினைத்துக் கொண்டிருந்ததாலோ என்னவோ, ஆஸ்யா என் பார் வைக்கு ருஷ்ய நாட்டிலுள்ள ஒரு சரியான குடும்பப் பெண்ணாக காட்சியளித்தாள். ஒரு பழைய கவுனைப் போட்டுக்கொண்டு, நன்றாகத் தலையை வாரிக்கொண்டு, ஜன்னலருகில் உட்கார்ந்து பின்னல் வேலை செய்துகொண் டிருந்தாள். அதைப் பார்க்கும்பொழுது அவள் வாழ்நாள் பூராவுமே பின்னல் வேலையைத்தவிர வேறெதையும் செய் திருக்க மாட்டாள் என்று தோன்றிற்று. அவ்வளவு அமைதி யாகவும், நிதானமாகவும் பின்னிக்கொண்டிருந்தாள். அவள் சில வார்த்தைகள் பேசிய போதிலும்கூட அவள் கவனம் பூராவும் வேலையிலேயே இருந்தது. அவளது பேச்சும் நடவடிக்கையும் எனக்கு எங்கள் கிராமத்திலுள்ள 'காத் தியா'க்களையும், 'மாஷா'க்களையும் நினைவுபடுத்திற்று. எனது எண்ணத்தை உறுதிப்படுத்துவதைப்போலவே "தாயே என்னருமைத்தாயே" என்ற பாட்டை அவள் முணு

முணுத்துக்கொண்டிருந்தாள். வெளிறிப்போன, உற்சாகம் குன்றிய அவள் முகத்தைப் பார்த்தேன். முந்தியநாளிரவு நான் கண்ட கனவுகள் மனத்திரையிலே எழும்பி அடங்கியது. ஏனே காரணம் தெரியாத ஒரு வருத்தம் ஏற்பட்டது. அந்த நாள் மகிழ்ச்சியளிக்கும் நாளாகத்தான் இருந்தது. "நான் படம் வரைவதற்குப் போகிறேன்" என்ருன் காகின். "நானும்கூட வரலாமா? அல்லது என் வருகை உனக்கு இடைஞ்சலாக இருக்குமா?" என்று கேட்டேன் நான்.

"நிச்சயமாக வரலாம். எனக்கு யோசனைகள் கூட உன்னுல் தர முடியும்" என்ருன் காகின்.

வட்டமான ஒரு தொப்பியையும், தளர்ந்த ஒரு சட்டையையும் போட்டுக்கொண்டு தோல் பையைக் கக்கத்திலே இடுக்கிக்கொண்டு காகின் கிளப்பினுன். நானும் பின் தொடர்ந்தேன். அப்பொழுதும் ஆஸ்யா அங்கேயே உட்கார்ந்திருந்தாள். அடுப்பிலிருக்கும் 'சூப்'பை சரியான பக்குவத்தில் இறக்கவேண்டும் என்று காகின் அவளிடம் சொன்னுன், அவளும் அதைக் கவனித்துக்கொள்வதாகப் பதிலளித்தாள். இப்பொழுது எனக்கும் பழக்கமான அந்தப் பள்ளத்தாக்குக்குப் போய் அங்குள்ள ஒரு பெரிய கல்லின் மீது உட்கார்ந்துகொண்டு தனது உபகரணங்களையெல்லாம் எடுத்து, கிளைகளும், இலைகளும் கொண்ட ஒரு தேக்குமரம் வரைந்துகொண்டிருந்தான். நான் பையிலிருந்த ஒரு புத்தகத்தை விரித்துக்கொண்டு பக்கத்திலிருந்த புல் வெளியிலே படுத்தேன். நான் இரண்டு பக்கங்கள்கூட படித்து முடியவில்லை. பக்கத்திலுள்ள காகினைப் பார்த்தேன். படம் வரைதல் என்ற பெயரில் காகிதத்தைக் கெடுத்துக்கொண்டிருந்தான்! நாங்கள் பெரும் பகுதி நேரம் பேசிக்கொண்டு தான் இருந்தோம். படம் வரைவது எப்படி, அதற்கு எந்த முறையைப் பின்பற்றுவது, அந்தக் காலகட்டத்தில் அதை எழுதும் ஓவியர்களுக்கு இருந்த முக்யத்வம் என்ன என்

பதைப்பற்றியெல்லாம் விவாதித்தோம். தான் அன்று எழுதக்கூடிய மனேநிலையில் இல்லை என்று சொல்லி காகினும் என் பக்கத்திலே வந்து படுத்தான். கடந்த காலத்தில் நடந்துபோன எத்தனையோ இளமை மாருத செய்திகளை மனம்விட்டுப் பேசிக்கொண்டிருந்தோம். அந்தப் பேச்சில் என்னென்னவோ விஷயங்கள் அடிபட்டன. பேச்சு உற்சாகமுள்ளதாயும், சிந்தனையில் ஆழ்த்துவதாயும், வேறு சில சமயம் உணர்ச்சிப் பெருக்கில் மெய்மறக்கச் செய்யும் படியாகவும் இருந்தது. அந்த விவாதம் விவேகமுள்ள தாகவும் விஷயத்தை ஆழ்ந்தறியும் விதத்திலும் இருந்த தென்றே எனக்குத் தோன்றியது. இப்படிப்பட்ட விவாதம் ருஷ்யனுக்கு மிகவும் பிடித்தமானதாயிற்றே. மனம் திருப்தியுறும்வரை அரட்டை யடித்ததால் எதையோ சாதித்ததைப்போல் ஒரு எண்ணம். மனம் நிறைந்த உணர்ச்சியோடு வீடு திரும்பினேம். நாங்கள் சென்றபொழுது எங்கு, எப்படி யிருந்தாளோ, அங்கேயே, அப்படியே ஆஸ்யா உட்கார்ந்திருந்தாள். நான் அவளை நன்ருகக் கவனித்தேன். விளையாட்டுத்தனமோ, துடுக்குத்தனமோ அவளிடம் இல்லை. அவள் வேண்டுமென்றே இப்படி நடிக்கிருள் என்று யாரும் சொல்லவும் முடியாது.

" தான் செய்த பாவங்களுக்காக வருந்திக்கொண்டிருக்கிருள் " என்ருன் காகின். இயற்கையாகவே பலமுறை கொட்டாவி விட்டாள். வேலை முடிந்ததும் தன்னறைக்கு எழுந்து போய்விட்டாள். நான் சீக்கிரமே காகினிடம் விடை பெற்றுக்கொண்டு வீடு திரும்பினேன். நான் கனவுலகத்தில் சஞ்சரிக்கவில்லை. அந்தநாள் எத்தனையோவிதமான அமைதியான உணர்ச்சிகளை, சிந்தனை அலைகளை என்னுள்ளே உருவாக்கி யிருந்தது. நான் படுக்கப் போகும் பொழுது எப்படியோ மீண்டும் அவளைப்பற்றிய நினைவு வந்தது. " அந்தப் பெண் ஒரு பச்சோந்திதான், எத்தனை

விதமாக நடந்துகொள்கிருள். அவள் நிச்சயமாக அவன் சகோதரியாக இருக்க முடியாது'' என்று என்னையறியா மலே வாய்விட்டுச் சொல்லிவிட்டேன்.

# 6

நான் தினசரி காகின் வீட்டிற்கு போய் வந்துகொண் டிருந்தேன். இப்படியே இரண்டு வாரங்கள் கழிந்தன. ஆஸ்யா என்னிடமிருந்து ஒதுங்கியே நடப்பதாக தோன் றிற்று. நான் அவளைச் சந்தித்த முதல் இரண்டு நாட்களில் அவள் பழகிய விதத்திற்கும் இப்பொழுதையப் போக்குக்கும் நிறைய வித்தியாசங்கள் இருந்தன. முன்னைப்போல் இப் பொழுதெல்லாம் அவளிடம் சலனங்கள்—அடிக்கடி ஏற் படும் மாற்றங்கள்—தென்படுவதில்லை. அவள் ஏதோ தனிமையிலே வருந்துவதாகவோ, மனம் கலங்குபவளைப் போலவோ காணப்பட்டாள். நான் அவளை உன்னிப்பாகக் கவனித்து வந்தேன். இப்பொழுதெல்லாம் அவள் அதிக மாகச் சிரிப்பதுகூட இல்லை.

அவள் பிரெஞ்சு மொழியும், ஜெர்மனிய மொழியும் வெகு நன்ருகப் பேசினுள். அவளுக்கிருந்த பழக்க வழக் கங்கள் நூதனமாக இருந்தன. அவள் படித்திருந்த கல்வி புதிய வகையானது; காகின் பெற்ற கல்விக்கு முற்றிலும் வேறுபட்டதாக இருந்தது. அவளைப் பூரணமாகக் கவனித் தால் அவள் பெண்கள் பராமரிப்பில் இருந்தவளல்ல என்பது நன்ருகத் தெரியும். அந்த வட்டத் தொப்பியும், ஒவியர்களணியும் தளர்ந்த சட்டையும் அணிந்திருந்தாலும் கூட காகின் செல்லமாக வளர்க்கப்பட்ட ஒரு ருஷ்ய கனவானைப்போல்தான் இருந்தாள். ஆனுல் ஆஸ்யா அப் படி ஒரு இளம் சீமாட்டிமாதிரி கொஞ்சம்கூட தோன்ற

வில்லை. அவள் படபடப்போடு ஏதாவது செய்துகொண்டே இருந்தாள். அவள் காட்டு ரோஜாச் செடியைப்போலவே வளர்ந்திருந்தாள். பக்குவமாகப் பராமரித்து அழகாக வெட்டிவிடப்பட்ட செடியைப்போல் தோன்றவில்லை. இன்னும் பொங்கி நுரை தள்ளிக்கொண்டிருக்கும் 'ஒயினு'கவே இருந்தாள். இயற்கையிலேயே அவள் வெட்கப்படும் சுபாவமுள்ளவள்,பயந்த சுபாவமுள்ளவள். தன் நாணத்தை வெறுத்தாள். அதைப் போக்கி தான் தைரியமுள்ளவளாக சுயேச்சை எண்ணமுள்ளவளாக இருக்க முயன்ருள். ஆனுல் அந்த முயற்சிகள் பயனளிக்கவில்லை. அவள் எங்ஙனம் ருஷ்யாவிலிருந்தாள், அவளது பழைய வாழ்க்கை எப்படி இருந்தது ? என்றெல்லாம் நான் பலமுறை அவளிடம் கேட்டேன். ஆனுல் வேண்டா வெறுப்புடன்தான் அவற்றிற்கெல்லாம் பதிலளித்தாள். இருப்பினும் அவள் வெளி நாடுகள் செல்வதற்குமுன் பல ஆண்டுகள் கிராமப்புரத்திலேதான் வாழ்ந்திருக்கிருள் என்பதை யறிந்தேன். ஒரு நாள் அவள் தனியாக உட்கார்ந்து ஏதோ ஒரு புத்தகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தாள். கைகளால் தலையைத் தாங்கிக் கொண்டிருந்தாள். அவள் கை விரல்கள் கூந்தலுக்குள் இருந்தன. அவள் படிப்பதிலேயே பூரணமாக லயித்திருந்தாள். நான் அவளருகே சென்று "பேஷ் நீ எவ்வளவு சுறுசுறுப்பா யிருக்கிருய்!" என்றேன். அவள் தன் தலையை உயர்த்தி என்னை உற்றுப் பார்த்தாள்.

"எனக்குச் சிரிப்பதைத்தவிர வேருென்றும் தெரியாது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?" என்று கேட்டுவிட்டு எங்கோ போக எத்தனித்தாள்,

நான் அவள் புத்தகத்தின் தலைப்பைப் பார்த்தேன் அது ஏதோ ஒரு பிரெஞ்சு நாவல்.

"நீ படிப்பதற்கு இந்தப் புத்தகத்தைப் பொறுக்கியதை நான் பாராட்ட முடியாது என்று அஞ்சுகிறேன்."

"வேறு எதைத்தான் நான் படிப்பது?" என்று சொல்லிக்கொண்டே கையிலிருந்த புத்தகத்தை மேஜைமீது வீசி எறிந்தாள். "நான் வெளியே போயாவது கொஞ்ச நேரம் விளையாடுகிறேன்" என்று கூறிக்கொண்டே தோட்டத்துக்கு ஓடினாள்.

அன்று மாலை நான் காகினிடம் "ஹெர்மானும் தோரதியும்" என்ற புத்தகத்தைப் படித்துக் காண்பித்துக்கொண்டிருந்தேன். ஆஸ்யா முதலில் அசட்டையாகப் போனாள். பின் கொஞ்சநேரம் கழித்து என்னருகே உட்கார்ந்து நான் படித்துக்கொண்டிருப்பதை முடியும்வரை மிகக் கவனமாகக் கேட்டுக்கொண்டிருந்தாள். அடுத்தநாள் காலை நான் அங்கு வந்தபொழுது அவள் ஏன் அப்படி இருக்கிறாள் என்பதைப் புரிந்துகொள்ள முடியவில்லை. பின்னர்தான் நான் நேற்றுப் படித்த கதையிலுள்ள குடும்பப்பெண் 'தோரதி' மாதிரி இருக்க முடிவு செயதுவிட்டாள் என்று தோன்றிற்று. ஒரு வார்த்தையில் சொல்லவேண்டுமெனில் அவள் எனக்கு ஒரு 'புதிராக'வே இருந்தாள். அவள் மிக நுண்ணிய சுபாவமுள்ளவள். எதைச் சொன்னாலும் 'சுருக்'கென எடுத்துக்கொள்வாள். எனக்கு கோபம் வந்தாலும்கூட அவள் என்னைக் கவரவே செய்தாள். போகப் போக எனக்கு ஒரு விஷயம் மட்டும் தெளிவாகத் தெரிந்தது. "அவள் அவன் சகோதரியாக இருக்க முடியாது. அவன் சகோதரனைப்போல் அவளைப் பார்ப்பதில்லை. மிகப் பிரியமாக அவளிடம் பழகினான். கொஞ்சம் அதிகமாகவே செல்லம் கொடுத்ததைப்போல் இருந்தது. எனினும் அதேசமயத்தில் அவளுடன் இருப்பதில் அவனுக்கு கொஞ்சம் சிரமம் இருப்பதாகவும் தோன்றிற்று!

எனது சந்தேகத்தை உறுதிப்படுத்தும் வகையில் ஒரு நாள் ஒரு வேடிக்கையான சம்பவம் நடந்தது.

3

அப்பொழுது மாலை நேரம். நான் காகின் வசித்துக் கொண்டிருந்த திராட்சைத் தோட்டத்துப் பக்கம் வந்தேன். கதவு பூட்டப்பட்டிருந்தது. சுவரில் ஏறிப் போகக்கூடிய அளவுக்கு ஒரு பாதை யிருந்ததால் நான் அதைத் தாண்டி அந்தப்பக்கம் போனேன். அதற்கருகில் கொடிகள் படர்ந் திருந்த பல வளைவுகள் இருந்தன. அதைத் தாண்டிப் போக எத்தனித்தசமயம் ஏதோ பேச்சுக்குரல் கேட்டது. ஆஸ்யா ஏதோ அழுகையோடும் ஆத்திரத்தோடும் பேசிக் கொண்டிருந்தாள்.

"நான் உன்னைத்தவிர வேறு யாரையும் நேசிக்கவில்லை. இல்லை; முடியாது. நான் உன்னைத்தான் விரும்புகிறேன். எப்பொழுதுமே நான் உன்னைத்தான் நேசிப்பேன்,"

"அமைதி ஆஸ்யா அமைதி. சாந்தமாகப் பேசு. நான் உன்னை நம்புகிறேன் என்பது உனக்குத் தெரியும். இல்லையா?" காகின் சொன்னான் இப்படி.

அந்தச் செடிகளின் மறைவிலிருந்து அவர்கள் சப்தம் வந்தது. நடுவே தெரியும் இடைவெளியில் நான் அவர் களைப் பார்த்தேன். ஆனால் அவர்கள் என்னைக் கவனிக்க வில்லை.

"உன்னைத்தான். உன்னை மட்டும்தான்" என்று ஆஸ்யா கத்திக்கொண்டே அவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டே தேம்பினாள். அவனை இறுக்கமாகக் கட்டிப் பிடித்து முத்தமிட்டாள்.

"அதோ, அங்கே பார்" என்று சொல்லிக்கொண்டே காகின் அவள் தலைக்குமேல் கையைக் காட்டிக்கொண் டிருந்தான்.

நான் சில விநாடிகள் அசைவற்றுப் போனேன், அங்கே அவர்களிடம் போ? இல்லை. மாட்டேன். இந்த உலகத்

தையே கொடுத்தாலும்கூட போகமாட்டேன் என்ற எண்ணம் என் மனதிலேற்பட்டது. நான் திரும்பி வேகமாக நடந்து சுவரருகே வந்தேன். ஒரு தகவல். நான் என் வீட்டிற்கு அனேகமாக ஓடியே வந்திருப்பேன். என் கைகளைத் தேய்த்தபடியே சிரித்துக்கொண்டேன். நான் நினைத்தபடியே நடந்துவிட்டது. அவர்களின் நன்னடத்தையைப்பற்றி சந்தேகிக்கவில்லை. எனினும் என் உள்ளத்தில் ஏதோ ஒரு கசப்பான உணர்ச்சி ஏற்பட்டது. அவர்களின் நடவடிக்கை அவர்களுக்கே தெரியும். ஆனால் ஏன்? ஏன் என்னை முட்டாளாக்கப் பார்க்கிறார்கள்? நான் இப்படிப்பட்டதை அவனிடமிருந்து எதிர்பார்க்கவில்லை......எனினும் அவர்கள் பரஸ்பரம் காதலை வெளிப்படுத்திக்கொண்ட காட்சி எவ்வளவு உருக்கமாக இருந்தது.

# 7

அன்றிரவு பூராவும் எனக்கு நல்ல தூக்கமில்லை. மறுநாள் காலை எழுந்திருந்து வெளியே புறப்பட்டேன். அன்று மாலைதான் வீட்டிற்கு வருவேன் என்று எனது வீட்டுக்காரியிடம் சொல்லிவிட்டு வெளியே போனேன். 'ச—' நகரம் நதிக்கரையில் இருக்கிறது. அதன் வழியாகவே அங்குள்ள மலைகளின்மீது ஏறிப்போனேன். அங்குள்ள மலையின் அந்தப் பகுதியை 'நாயின் முதுகு' என்று கூறுகிறார்கள். பூகர்ப்ப சாஸ்திரிகளின் கண்ணோட்டத்தில் பார்த்தால் அந்த இடம் ஒரு அருமையான இடம். அங்கே சுத்தமாகவும், ஒழுங்காகவும் அமைந்திருக்கும் ஒருவித மேகவர்ணக் கல் வரிசைகள் பார்ப்பதற்கு மிக நன்றாக இருக்கும். எனினும் எனக்கு 'பூகர்ப்ப சாஸ்திரம்' அவ்வளவு விருப்பமானதல்ல. என்னுள்ளே என்ன நிகழ்ந்து கொண்டிருக்கிறது என்பதே எனக்கு விளங்கவில்லை.

ஆனால் இனிமேல் காகினைப் பார்க்கவேண்டும் என்ற எண்ணம் அடியோடு போயிற்று. எனது ஆத்திரமெல்லாம் அவர்களது போலி நடிப்பைப்பற்றித்தான். மற்ற விஷயங்களையுங்கூட அசட்டையாக விட்டுவிடலாம். ஆனால் அண்ணன் தங்கை என்று ஏன் அவர்கள் என்னிடம் புளுக வேண்டும்? மனம் வந்தபடியெல்லாம் காட்டிலும் மேட்டிலும் சுற்றித் திரிந்தேன். ஓய்வு தேவை என்ற எண்ண மேற்பட்டால் சத்திரங்களிலும் சாவடிகளிலும் தங்கினேன். அங்குள்ள புதிய புதிய விருந்தாளிகளுடன் நிம்மதியாகப் பேசிக்கொண்டிருந்தேன். இல்லையானால் திறந்த வெளியிலே படுத்துக்கொண்டு வானத்தில் நடக்கும் வர்ண ஜாலங்களைப் பார்த்துக்கொண்டிருப்பேன். இப்படி மூன்று நாட்கள் மனநிம்மதியின்றி அலைந்துகொண்டே இருந்தேன், எனினும் அடிக்கடி ஏனோ என் மனதில் ஒரு வாதனை இருந்து கொண்டே இருந்தது. அந்த அமைதியான இயற்கைக் காட்சிகள் தளர்வுற்றிருந்த என் மனத்திற்கு திருப்தி யளித்தன.

அந்த மூன்று நாட்களிலும் என் எண்ணத்தில் எத்தனை எத்தனையோ வித உணர்ச்சிகள் வந்துபோயின, அங்கு பார்த்த ஒவ்வொரு காட்சியையும் நன்றாக அனுபவித்தேன். மரப்பிசின்களிலிருந்து வருகிற ஒருவித வாசனை, மரம் வெட்டுபவர்களின் கோடரி சப்தம், கூச்சல், அந்த தெளிந்த நீரின் அமைதியான ஓட்டம், கரையோரத்திலே வந்து தலைதூக்கும் மீன்கள், மங்கலான மலைச்சிகரங்கள், அழகான கிராமங்கள், புராதனமான கோவில்கள், மரங்கள், பச்சைப் புல்தரையிலே பறந்துகொண்டிருக்கும் கணக்கற்ற நாரைகள், நீலநிறச் சொக்காய்களையும், சாம்பல்நிற மேஜோடு களையும் அணிந்து தானியங்களை ஏற்றிய வண்டிகளிலே சென்று கொண்டிருக்கும் கிராமத்து மக்களின் களை பொருந்திய முகங்கள் எல்லாம் பார்ப்பதற்கு ரம்மியமாக இருந்தன.

இந்த நாள்வரை அந்தக் காட்சிகள் என் கண்களில் நிறைந்து நிற்கின்றன. ஜெர்மானிய பூமியே நீ வாழ்க. உழைத்தவர்களின் வளம்பெற்ற கரங்களால் உன்முகம் களைபெற்று வாழ்கிறது. அமைதியான தோற்றத்துடனும், நிறைந்த சாந்தியுடனும் என்றும் நீ வாழ்க!

நான் எனது இருப்பிடத்திற்கு மூன்றும் நாள் மாலை வந்து சேர்ந்தேன், காகினின் மேலிருந்த ஆத்திரத்தில் நான் எனது பழைய, குரூர மனதுள்ள, இரக்கமற்ற இதயமுள்ள அந்த அழகிய விதவையை ஞாபகப் படுத்திக்கொள்ள முயற்சித்தேன். ஆனால் அதில் நான் கண்டது தோல்விதான்!

அவளைப்பற்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கும்பொழுது முன்பொரு சமயத்தில் நான் பார்த்த ஒரு சிறு விவசாயப் பெண் என் நினைவுக்கு வந்தாள் அவளுக்கு ஐந்து வயது இருக்கும். உருண்டையான முகமும் நிஷ்களங்கமான கண்களும் வெறித்துப் பார்க்கும் பார்வையும் கொண்டவள். ஒரு குழந்தையுள்ளத்தின் எளிமையுடன் அவள் என்னை நோக்கினாள். அவளுடைய நிர்மலமான பார்வையைக்கண்டு எனக்கு வெட்கமுண்டாயிற்று. அவளெதிரே நான் பொய் சொல்ல முடியாதவனானேன். அந்த நிமிஷத்திலிருந்து நான் அந்த விதவையைப் பற்றிச் சிந்திப்பதை விட்டு விட்டேன்.

வீடுவந்ததும் எனக்கு வந்திருந்த கடிதத்தைப் பார்த்தேன். நான் அவனிடம் சொல்லிக் கொள்ளாமலும் அவனை அழைத்துக் கொண்டு போகாமலும் இருந்ததற்காக என்னைத்திட்டி எழுதி யிருந்தான். சுவாரஸ்யமின்றித்தான் இந்தக் கடிதத்தைப் படித்தேன். எனினும் அடுத்த நாள் காலை நான் 'ல'—நகருக்குப் போனேன்.

## 8

**கா**கின் என்னைச் செல்லமாகக்கண்டித்து வரவேற்றான். ஆனால் ஆஸ்யா என்னைப் பார்த்தவுடன் வழக்கம்போலவே

காரணமற்றுச் சிரித்தாள். பின்னர் வெளியே ஓடிவிட்டாள். ஆஸ்யாவின் இந்த நடவடிக்கை காகினுக்கும் சங்கடமாக இருந்தது. அவளுக்குப் பைத்தியம் பிடித்திருக்கிறது. பெருட்படுத்தாதே. மன்னித்துவிடு'' என்று என்னிடம் கேட்டுக்கொண்டான். உள்ளபடியே ஆஸ்யாவின் செய்கை எனக்கு ஆத்திரத்தை உண்டாக்கியது. எனினும் அதனல் நான் பாதிக்கப்பட்டதாகக் காண்பித்துக் கொள்ளாமல் கடந்த மூன்று நாட்கள் போய்வந்த விஷயங்களைப் பற்றிச் சுருக்கமாக காகினிடம் சொன்னேன். அவனும் தான் செய்த காரியங்களைப் பற்றி என்னிடம் சொன்ஞன். இருந்தாலும் அந்தப் பேச்சு ஓடவில்லை. இதற்கிடை யில் ஆஸ்யா அடிக்கடி அந்த அறைக்குள் வந்துவந்து வெளியே போஞள். எனக்கு எரிச்சல் அதிகமாயிற்று. எனவே எனக்கு அவசரமாக ஒரு வேலை இருக்கிறது என்று சொல்லிவிட்டு வெளியே கிளம்ப எத்தனித்தேன். முதலில் காகின் என்னைத் தடுத்தாலும் கூட என் மனேபாவத்தை அறிந்து கொண்டவன்போல என்னை வீடுவரை வந்து வழி யனுப்பிட்டு வருவதாகச் சொன்ஞன். ஆஸ்யா திடீ ரென்று அந்த அறைக்கு வந்து என்னிடம் கை குலுக்கு வதற்காகத் தன் கையை நீட்டிஞள். நானும் பேருக்கு அவள் கைவிரல்களைத் தொட்டு விடை பெற்றுக்கொண்டேன்.

நானும் காகினும் நதியைக் கடந்து எங்கள் கிராமத்திற் குச்சென்ரேம். எனக்குப்பிடித்தமான இயேசு கிருஸ்துவின் தாயாரான கன்னிமரியாவின் சிலை இருக்கிற அசோக மரத்தி னடியில் உட்கார்ந்து இயற்கைக் காட்சிகளை ரசிக்க ஆரம்பித் தோம். அப்பொழுது எங்களிடையே நடந்த பேச்சில் ஒரு ரசமான விஷய வெளியாயிற்று.

ஆரம்பத்தில் சம்மந்தமில்லாமல் என்னென்னவோ விஷயங்களை பேசினேம். பின்னர் கொஞ்ச நேரம் அமைதி நிலவிற்று.

திடீரென என்னை நோக்கி. "சொல். நீ ஆஸ்யாவைப் பற்றி என்ன நினைக்கிறாய்? அவள் உனக்குப் புதிராகத்தானே தோன்றுகிறாள்?" என்றான் காகின்.

"ஏன் அப்படிக்கேட்கிறாய்? ஆம் அப்படிதான்" என்றேன் நான். ஆனால் இப்படி திடீரென்று அவளைப் பற்றி என்னிடம் கேட்பான் என்று நான் எதிர் பார்க்கவில்லை.

"உள்ளபடியே நீ அவளைப் பற்றி முடிவுக்கு வரவேண்டுமானால் அவளைச் சரியாகப் புரிந்து கொள்ளவேண்டும். அவளுக்கு நல்ல இதயம் இருக்கிறது, ஆனால்பயித்தியக்காரி. அற்காக அவளைக் குறை கூறிப்பயனில்லை. நீ மாத்திரம் அவள் கதையைக் கேட்டால்........." என்று நிறுத்தினான் காகின்.

"அவள் கதையா? அவள்தான் உன்னுடைய........." நான் குறுக்கிட்டேன்.

காகின் என்னை உற்றுப்பார்த்தான்.

"உடனே அவள் என் தங்கையில்லை யென்ற முடிவுக்கே வந்துவிட்டாயா? அதுசரி........." காகின் என் குழப்பங்களைக் கவனிக்காமலே தொடர்ந்து கூறினான்; அவள் எனது தங்கைதான்; எனது தந்தையின் மகள். இங்கே என்னைப்பார். நான் உன்னைப் பூரணமாக நம்புகிறேன். ஆம். அந்த பூராவிஷயங்களையுமே உன்னிடம் சொல்லத்தான் போகிறேன்".

"எனது தந்தை அதீதமான அன்புடையவர். கனவான் நிறையப்படித்தவர். ஆனால்துரதிருஷ்டக்காரர். வாழ்க்கையில் இதரர்களைப்போல் அவ்வளவு அதிகமாக வேதனைகளை அனுபவத்தவர் என்று சொல்ல முடியாதுதான். எனினும் இயற்கையின் முதல் அடியையே தாங்க அவருக்கு வலுவில்லாமல் போயிற்று. இளம் வயதுடைய ஒரு பெண்ணைக் காதலித்துக் கால்யாணம் செய்து கொண்டார். அவருடைய

மனைவி — அதுதான் என் அன்னை, நான் 6 மாத குழந்தை யாக இருக்கும்பொழுதே செத்துவிட்டாள். என்னைக் கிராமத் திற்கு அழைத்துச் சென்று விட்டார். அங்கே பன்னிரெண்டு ஆண்டுகள் கழித்தோம். எனது கல்வி பூராவும் அவர் தான் கவனித்தார். பீட்டர்ஸ்பர்க்கில் ஒரு நல்ல உத்தியோ கத்திலிருந்த எனது மாமா மட்டும் கிராமத்திற் கு வந்து என்னை அழைத்துப் போகவேண்டும், என்று தொந்தரவு செய்திருக் காவிட்டால், என்னை என்றைக்குமே அவர் தனியாகவிட்டுப் பிரிந்திருக்கமாட்டார். என் தந்தை கிராமத்தை விட்டு வருவ தற்கு இசையாததால் என்னைத் தன் பராமரிப்பில் விட்டு வைக்குமாறு என் மாமா வற்புறுத்தினர். என் அப்பாவைப் போன்ற கடுமையும் மௌனமும் கொண்ட மனோபாவத்தி லுள்வர்களின் கண்காணிப்பில் என்னையொத்த வயதுடை யவர்கள் இருந்தால் எதிர்காலம் நன்ருக இராது. என் வயதுடையவர்கள் தனிமையில் இருப்பது நல்லதல்ல என்றெல்லாம் என் மாமா கூறினர். முதலில் தந்தை ஒப்புக் கொள்ளவில்லையாயினும் கடைசியில் சம்மதித்தார். நான் அவரிடம் விடைபெற்றுக் கொள்ளும் பொழுது அழுதுவிட்டேன். அவர் சிரித்து நான் பார்த்ததே இல்லை யாயினும் நான் அவரை மனதார நேசித்தேன். ஆனல் நான் பீட்டர்ஸ்பர்க்கிற்குப் போனவுடன் கொஞ்ச நட்களில் எனது தனிமையான இருண்ட சூழ்நிலையுள்ள கிராமத்து வீட்டை எறத்தாழ மறந்துவிட்டேன். நான் ‘ஆபீஸர் பயிற்சி பள்ளிக் கூடத்திற்கு அனுப்பட்டேன். அங்கிருந்து நேராக ஒரு முதல் தரமான பட்டாளப்படையில் (Regiments of guards) சேர்ந்தேன். வருடத்திற்கு ஒரு முறை ஓரிருவாரங்கள் எனது தந்தை இருக்கிற கிராமத்திற்கு வருவேன். வரும் ஒவ்வொரு முறையும் அவர் மேலும் மேலும் சோர்வடைந்து வருவதைத்தான் பார்த்தேன். ஏகாந்தத்தின் காரணமாக ஏறத்தாழ ஒரு முனிவர் மாதிரியே ஆகிவிட்டார். தினசரி கோவிலுக்குப் போவார். ஏற்கனவே கொஞ்ச மாகத்தான்

பேசுவார். இப்பொழுதெல்லாம் அதுவும்கூட இல்லாமல் போயிற்று. இப்படிப்பட்ட ஒரு சந்தர்ப்பத்தில்தான் பத்து வயது நிரம்பிய கருமையான கண்களோடுகூடிய ஒரு சிறிய பெண் அவரருகில் இருப்பதைப் பார்த்தேன். அப்பொழுது எனக்கு வயது 20 இருக்கும். அந்தப் பெண்ணை அதற்கு முன் எப்பொழுதும் நான் கண்டதில்லை. அதுதான் ஆஸ்யா. அவள் ஒரு அனாதை "அவளைக் காப்பற்றி வருகிறேன்" என்பதைத்தவிர வேறொன்றும் அப்பொழுது அவர் சொல்லவில்லை. அப்பொழுது நானும் அவளைப்பற்றி ஒன்றும்யோசித்ததில்லை. அவள் இயற்கையிலேயே நாணும் சுபாவமுடையவள். அப்பாவுக்குப் பிடித்தமான அறைக்குள் — அங்குதான் என் அம்மா இறந்த இடம், — பகலிலும்கூட மெழுகு வர்த்தி எரிந்து கொண்டிருக்கும். நான் நுழைந்தால், அவள் அப்பாவின் நாற்காலி மறைவிலோ, புத்தத அலமாரிக்கு மறைவிலோ ஒளிந்துகொள்வாள். அந்த முறைக்குப் பின்னல், எனது ராணுவ அலுவல்களின் காரணமாக சேர்ந்தாற்போல மூன்று நான்கு ஆண்டுகள் நான் கிராமத்திற்குச் செல்ல முடியாமல் போயிற்று. ஒவ்வொரு மாதமும் அப்பாவிடமிருந்து சுருக்கமான ஒரு கடிதம் வரும். அதில் அனேகமாக ஆஸ்யாயைப் பற்றி ஒன்றுமே இருக்காது. அப்படி இருந்தாலும் லேசாகத்தான் பிரஸ்தாபிப்பார். அப்பொழுது அவருக்கு வயது ஐம்டது இருக்கும். ஆனாலும் நல்ல திடகாத்திரமாகத்தான் இருந்தார். இன்னும் இளைஞனைப் போல்தான் தோன்றினர். எனவேதான் ஒரு நாள் எனக்கு வந்த தந்தியைக்கண்டு நான் அதிர்ச்சியுற்றேன், அவர் மிகவும் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாயும், தன் கண்களை நிரந்தரமாக மூடுவதற்கு முன்னல் என்னை ஒரு தரம் பார்க்கவேண்டும் என்று வேண்டிக் கொண்டிருந்தார். நான் பதறியடித்துக்கொண்டு ஓடினேன். அவரது கடைசி மூச்சு இழைந்து கொண்டிருந்தது. என்னைப் பார்த்ததும் அவருக்கு அளவில்லா மகிழ்ச்சி ஏற்பட்டது.

என்னை கட்டிப்பிடித்துக் கொண்டார் என் கண்களில் எதையோ தேடுவதைப்போல உற்றுப்பார்த்தார். தனது வாழ்நாளின் அந்திம காலத்தில் தனக்கு ஒரு வாக்குறுதி கொடுக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்டார். எங்கள் வீட்டிலிருந்த கிழ வேலைக்காரனைக் கூப்பிட்டு ஆஸ்யாவை அழைத்து வரச் சொன்னார். அவள் உடம்பெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்தது; நிற்கக்கூட சக்தியற்றவளைப் போல் வந்தாள்.

தனது சக்தி பூராவையும் வரவழைத்துக் கொண்டு என் தந்தை பேசினார். "இதோ எனது மரண சாஸனமாக என் மகளை, உனது தங்கையை நான் உன்னிடம் ஒப்புவித்துவிட்டுப் போகிறேன். யாகோவ் உன்னிடம் எல்லா விஷயங்களையும் சொல்லுவான்" என்றார். ஆஸ்யா அப்பாவைக் கட்டிப் பிடித்துக் கொண்டு அழுதாள். அரை மணி நேரத்தில் என் தந்தையின் கடைசி மூச்சு நின்றுவிட்டது.

நான் அவளைப் பற்றித் தெரிந்து கொண்டது இதுதான்: ஆஸ்யா என்னுடைய அப்பாவுக்கும், என் அம்மாவினுடைய வேலைக்காரியான **தாத்தான்யா**வுக்கும் பிறந்தவள். தாத்தான்யாவைப் பற்றி எனக்கு அரைகுறையாக நினைவிருக்கிறது. உயரமாக ஒல்லியாக அழகாக இருப்பாள். களை பொருந்திய முகமும், அழகான கருமையான விசாலான கண்களுமுடையவள். எனது தாய் இறந்து விட்டதற்கப்புறம் சில வருடங்கள் கழித்து என் அப்பாவுக்கும் அவளுக்கும் தொடர்பு எற்பட்டிருக்கிறது. தர்த்தான்யா எங்களது பெரிய வீட்டில்கூட வசிக்கவில்லை. எங்களது ஆடுமாடுகளை பார்த்துக்கொண்டிருந்த அவளது சகோதரியின் வீட்டிலேயே தான் இருந்தளாம். நான் நகரத்திற்குப் போன கொஞ்ச நாட்களில் அப்பா அவளை மணந்து கொள்வதாகக் கூறினாராம். ஆனால் அப்பாவுக்கு அவள் இணங்கியபோதிலும்கூட கல்யாணத்திற்குச் சம்மதிக்கவில்லையாம்.

தாத்தான்யா மங்கையர் திலகம். "நான் உங்களுக் கேற்ற மனைவியல்ல" என்றெல்லாம் என்முன்னிலே யிலேயே சொல்லி யிருக்கிருள் என்று தன்கைகளை பின்புறம் கட்டியபடியே ஜன்னலுக்கருகில் நின்றுகொண்டு யாகோவ் தாத்தான்யாவைப் பற்றிச் சொல்லிக்கொண்டி யிருந்தான். ஆஸ்யாவோடு அவள் தன் சகோதரியின் விட்டிலேயே தங்கி இருந்திருக்கிருள். நான் குழந்தையாக இருந்தபொழுது விசேஷமான நாட்களில் தாத்தான் யவை கோவிலில் சந்திப்பதுண்டு. ஒரு கறுப்புக் கைக் குட்டையைத் தலையில் கட்டிக்கொண்டு உடம்பைச் சுற்றி ஒரு போர்வையை அணிந்து கொண்டு கோவிலில் உள்ள ஒரு ஜன்னலுக்கருகில் ஜெபம் செய்வாள். பழைய பாணியிலேயே நன்ருக தரையோடு தலைவணங்கி ஜெபித் துக்கொண்டிருப்பாள். என்னை என் மாமா அழைத்துக் கொண்டு போகும்பொழுது ஆஸ்யாவுக்கு வயது இரண்டி ருக்கும். அவளுக்கு எட்டு வயது ஆகும்பொழுது அவள் தாயார் இறந்துவிட்டாள்.

தாத்தான்யா இறந்துவிட்டதற்குப் பின்னுல் அப்பா ஆஸ்யாவை அழைத்துக்கொண்டு எங்களது பெரிய விட்டிற்குவந்து விட்டார். அவள் குழந்தையாக இருக்கும் பொழுதே, தான் அழைத்துப் போவதாகக் கேட்டாராம்! ஆனுல் தாத்தான்யா ஒப்புக் கொள்ளவில்லையாம். அந்தப் பெரிய வீட்டில் தனியாக இருக்கும்பொழுது எப்படியெல்லாம் இருந்திருப்பாள் என்று ஊகித்துப்பார். அவள் பட்டுச்சொக்காய் அணிந்துகொண்டு உட்கார்ந் திருந்தாள். வேலைக்காரர்கள் எல்லா அவள் கையை முத்தமிடவந்த சம்பவத்தை அவள் இன்னும் நினைத்துக் கொண்டிருக்கிருள். அவளது தாயார் அவளை மிகவும் கண்டிப்பாகவும் கட்டுப்பாடாகவும் நடத்திவந்தாள். ஆனுல் என் அப்பாவிடம் வந்ததிலிருந்து அவள் வைத்ததுதான்

சட்டமாக இருந்தது. பூரணசுதந்திரம் அனுபவித்தாள்! அப்பா தான் அவளுக்கு உபாத்தியாயர், சிநேகிதர், எல்லாம். அவர் கெடுத்துவிட்டார் என்று சொல்ல முடியாது. ஆனால் அவர் கண்டிப்பாக வளர்க்கவில்லை. அவளை அவர் அதிகமாக நேசித்ததால் அவள் இஷ்டப்படியெல்லாம் நடக்கவிட்டார். அவர் உள்ளத்துக்குள்ளே தான் கொடுக்கும் செல்லத்தால் கெட்டுவிடுவாளோ என்று பயந்திருக்கிறார். தான் அந்த வீட்டின் முக்கியமான ஆள் என்றும் அந்த வீட்டின் எஜமானர்தான் தனது தந்தை என்பதையும் சீக்கிரமே உணர்ந்துகொண்டாள். அவள் தன்பிறப்பு நிலையையும் கூட அவள்அறிந்துகொள்ள அதிக நாட்கள் பிடிக்கவில்லை, அவள் மிதமிஞ்சிய அகந்தைகொண்டாள். கூடவே மிதமிஞ்சிய கோழைத்தனமும் வளர்ந்தது. சாமான்ய வாழ்க்கையும், எதார்த்த குணமும் அவளிடமிருந்து போய்விட்டன இதர கெட்ட பழக்கங்களெல்லாம் உருவாயிற்று. தனதுபிறப்பைப் பற்றிய ரகசியத்தை இந்த "உலகத்தின்" கண்களிலிருந்தே மறைத்துவிட நினைத்தாள் என்பதை ஒருநாள் என்னிடம் ஒப்புக்கொண்டிருக்கிறாள். தன் தாயைப் பற்றி நினைக்கும் பொழுது அவளுக்கு அவமானமாகஇருந்திருக்கிறது; ஆனால் அதே நேரத்தில் தன்னைப்பற்றி நினைக்கும்பொழுது பெருமைப்பட்டு கொண்டிருக்கிறாள்.

"தனது வயதுக்கொவ்வாத பல விஷயங்களைப் பார்த்தும் கேட்டுமிருக்கிறாள்...... அது அவள் குற்றமா என்ன? தனது இளமை உணர்ச்சிக்குத் தோன்றியதெல்லாம் செய்திருக்கிறாள். அவளை வழியாக நடத்துவதற்கு யாரும் இல்லை. அவளுக்கு எல்லாவிதத்திலுமே சுதந்திரம் தான். கொஞ்சம்கூட பொறுப்பு இருக்கவில்லை. அப்பொழுது இளம் பெண்கள் எப்படி எப்படி இருந்தார்களோ அப்படியெல்லாம் இருந்திருக்கிறாள். மனம் போனபடியெல்லாம் படித்திருக்கிறாள், இதிலெல்லாம் என்ன நன்மை வந்து

விடப்போகிறது அவளது கெட்ட பழக்கங்கள்தான் அதிகரித்தன. ஆனால் அவள் இதயம் மட்டும் துருபிடித்துவிடவில்லை. மூளை கெட்டுவிடவில்லை.

கடைசியாக இருபது இருபத்திரண்டு வயதுள்ள என்னிடம் பதின்மூன்று வயதுள்ள பாவை ஒப்படைக்கப்பட்டாள். அப்பா இறந்து சில நாட்கள்வரை, எனது சப்தம் கேட்டாலேஅவளுக்கு ஜுரம் வந்துவிடும். அவள் அருகே சென்றால் அலற ஆரம்பித்துவிடுவாள். என்னிடம் பழக கொஞ்சம் நாட்கள் பிடித்தன; உண்மையிலேயே நான் அவளை நேசிக்கிறேன், சகோதரியாகவே போற்றுகிறேன் என்பதைக் கண்டதற்குப் பிறகுதான் என்னை நேசிக்க ஆரம்பித்தாள். பின் இதயபூர்வமாகவே நேசித்தாள். எதையுமே அவள் அரைகுறையாகச் செய்வதில்லை. என்னைப் பூர்ணமாக நேசித்தாள்.

நான் அவளை 'பீட்டர்ஸ்பர்க்' அழைத்துப்போனேன். அவளைப் பிரிய கஷ்டமாக இருந்த போதிலும்கூட, என்னுடனே அவளை வைத்திருப்பது சிரமமாக இருந்தது. எனவே அங்குள்ள ஒரு நல்ல "பள்ளிக்கூட போர்டிங்"கில் அவளைச்சேர்த்தேன். தனியே பிரிந்திருக்க வேண்டிய அவசியத்தை ஒப்புக்கொண்டாள். எனினும் அவளுக்கு அப்பொழுது பயங்கரமான ஒரு காய்ச்சல் வந்தது. பின்னர் போர்டிங்கில் பழக்கப்பட்டுவிட்டாள். அங்கேயே நான்கு ஆண்டுகள் இருந்தாள். அவள் பள்ளிக்கூடத்தை விட்டு வெளியே வரும்பொழுதும், கொஞ்சம் கூட தன் குணங்களில் மாறுபட்டிருக்கவில்லை. அது எனக்கு ஆச்சர்யத்தைக்கொடுத்தது "அவளைத் தண்டிப்பதால் ஒன்றும் ஆகப்போவதில்லை. அவள் குணமே அலாதியானது, அவள்; வகுப்பிலுள்ள எல்லோரைக்காட்டிலும் கெட்டிக்காரிதான்; ஆனாலும் தனி சுபாவமுள்ளவள்" என்று அவளது தலைமை உபாத்தியாயினி சொன்னாள். அவள் இருந்த

அந்த நான்கு ஆண்டுகளில் அவளுக்கு ஏழைப் பெண் ணொருத்தியைத் தவிர வேறு சிநேகிதிகளே கிடையாது. ஆஸ்யா யார்யாரோடு பழகிவந்தாளோ அவர்கள் எல்லாம் நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பெண்கள். அவர்களனே வரும் ஆஸ்யாவை ஒதுக்கியே வந்தனர். ஆனால் ஆஸ்யா யாருக்கும் பணிந்ததே இல்லை. ஒரு நாள் அவளது பைபிள் உபாத்தியாயினி கெட்ட குணங்களென்பவை எவை? என்று கேட்டபொழுது "முகஸ்துதி செய்வதும், கோழைத் தனமும்தான்" என்று ஒருவரியில் சொல்லியிருக்கிறாள். கௌரவமாக நடந்துகொள்வது என்பது ஒன்றுதான் அவள் பள்ளிக்கூடத்தில் கற்றுக்கொண்ட நல்ல பழக்கம்.

கடைசியாக அவளது பதினேழாவது பிறந்ததினம் வந் தது. அதற்குமேல் அவள் பள்ளிக்கூடத்தில் இருக்கமுடி யாது. என் நிலைமையும் தர்ம சங்கடமாக இருந்தது. ராணு வத்தை விட்டுவிட்டு, ஆஸ்யாவையும் அழைத்துக்கொண்டு ஓரிரு ஆண்டுகள் வெளி நாடுகளில் சுற்றுப்பிரயாணங்கள் செய்தால் என்ன என்ற ஒரு சந்தோஷ எண்ணம் உரு வாயிற்று. அந்த எண்ணம் உதித்த உடனேயே அது நடை முறைக்கு வந்துவிட்டது. இப்படித்தான் நாங்களிருவரும் இங்கே-இந்த ரைன் நதிக்கரைக்கு வந்து சேர்ந்தோம். நான் ஓவியனாகப் பார்க்கின்றேன். அவளே தனது சுபாவங்க ளோடு அதிகக் கோபக்காரியாகவும், தனி சுபாவமுள்ளவ ளாகவும் நடந்து கொள்கிறாள். நீ இப்பொழுது அவளைப் பற்றிச் சரியாகப் புரிந்துகொள்ள முடியும் என்று நம்புகின் றேன். அவள் எதைச் செய்தாலும், மற்றவர்கள் தன்னைப் பற்றி உயர்வாக நினைக்கவேண்டும் என்பதற்காகவே-இன் னும் சொன்னால் நீ அவளை உயர்வாக நினைக்கவேண்டும் என்பதற்காகவே, அப்படி நடந்துகொள்கிறாள்."

இவ்வளவையும் சொல்லி முடித்துவிட்டு காகின் வழக் கம்போல் சிரித்தான். நான் அவன் கைகளைப் பலமாக அழுத்தினேன்.

" எனினும் எனக்கு அவளுடன்நேரம் போவதேமிகுந்த சிரமமாகஇருக்கிறது. இதுவரை அவள் யாரையும்காதலித்த தாகத் தெரியவில்லே. அவள் காதலிக்க ஆரம்பித்தால்...? அவள் எப்படி இருப்பாள் என்று பலமுறை நான் நினேத்துப் பார்ப்பதுண்டு. அன்றைக்கு ஒரு நாள் ஒரு சம்பவம் நடந் தது. முதலில் நான் அவளே நேசிப்பதில்லே என்று ஆரம் பித்தாள். பின்னர் என்ன வென்ருல் அவள் என்னேத் தவிர வேறு யாரையும் நேசிப்பதில்லேயாம். அவள் ஆயுள் பூராவும் என்னேத் தவிர வேறு யாரையுமே நேசிக்கமாட்டாளாம். அப்படி சொல்லிவிட்டு அவள் போட்ட சப்தம் இருக்கிறதே அதைப் பார்த்திருந்தால் நீ என்ன சொல்லுவாயோ ?

"ஒஹோ அதுவா ?" என்று என்னவோ சொல்லப் போனேன். வார்த்தைகள் தொண்டைக் குழியிலிருந்து வெளியே வரவில்லே.

இப்பொழுது நாங்களிருவரும் நன்ருகவே மனம்விட் டுப் பேசிக்கொண்டிருந்தோம். " அப்படியாளுல் இதுவரை அவளுக்கு யாரையுமே பிடிக்கவில்லே என்றுதான் நினேக் கிருயா ? நல்ல இளேஞர்களே அவள் பீட்டர்ஸ்பர்க் நகரத் தில் சந்தித்திருப்பாளே."

" அவர்களே அவளுக்குப்பிடிப்பதே இல்லே. ஆஸ்யா வின் எண்ணமெல்லாம், தன் காதலன் ஒரு வீரனுக–குறிப் பிடத்தக்கவனுக இருக்கவேண்டும். இல்லேயெனில் எங் கேயோ மலேப்பிராந்தியங்களில் ஆடுமேய்க்கும் அழகனுக இருக்கவேண்டும். நான் இப்படி உன்னிடம் பேசிக் கொண்டே நேரத்தை வளர்த்துகிறேனே " என்று சொல் லிக்கொண்டே எழுந்திருந்தான்காகின்.

" சரி எழுந்திரு போவோம். நான் என் வீட்டிற்குப் போகப்போவதில்லே."

" அப்படியாளுல் உன் வேலே ?"

நான் ஒன்றும் பதில் பேசவில்லை. காகின் புன்சிரிப்போடு என்னைப் பார்த்தான். நாங்கள் 'ல'வுக்குத் திரும்பிப்போனோம். பழக்கமான அந்த திராட்சைத் தோட்டங்களையும். மலை உச்சியிலிருந்த அந்தச் சிறிய அழகிய வீட்டையும் பார்க்கும்பொழுது என்னுள்ளே ஒரு 'இன்ப உணர்ச்சி' எழும்பி நின்றது, என் இதயத்துக்குள்ளே தேன் ஒழுகிக் கொண்டிருப்பதைப் போன்ற ஒரு இனிமையான உணர்ச்சி நிரம்பியிருந்தது. காகின் கூறிய கதையைக் கேட்டதிலிருந்து எனக்கு ஏனோ மன நிம்மதி ஏற்பட்டது!

# 9

கதவருகில் ஆஸ்யாவைச் சந்தித்தோம், அவளைப் பார்த்த உடனேயே வழக்கம்போல ஒரு பலத்த சிரிப்பு சிரிப்பாள் என்று எதிர்பார்த்தேன். ஆனால் முகமெல்லாம் வெளுத்து மௌனமாக, கண்களைக் கீழே தாழ்த்திப் பார்த்துக்கொண்டு வந்தாள்.

“இங்கே பார் ஆஸ்யா மீண்டும் வந்துவிட்டாள். தானாகவே வந்திருக்கிறாள். ஆமாம்” என்றான் காகின்.

ஆஸ்யாவின் பார்வையிலே கேள்விக்குறி இருந்தது. இப்பொழுது அவளிடம் நானே கைகளை நீட்டினேன், அவளது மெல்லிய சில்லென்றிருந்த கைவிரல்களை இதயபூர்வமாக அழுந்தப் பிடித்தேன். அவளுக்காக உள்ளபடியே வருந்தினேன். அவளைப்பற்றி எனக்கிருந்த புதிரெல்லாம் இப்பொழுது விடுபட்டுவிட்டன. அவளது அமைதியின்மை, அவளது விசித்திர நடவடிக்கைகள் எல்லாவற்றிற்கும் இப்பொழுது காரணம் விளங்கிவிட்டது. அவளை ஏதோ ஒரு ரகசியமான உள்ளுணர்ச்சி உந்தித்தள்ளிக்கொண்டே இருந்தது! அவளது வளர்ச்சியின்மை அவளுக்கு நிம்மதியைக் கொடுக்கவில்லை. எனினும் அவள் உண்மையாகவே

நடந்துகொள்ள முயற்சி செய்து கொண்டிருந்தான். இந்த விசித்திரமான பெண்ணிடம் எனக்கு ஏன் இவ்வளவு ஈடுபாடு என்பதற்குக் காரணம் எனக்கு விளங்கத்தான் செய்தது. அதற்குக் காரணம் அரைகுறை நாகரிகமுள்ள ஒல்லியான அழகு பொருந்திய அவள் உடலழகு மாத்திரமல்ல, நான் அவள் உள்ளத்தையே காதலித்தேன்!

காகின் படம் வரைவதில் ஆழ்ந்துவிட்டான். திராட்சைத் தோட்டத்துப்பக்கம் கொஞ்சதூரம் வெளியே போய் வருவோமோ? என்று ஆஸ்யாவைக் கேட்டேன். அவள் சந்தோஷத்தோடே அதை ஒப்புக்கொண்டாள். கொஞ்ச தூரம்போய் பாதி வழியிலேயே காணப்பட்ட ஒரு பெரிய பாறையின் மீது உட்கார்ந்தோம்.

"நீங்கள் எங்களைப் பிரிந்திருந்தபொழுது வருந்தவில்லையா?" என்றாள் ஆஸ்யா.

"நான் வராததைப் பற்றி நீ வருந்தினாயா?" என்று எதிர்க்கேள்வி போட்டேன்.

ஆஸ்யா நீண்டநேரம் ஓரப்பார்வையில் என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

"ஆமாம், சரி, நீங்கள் மலைப்பக்கம் போனீர்களே அவை எப்படி இருந்தன? ரொம்ப உயரமான மலையோ? மேகங்களைவிடவா உயரமாக இருந்தது? என்னனென்னவெல்லாம் பார்த்தீர்கள்? சொல்லுங்களேன். இதையெல்லாம் காகினுக்குச் சொன்னீர்கள். நான் சரியாகக் கேட்கவில்லை."

"நீதான் வேண்டுமென்றே வெளியே போனாயே" என்றேன்.

"ஆம் நான் வெளியே போனேன்......ஏனென்றால் .........இப்பொழுது போகமாட்டேன், மேலும் அழுத்த

மாகச் சொன்னுள். நீங்கள்தான் என்மீது கோபமாக இருந் தீர்கள்.''

"நானு ?......கோபமா ?''

" ஆம். நீங்கள்தான்.''

"நான் ஏன் கோபப்படவேண்டும் ? ''

" எனக்கு என்னென்று தெரியாது. நீங்கள் கோபத் தோடே வந்தீர்கள். கோபத்தோடே போய்விட்டீர்கள். அப் படி நீங்கள் போனபோது எனக்கு வருத்தமேற்பட்டது. ஆனுல் இப்பொழுதுதான் வந்துவிட்டீர்களே ! எனக்கு நிரம்ப சந்தோஷம்.

"நான் திரும்பி வந்ததைப்பற்றி எனக்கும் சந்தோஷம் தான்'' என்றேன்.

குழந்தைகளுக்குக் குதூகலம் ஏற்பட்டால் எப்படி சில வேளைகளில் செய்வார்களோ, அப்படியே ஆஸ்யா தன் தோள்களைக் குலுக்கினுள் !

"ஓ! ஆட்களைப் பார்த்தவுடனேயே சொல்லிவிடுவேன், அவர்கள் என்ன நினைக்கிருர்களென்று. நான் பக்கத்து அறையிலிருந்துகொண்டே அப்பாவின் கனைப்புச் சப்தத் தைக்கேட்டு, அவர் சந்தோஷத்தோடு இருக்கிருரா, இல் லையா ? என்பதைச் சொல்லிவிடுவேன்.''

இதுவரை ஆஸ்யா தன் தந்தையைப்பற்றி என்னிடம் குறிப்பிட்டதே இல்லை. இன்று அவள் அப்படிச்சொன்னது எனக்கு ஆச்சர்யத்தை உண்டுபண்ணியது.

"உன் அப்பாவை நீ நேசித்தாயா ?'' திடீரென்று இப் படிக் கேட்டுவிட்டேன். எனினும் இச்சையடக்கத்தின் காரணமாக நான் தடுமாறுவதைப்போல் உணர்ந்தேன். அவள் பதில் சொல்லவில்லை, சொல்லத் திணறினுள். கொஞ்ச நேரம் இருவரும் மௌனமானேம்.

தூரத்திலே ரைன் நதியில் ஒரு கப்பல் புகை கக்கிக்கொண்டு போவது தெரிந்தது. அதை இருவரும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

"நீங்கள் ஏன் அந்த மலைகளைப்பற்றி சொல்லக் கூடாது?" ஆஸ்யா முணுமுணுத்தாள்.

"என்னைப்பார்த்ததும் ஏன் இன்று காலை நீ சிரித்தாய்?" என்று கேட்டேன்,

"அது எனக்கே தெரியாது. சில வேளைகளில் எனக்கு அழவேண்டும்போல் இருந்தால் நான் அப்படி சிரிப்பதுண்டு! நான் என்ன செய்கிறேன் என்பதை வைத்து என்னை நிர்ணயித்துவிடக் கூடாது......அந்த 'லோரலி' என்ற பழைய கதை எவ்வளவு நன்றாக இருக்கிறது. அதோ தெரிகிறதே அதுதானே அவள் உட்கார்ந்திருந்த இடம். இல்லையா? 'முதலில் யாரைக் கண்டாலும் தண்ணீரில் பிடித்து அமுக்கிவிடுவாள், யாரையாவது அவள் காதலித்தால் அவனும்கூட தண்ணீரில் விழுந்துவிடுவான் என்று அவளைப்பற்றிச் சொல்கிறார்கள். அவள் கதை எனக்கு ரொம்பப்பிடிக்கிறது. லூயி சீமாட்டி எல்லாவிதமான வேடிக்கைக் கதைகளையும் என்னிடம் சொல்லிக்கொண்டிருப்பாள். சீமாட்டியிடம் மஞ்சள் நிறமுள்ள கண்களையுடைய ஒரு கறுப்புப்பூனை இருக்கிறது தெரியுமா?"

ஆஸ்யா கண்களை மேலே தூக்கிப்பார்த்தாள். பின் தன் பின்னலைப் பின்னுக்குத் தள்ளினாள்.

"நான் இன்றைக்கு ரொம்ப சந்தோஷமாக இருக்கிறேன்" என்றாள்.

அப்பொழுது எங்கிருந்தோ ஒரேமாதிரி பாடும் சப்தம் கேட்டது. நூற்றுக்கணக்கான குரல்கள் ஏதோ ஒரு மத சம்பந்தமான பாட்டை ஒரே ஸ்தாயியில் பாடிக்கொண்டு சென்றனர். மலைக்குக் கீழே உள்ள சாலையில் நிறைய

'புண்ணிய க்ஷேத்திர யாத்ரீகர்கள்' கையில் சிலுவைகளோடும், அட்டைகளோடும் சென்றுகொண்டிருந்தனர்.

"எனக்கும்கூட அவர்களோடு போகவேண்டும் போல் இருக்கிறது" என்ருள் ஆஸ்யா.

"நீ ஏன் அவ்வளவு 'சாது'வாகப் போய்விட்டாய்!"

"நான் எங்கேயாவது தூரமாக, வெகுதூரமாகச் செல்ல வேண்டும் என்று விரும்புகிறேன். ஏதாவது ஒரு கடினமான காரியத்தைச் சாதிக்கவேண்டும் என்ற ஒரு எண்ணம் எனக்கு இருக்கிறது" என்ருள் ஆஸ்யா.

"நீ ரொம்ப பேராசைக்காரி. உனது வாழ்க்கையை வீணுக்க நீ விரும்பவில்லை. நீ இறந்துவிட்டாலும்கூட உன் எண்ணம் மக்கள் மத்தியில் என்றைக்கும் இருக்கும்படி ஏதோ செய்ய எத்தனிக்கிருய்?" என்றேன் நான்.

"என்ஞல் அதைச் செய்ய முடியாது என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?"

"முடியாது" என்று சொல்லப்போனேன். ஆனுல் அவளது ஒளிபொருந்திய கண்களைக் கண்டதும் "முயற்சி செய்" என்றுதான் சொன்னேன்.

கொஞ்சநேரம் கழித்து "நீங்கள் அந்தப் பெண்ணை ரொம்ப விரும்புகின்றீர்களா? நாம் சந்தித்ததற்கு அடுத்த நாள் 'அழிந்த கோட்டைகளை'ப் பார்க்கப் போனேமே அன்று என் அண்ணன் 'உன் இதயத்திலுள்ள பெண்ணுக்காக' என்று குடித்தானே, அந்தப் பெண்ணை." அவள் முகத்தில் எத்தனையோ எண்ணங்களின் ரேகைகள் படர்ந்தன, பின்னர் அது வெறுமையடைந்தது.

நான் சிரித்தேன்!

"உன் அண்ணன் என்னை வெறுமே கேலி செய்தான். நான் யாரையும் அதிகமாக நேசித்ததில்லை! நான் இன்னும் கூட யாரையும் அதிகமாக நேசிக்கவில்லை!

ஒன்றும் புரியாத ஒருவித குறுகுறுப்போடு "பெண்களிடத்தில் நீங்கள் விரும்புவதுதான் என்ன?" என்று கேட்டாள்.

"இது என்ன வேடிக்கையான கேள்வி?" என்றேன்.

ஆஸ்யாவின் நிலை எப்படியோ இருந்தது.

"நான் அப்படிப்பட்ட கேள்வியை உங்களிடம் கேட்டிருக்கக்கூடாது; இல்லையா? என் எண்ணத்தில் எது முதலில் தோன்றுகிறதோ அதை உடனே சொல்லிவிடுவேன். இதுதான் என்னிடம் உள்ள கெட்ட பழக்கம். அதனால்தான் நான் யாரிடமும் தாராளமாக பேசுவதுகூடக் கிடையாது."

"பேசு! நன்றாகப் பேசு! பயப்படாதே. கடைசியில் ஒருமாதிரியாக உன்னிடம் உள்ள இந்த வெட்கப்படும் சுபாவம் போனதே என்று சந்தோஷப்படுகிறேன்" என்றேன்.

ஆஸ்யா கண்களை கீழே தாழ்த்திக்கொண்டு மெதுவாகச் சிரித்தாள். இப்படிப்பட்ட சிரிப்பை இதற்கு முன்பு அவளிடம் நான் கண்டதேயில்லை.

"ஏதாவது பேசுங்களேன். அன்றைக்கு 'புஷ்கின்' எழுதியவற்றைப் படித்ததைப் போலவாவது எதையாவது ஒப்புவியுங்களேன்" என்றாள். ஏதோ நீண்ட நேரம் அங்கேயே உட்கார்ந்து இருக்கவேண்டும் என்ற எண்ணத்தோடு இருப்பவள்போல் கவுனை இழுத்து விட்டுக்கொண்டாள். அவள் ஏனோ பேச்சை நிறுத்தி மெதுவாக தன் அடித் தொண்டையில்,

" எங்கே அச்சிலுவை, மரக்கிளையின் கீழே
என் துரதிருஷ்ட அம்மாவின் கல்லறைக்குமேலே "

என்று இழுத்தாள்.

" புஷ்கின் அப்படி எழுதியிருக்கவில்லையே " என்றேன்.

" நான் தாத்தான்யாவாக இருக்க விரும்பினேன் " என்றாள். உடனே ஏதோ ஒருவித சலசலப்போடு " ஏதாவது பேசுங்கள் " என்றாள்.

அப்பொழுது நான் பேசுகிற மனோநிலையில் இல்லை. நான் அவளையே பார்த்துக்கொண்டிருந்தேன். சூரியனின் ஒளிக்கிரணங்கள் அவள்மீது பட்டன, அப்பொழுது அவள் அமைதியான ஒரு தேவதையைப்போல் காட்சியளித்தாள். எங்களுக்கும் கீழே, மேலே, ஆகாயத்தில், பூமியில், தண்ணீரில் எங்குமே சூரிய ஒளி பட்டுத் தெறித்துக்கொண்டிருந்தது. அப்பொழுது வீசிய காற்று ஒரு அலாதியான இன்பத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது.

" எல்லாம் எவ்வளவு இன்பமயமாக இருக்கிறது பார்த்தாயா ?" என்று அவசியமில்லாமலேயே தொனியை இறக்கிச் சொன்னேன்.

" பிரமாதமாக இருக்கிறது " அவளும் ஏனோ கீழ் ஸ்தாயியிலேயே என்னைப் பார்க்காமலேயே சொன்னாள். " நாம் மட்டும் பறவைகளாக இருந்திருந்தால் எங்கெல்லாம் பறந்து திரியலாம்! அந்த நீலநிற ஆகாயத்திற்குள்ளேயே கூட போய்விடலாம்........ஆனால் நாம்தான் பறவைகளில்லையே..."

" நமக்குச் சிறகுகள் முளைக்க முடியும் " என்றேன்.

'எப்படி ?"

"வாழ்ந்து கற்றுக்கொள்! பூமியிலிருந்து நம்மை உயரே தூக்கிச் செல்லும் பல உணர்ச்சிகள் உள்ளன, கவலைப்படாதே. உனக்கே ஒருநாள் சிறகுகள் முளைக்கும்!"

"உங்களுக்கு எப்பொழுதாவது அப்படி முளைத்திருக் கிறதா?"

"அப்படிச் சொல்லுவது சிரமம்......நான் அப்படி இது வரை பறந்ததாக எனக்குத் தோன்றவில்லை."

ஆஸ்யா மீண்டும் மௌனமானாள். நான் அவள் பக்க மாகக் கொஞ்சம் சாய்ந்தேன்.

"உங்களுக்கு நடனமாடத் தெரியுமா?" என்று திடீ ரென்று கேட்டாள்.

"ஆம் தெரியும்" நானும் ஒருவித சலனத்தோடே சொன்னேன்.

"அப்படியானால் வாருங்கள். என் அண்ணனை நமக்காக நடன சங்கீதம் வாசிக்கச் சொல்வோம். நாம் பறப்பதைப் போல் நடிப்போம். நமக்கு இறக்கைகள் இருப்பதைப் போல் பாவித்து ஆடுவோம்."

அவள் வீட்டை நோக்கி ஓடினாள். நானும் தொடர்ந் தேன். கொஞ்சநேரத்தில் நாங்கள் உட்காரும் அறையி லிருந்து நடன சங்கீதம் இனிமையாகக் கேட்டது. ஆஸ்யா உற்சாக வெள்ளத்தால் பிரமாதமாக நடனமாடினாள். அவளது கன்னித் தோற்றத்திலே எங்கிருந்தோ வந்து பெண்மையின் பூரண அழகு குடிகொண்டுவிட்டதைப்போல் காணப்பட் டாள்! அவளது மெல்லிய, இடையிலே என் கை இருந்தது. அந்த ஸ்பரிச உணர்ச்சி என்னை எங்கேயோ கொண்டு சென்றது! அவளது கேசச்சுருள்கள் முகத்தருகே தொங் கின. அவளது வெண்மையான முகத்திலுள்ள கண்கள் பாதி மூடியிருந்தன. அவளது பெருமூச்சு என்மீது வேக மாகப் பட்டுக்கொண்டிருந்தது!

# 10

எவ்வளவு சந்தோஷமாகக் கழிய முடியுமோ அவ்வளவு சந்தோஷமாக அந்த நாள் கழிந்தது. நாங்கள் குழந்தைகளைப்போல் கூத்தடித்தோம். 'ஆஸ்யா சாதாரணமாகவும் நன்ருகவும் இருந்தாள். காகினுக்கு இது மிகுந்த சந்தோஷத்தைக் கொடுத்தது. நான் வீட்டிற்குப் புறப்படும் பொழுது நேரம் அதிகமாகிவிட்டது. நான் படகிலேறிப் போய்க்கொண்டிருந்தேன். நடு ஆற்றில் படகு செல்லும் பொழுது படகைச் செலுத்தாமல் அப்படியே விட்டுவிடச் சொன்னேன். ஆற்று வேகத்திலே படகைத் தண்ணீர் அடித்துக்கொண்டே சென்றது. என்னைச் சுற்றிலும் பார்த்தேன். ஏதோ ஒருவிதமான உள்ளக் குதுகுதுப்பு ஏற்பட்டிருந்தது. நான் அண்ணாந்து வான முகட்டைப் பார்த்தேன். அங்கேயும் அமைதியில்லை. தொடர்ச்சியான வேகத்தோடு நட்சத்திரங்கள் பதைபதைத்துக் கொண்டிருந்தன. குனிந்து தண்ணீரைப் பார்த்தேன். அங்கேயும்கூட அந்தக் கறுப்பு நிறமுள்ள நீரின் முழு ஆழத்திலே நட்சத்திரங்கள் அசைந்தாடிக்கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் ஒரு ஆழத்திலே நட்சத்திரங்கள் அசைந்தாடிக்கொண்டிருந்தன. எங்கே பார்த்தாலும் அமைதியற்ற ஒரு வேகம் காணப்பட்டது. என்னிலும் அந்த வேகம் பிரதிபலித்தது. படகின் ஓரத்திற்கு வந்து சாய்ந்து பார்த்தேன். காற்றின் சலசலப்பு காதுகளை நிறப்பிற்று. தண்ணீர் குமுறிய வண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. என்னமோ எனக்கு ஒருவித வேதனையாக இருந்தது. அலைகளின் இனிமை கூட என்னை சாந்தப்படுத்த முடியவில்லை. கரையிலிருந்து ஒருவானம்பாடி கீதம் இசைத்தது. அதன்பாட்டின் இனிமை நிறைந்த விஷம் என் நரம்புகளில் எல்லாம்

வேதனையை ஏற்றியது. என் கண்கள் குளமாயின. அவை வெறுமையான பரவசத்தினுல் ஏற்பட்ட கண்ணீரல்ல; வாழ்க்கையில் காதலும் கவர்ச்சியும் இருக்கிறது என்ற ஒரு ஆசையின் உணர்ச்சியல்ல! ஆனுல் இன்பமாக இருப்பதற்கான ஒரு தாகம் என்னை அமுத்திக் கொண்டிருந்தது. அந்த உணர்ச்சிக்கு எந்தப் பெயரையும் கொடுக்க நான் விரும்பவில்லை. நான் விரும்பியதெல்லாம் சந்தோஷம்தான். உற்சாகம்தான்... ..படகு மிதந்துகொண்டிருந்தது. அந்தக் கிழ ஓடக்காரன் சொப்பனத்தில் காணுவதைப்போல வளைந்து ஓடத்தை முன்னுக்குத் தள்ளிக்கொண்டிருந்தான்.

# 11

அடுத்த நாள் காலை நான் காகின் வீட்டிற்குப்போனேன். நான் ஆஸ்யாவை காதலிக்கிறேனு என்பது எனக்கே தெரியவில்லை. ஆனுல் அவளைப் பற்றிய நினைவு என்னில் நிறைந்திருந்தது. அவளது எதிர்காலத்தில் ஏனே எனக்கு அக்கரை அதிகமிருப்பதாகப்பட்டது! அதற்கு முந்திய நாளிலிருந்துதான் அவளைப் பற்றி நன்ருக தெரிந்துகொள்ள முடிந்தது. அதுவரையில் அவள் என்னிடமிருந்து விலகியே நின்ருள். ஆனுல் கடைசியாக இப்பொழுதாவது அவளைப் புரிந்துகொள்ள முடிந்ததே எனக்கு மிகுந்த சந்தோஷம் தான். என் சிந்தனை பூராவிலும் அவள் சித்திரம்தான் நிறைந்து நின்றது. அந்த உருவத்தின் நாணம் கலந்த அழகு வெளிக்குத்தெரியாமல் ஆழத்தில் ஒளிவீசிக்கொண்டிருந்தது!

எனக்குப் பழக்கப்பட்ட அதே பாதையில் நான் வேகமாக நடந்து சென்றேன். தூரத்திலிருந்து பார்க்கும்போது அந்த வீடு ஒரு சிறிய வெள்ளைப் புள்ளிபோல தெரிந்தது. எதிர்காலத்தைப்பற்றி—ஏன் அடுத்த நாளைப் பற்றிக்கூட—

எதுவும் முடிவுக்கு வரவில்லை. எனினும் நான் பரம சந்தோஷமாக இருந்தேன்.

நான் அந்த வீட்டிற்குள் நுழையும் சமயத்தில் ஆஸ்யா குறுக்கிட்டாள். அவள் முகம் நாணத்தால் சிவப்பேறியது. அவள் அழகாக நல்லாடை உடுத்தியிருந்தாள். எனினும் அதற்குத் தகுந்த தோற்றம் முகத்தில் இல்லை. ஏனோ அதில் துக்கம் தோய்ந்திருந்தது. வழக்கம்போல ஆஸ்யா ஓடி விடுவாளோ என்று நினைத்தேன். ஆனால் வலிமையையெல்லாம் வரவழைத்துக்கொண்டு அங்கே நிற்பதைப்போல் தோன்றிற்று. புதிதாக ஓவியம் வரைபவர்கள் எப்படி ஆரம்பத்தில் அதிலேயே மூழ்கியிருப்பார்களோ அப்படியே காகின் ஓவியத்திற்கு முன்னால் கையில் தூரிகையோடு உட்கார்ந்திருந்தான். ஏதோ வந்ததைத் தெரிந்துகொண்டவன்போல தலையை அசைத்தான். கொஞ்சம் பின்னே சாய்ந்து அந்த ஓவியத்தை ஓரக்கண்ணால் பார்த்தான். மறுபடியும், ஓவியத்தில் ஆழ்ந்துவிட்டான். காகினைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்ற முடிவோடு ஆஸ்யாவிற்கருகில் உட்கார்ந்தேன். அவளது கருநீலக்கண்கள் மெதுவாக என் பக்கம் திரும்பின.

நான் புன்சிரிப்போடு அவளைப்பார்த்தேன். அவள் ஏனோ அசைவற்றிருந்தாள். "நீ நேற்றைக்கு இருந்ததைப்போல் இன்றைக்கு இல்லையே?" என்றேன்.

" ஆம் நேற்றைப்போல் நான் இல்லைதான்" மெதுவாக நிறுத்தி இந்த வார்த்தைகளைச் சொன்னாள். "எனினும் பரவாயில்லை. நேற்று நான் சரியாகத் தூங்கவில்லை. இரவு பூராவும் சிந்தித்துக்கொண்டே படுத்திருந்தேன்."

" எதைப் பற்றி?"

"எல்லாவற்றையும் பற்றித்தான். நான் குழந்தையாக இருந்ததிலிருந்தே,—என் அம்மாவோடிருந்த அந்த நாட்களிலிருந்தே—அது எனக்குப் பழக்கமாகப் போய்விட்டது."

ஏனோ கடைசி வார்த்தையை ரொம்பச் சிரமப்பட்டு அழுத்திச் சொன்னாள். அதையே மறுபடியும் அழுத்தமாக "நான் அம்மாவோடு வாழ்ந்த அந்தக் காலத்திலிருந்தே நாளை நடப்பது ஏன் யாருக்குமே தெரிவதில்லை என்று ஆச்சரியப் படுவதுண்டு! துரதிருஷ்டம் உனக்கு வருவது தெரியும். ஆனால் அதை எப்படி தடுத்து நிறுத்துவது என்று மட்டும் ஏன் தெரிவதில்லை? ஏன் பூரா உண்மைகளை யாரிடமும் பேசமுடிவதில்லை?...... நான் என்னைப்பற்றி அடிக்கடி யோசிக்கிறேன். எனக்கு ஒன்றுமே தெரியவில்லை. நான் படிக்கவேண்டும், ஆம் மறுபடியும் நன்றாக ஆரம்பத்திலிருந்து படிக்கவேண்டும். நான் சரியாகவே வளர்க்கப்படவில்லை. எனக்குப் பியானோ வாசிக்கத்தெரியாது. சதுரங்கம் ஆடத் தெரியாது. ஏன், தையல் வேலைகூட சரிவரத் தெரியாது. எனக்கு எந்தத்திறமையுமே இல்லை. நான் யாருக்கும் பயன்படமாட்டேன்."

"உன்னைப்பற்றி உனக்குச் சரியாக எடைபோட முடியவில்லை. நீ நிறைய படித்திருக்கிறாய். உனக்கிருக்கிற மூளைக்கு......" என்றேன். "நான் உண்மையிலேயே புத்திசாலி என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?" என்று சூதற்ற முறையில் தெரிந்துகொள்ளும் ஆவலினால் கேட்டுவிட்டாள். அது சிரிப்பைத்தான் மூட்டிவிட்டது. ஆனால் அவள் சிரிக்கவேயில்லை, "அண்ணா நான் புத்திசாலிதானா?" என்று காகினைப்பார்த்து கேட்டாள்,

காகின் பதிலளிக்கவில்லை. அவன் தன் வேலையின் மீதே கவனமாக இருந்தான். துரிகையை மாற்றினான். கையை ஏனோ மேலே உயர்த்தினான்.

"என் மண்டையில் என்ன இருக்கிறதென்றே சில வேலைகளில் எனக்குப்புரிவதில்லை." அதே அமைதியான பார்வையினூடே தொடர்ந்து சொன்னாள். "சில வேளை

59936
URAI UNIVERSITY LI

களில் எனக்கே பயமாக இருக்கிறது. பெண்களெல்லாம் அதிகமாகப் படிக்கக்கூடாதா ?''

"ரொம்ப அதிகமாகப் படிக்கக்கூடாதுதான். ஆனால்...

"சொல்லுங்கள் நான் எதைப் படிக்கவேண்டும் ? நான் என்ன செய்யவேண்டும் ? நீங்கள் சொல்வதெல்லாம் செய்கிறேன்.'' என்று சூதற்று நம்பிக்கையோடே என் பக்கம் திரும்பிக் கேட்டாள்.

எனக்கு உடனே என்ன பதிலளிப்பது என்ற புரியவில்லை.

"நான் பேசுவது உங்களுக்கு எரிச்சலாக இருக்கிறதோ ?''

"இல்லை, நிச்சயமாக இல்லை'' என்றேன்.

"மிக்கநன்றி. அப்படியிருக்குமோ என்று கேட்டேன்.'' என்றாள்.

அவளது சிறிய சூடேறியிருந்த கைகள் என்கைகளை இறுக்கமாகப் பிடித்தன.

"ந'—இந்த ஓவியத்தில் 'பின் அணிக்காட்சி' ரொம்ப கறுப்பாக இருக்கிறதோ ?'' என்று கேட்டான் காகின். நான் காகின் பக்கம் எழுந்து போனேன். ஆஸ்யா அங்கிருந்து வெளியே போனாள்.

## 12

ஆஸ்யா ஒரு மணி நேரம் கழித்து மீண்டும் வந்தாள். என்னைப்பார்த்து "நான் செத்துப்போனால் நீங்கள் வருத்தப்படுவீர்களா ?'' என்று கேட்டாள்.

"ஏன் இன்றைக்கு இப்படி விநோதமான எண்ணங்களெல்லாம் உன் மூளையில் உதிக்கின்றன ?''

"நான் சீக்கிரம் செத்துவிடுவேன் என்று ஒரு எண்ணம் என்னுள் ஆழத்தில் இருந்துவருகிறது. சில சமயம் யாராவது என்னிடம் வந்து விடைபெற்றுக்கொண்டால் அதுதான் கடைசி சந்திப்போ என்ற எண்ணமெல்லாம் உண்டாகிறது. இப்படி வாழ்வதைவிட சாவது நல்லதுதான்...ஏன்? நான் ஏதோ நடிக்கிறேன் என்று என்னை அப்படிப் பார்க்கிறீர்களா? சத்தியமாகச் சொல்கிறேன் நான் ஒப்புக்குச் சொல்லவில்லை. அப்படி நினைத்து மறுபடியும் எங்கேயாவது போய்விடாதீர்கள்."

"நீ உண்மையில் என்னைக் கண்டு அஞ்சுகிருயா?"

"அது என் தவறல்ல. அப்படி விசித்திரமாக நான் பழகிவிட்டேன். எனக்கு இனிமேல் சிரிக்கக்கூட முடியாது போலிருக்கிறது" என்ருள்.

அன்று பூராவும் அவள் சோக உணர்ச்சிக்கே ஆட்பட்டிருந்தாள். அவள் மனதில் ஏதோ ஒரு போராட்டம் நிகழ்ந்துகொண்டிருந்தது. அது என்னவாக இருக்கும் என்று என்ருல் புரிந்துகொள்ளவே முடியவில்லை. அடிக்கடி அவள் பார்வை என்மீது பட்டது. அந்த விளங்காத பார்வை பட்டபோதெல்லாம் என் இதயம் நெகிழ்ந்துவிடும்போல் இருந்தது. அவள் அமைதியாகக் காணப்பட்டாலும்கூட, 'ஆவேசமடையாதே' என்று அவளிடம் சொல்லவேண்டும் போலிருந்தது. அவளைப் பார்த்துக்கொண்டேயிருந்தேன். அவள் முகத்தில் ஒரு 'பரிதாபக்களை' தோன்றியது. முகமெல்லாம் வெளிறிப்போயிருந்தது. ஆனால் என்ன காரணத்தாலோ நான் இன்று சரியான மனநிலையில் இல்லை என்ற முடிவுக்கு அவள் வந்திருந்தாள்.

"என்னை அற்பமான ஒரு மூடம் என்று நீங்கள் கருதுகிறீர்கள் என்று நினைக்கிறேன். அதனுல்தான் எனக்கு அதிக வருத்தமுண்டாகிறது. சத்தியம் செய்யுங்கள். என்னை நீங்கள் பூரணமாக நம்புகிறீர்களா? நீங்கள் என்னிடம்

மனம்விட்டுப் பேசவேண்டும். நான் உங்களிடம் உண்மை யையே பேசுகிறேன் நிச்சயமாக நான் அப்படியே இருப் பேன்'' என்ருள். நான் வீடுபோக எத்தனிக்கும் சம யத்தில்.

'நிச்சயமாக' என்ற அவள் வார்த்தையைக் கேட்டதும் எனக்கு மறுபடியும் சிரிப்பு வந்தது.

"சிரிக்காதீர்கள். சிரித்தால் நேற்று நீங்கள் என்னைக் கேட்ட கேள்விகளைத் திருப்பி உங்களைக் கேட்பேன். ஏன் சிரிக்கிறீர்கள்?'' என்ருள். கொஞ்ச நேரம் கழித்து, நேற் றைக்கு சொன்னீர்களே அம்மாதிரி எனக்கு இப்பொழுது சிறகுகள் முளைத்திருக்கின்றன. ஆனல் எங்கு பறப்ப தென்றுதான் தெரியவில்லை.''

"வா, இந்த உலகம் பூராவும் உனக்காகத்தானே இருக்கிறது.''

ஆஸ்யா என் கண்களை உற்றுப்பார்த்தாள்.

"என்மீது இன்று உங்களுக்கு கோபம்தானே?'' என்ருள்.

"எனக்கா உன்மீது கோபமா?''

"ஏன் இரண்டு பேருமே விசனமாக இருக்கிறீர்கள்?'' என்று என்னைப் பார்த்து காகின் கேட்டான். "நான் நேற் றைப்போல் நடன சங்கீதம் வாசிக்கட்டுமா?''

"வேண்டாம், வேண்டாம்'' என்று கைகளைப் பிசைந்தபடி ஆஸ்யா கத்தினள். இன்றைக்கு இல்லை. உலகமே கிடைப்பதாக இருந்தாலும்கூட இன்றைக்கு இல்லை.........''

"யாரும் உன்னை வற்புறுத்தவில்லை. ஏன் அலட்டிக் கொள்கிருய்?''

"உலகத்தைத் தந்தாலும் இல்லை" என்று மறுபடியும் கூவினாள். அவளது முகம் மீண்டும் வெளிறியதைப்போல் காணப்பட்டது.

நான் ரைன் நதியருகே சென்றபோது "அப்படியானால் ஆஸ்யா என்னைக் காதலிக்கிறாளா?" என்ற எண்ணம் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தியது.

## 13

"அப்படியானால் அவள் என்னைக் காதலிக்கிறாளா?" நான் படுக்கையைவிட்டு எழுந்ததும் இந்தக் கேள்வியை நானே கேட்டுக்கொண்டேன். நான் என்ன நினைக்கின்றேன் என்பதைப்பற்றி என் இதயத்தைக் கேட்க நான் விரும்பவில்லை. ஒரு மாதிரியாகச் சிரிக்கும் அந்தப் பெண்ணின் 'உருவம்' என் மனதிலே நன்றாகப் பதிந்திருந்தது. அதை அகற்றுவதென்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல. நான் 'ல'-நகருக்குப்போய் அன்று பூராவும்தங்கியிருந்தேன். ஒரே ஒருமுறைதான் ஆஸ்யாவைப் பார்த்தேன். அவளுக்கு உடம்பு சரியில்லை, தலைவலி. வெளுத்திருந்த அந்த ஒல்லியான நெற்றியில் ஒரு கட்டுப் போட்டிருந்தாள். அவளது கண்கள் ஏறத்தாழ மூடியிருந்தன. ஒருமாதிரி சிரித்துக்கொண்டே 'அது' ஒன்றும் பெரிய விஷயமல்ல. சரியாய் போய்விடும். எல்லாமே போய்விடுகின்றன." என்று சொல்லிவிட்டுத் தன் அறைக்குப் போய்விட்டாள். என் மன நிலை சரியாக இல்லை. காரணம் புரியாத வருத்தம் கலந்த ஒரு சோர்வு நிலையிலிருந்தேன். என்றாலும் நான் உடனே வர முடியவில்லை. நான் திரும்பி வருவதற்கு வழக்கம்போலவே நீண்ட நேரமாயிற்று.

ஒரு மாதிரியான 'பரவசநிலை'யில் அடுத்த நாள் கழிந்தது. ஏதாவது ஒரு வேலை செய்யலாம் என

நினைத்தேன். ஆனால் முடியவில்லை. நான் எதுவுமே செய்ய முடியவில்லை. எதுவுமே நினைக்கக்கூட முடியவில்லை. ஊரைச்சுற்றினேன். வீட்டுக்கு வந்தேன். மறுபடியும் ஊர் சுற்றினேன்.

"நீங்கள்தான் திரு 'ந' வா?" என்று ஒரு குழந்தைக் குரல் திடீரென்று கேட்டது. நான் திரும்பிப் பார்த்தேன். ஒரு சிறு பையன் நின்றுகொண்டிருந்தான். "இதைக் குமாரி கன்னெட் கொடுத்தாள்" என்று ஒரு கடிதத் துண்டை நீட்டினான் அச்சிறுவன்.

கடிதத்தைப் பிரித்துப் பார்த்ததுமே, வேகமான:ஒழுங் கற்ற முறையில் எழுதும் ஆஸ்யாவின் கையெழுத்து தெரிந்தது. "நான் நிச்சயம் உங்களைப் பார்க்கவேண்டும்" அந்த இடிந்த கோட்டைக்கருகிலுள்ள கற்கோவிலில் சரியாக நான்கு மணிக்கு வந்திருங்கள். இன்று ஏதோ பரப்பரப் பாகச் செய்துவிட்டேன். கடவுள் சாட்சியாக, கண்டிப்பாக வாருங்கள். எல்லாம் சொல்லுகிறேன். செய்தி கொண்டு வருபவனிடம் 'சரி' என்று சொல்லுங்கள் என எழுதி யிருந்தாள்.

"ஏதாவது பதில் சொல்லுகிறீர்களா?" என்று கேட்டான் பையன். "சரி என்று சொல்..." என்றேன். பையன் ஓடிவிட்டான்.

# 14

நான் என் அறைக்குப்போய் உட்கார்ந்து அதைப் பற்றியே யோசித்துக் கொண்டிருந்தேன். எனது மனம் வேகமாக அடித்துக்கொண்டது. ஆஸ்யா கொடுத்தனுப்பிய கடிதத்தை மீண்டும் மீண்டும் படித்தேன். கடிகாரத்தைப் பார்த்தேன். அப்பொழுது மணி பனிரெண்டுகூட ஆக

கதவு திறந்தது. காகின் உள்ளே வந்தான். அவன் முகம் இருளடைந்து காணப்பட்டது. எனது கைகளை எட்டிப்பிடித்து அழுத்தமாக அமுக்கிக் கொண்டான். அவன் அதிகமான ஆயாஸப்பட்டிருப்பதாகக் காணப்பட்டான்.

"என்ன நடந்தது?" என்று கேட்டேன்.

நாற்காலியை எடுத்து என் எதிரே போட்டுக்கொண்டு உட்கார்ந்தான். சிரிப்பைச் சிரமப்பட்டு வரவழைத்துக் கொண்டு திக்கித்திணறிப் பேசினன். "நான்கு நாட்களுக்கு முன்னுல் நீ அதிசயப்படும் கதையொன்றைச் சொன்னேன். இன்று நான் சொல்லப்போவதைக் கேட்டால் இன்னும் ஆச்சர்யப்படப் போகிருய் வேறு யாருமாக இருந்திருந்தால் இவ்வளவு 'திறந்த மனத்தோடு' நான் பேசியிருக்கமாட்டேன். ஆனுல் நீ, ஒரு கனவான், எனது நண்பன்; இல்லையா, கேள். என் தங்கை ஆஸ்யா உன்னைக் காதலிக்கிருள்."

எனக்கு என்னமோபோல் இருந்தது. நாற்காலியிலிருந்து பாதி எழுந்தபடியே "உன் தங்கை, என்னை.........

"ஆம்" என்று குறுக்கிட்டான் காகின். அவள் என்னையும் பயித்தியமாக அடித்துவிடுவாள்போல் இருக்கிறது. ஆனுல் அதிருஷ்டவசமாக அவளுக்குப் பொய் சொல்லத் தெரியவில்லை. அதோடு என்னை நன்ருக நம்புகிருள். அவளுக்கு என்ன அருமையான மனது தெரியுமா? ஆனுல் அவள் தன்னைக் கெடுத்துக்கொள்வாள்; ஆம் நிச்சயமாக."

"நீ தவருக நினைக்கிருய்" என்றேன்.

"நிச்சயமாக இல்லை. நேற்றைக்குத்தான் அவளுக்கு உடம்பு சரியில்லையே. நாள் பூராவும் ஒன்றும் சாப்பிடாமல் படுத்திருந்தாள். ஒன்றுமே அவள் சொல்லவில்லை.

எப்பொழுதும்தான் அவள் ஒன்றும் சொல்வதில்லையே.அத ஞல் நான் கவலைப்பட்டுக்கொள்ளவில்லை. மாலையில் கொஞ் சம் காய்ச்சலாக இருந்தது. பகல் இரண்டுமணிக்கு வீட்டுக் காரி வந்து என்னை எழுப்பி "ஆஸ்யா மோசமாக இருக்கிருள் போய்ப் பார்" என்று சொன்ஞள். நான் ஒடிப்போய்ப் பார்த் தேன். உடம்பெல்லாம் நெருப்பாக இருந்தது. உடுப்பைக் கூடக் கழற்ருமல் அழுதுகொண்டே படுத்திருந்தாள். அவள் நெற்றி,கொதித்தது. பற்களைக் கடித்துக் கொண்டிருந்தாள். "உனக்கு என்ன செய்கிறது ஜுரமா ? " என்று கேட்டேன். என்னுடைய கழுத்தைக்கட்டிய பிடித்துக்கொண்டு "இங்கி ருந்து எங்கேயாயவது என்னைத்தூக்கிக்கொண்டுபோய்விடு. நான் சாகக்கூடாது என்றுநீ கருதிஞல் எங்கேயாவதுஎன்னை அழைத்துப்போய்விடு என்று கத்திஞள், எனக்கு விஷயமே விளங்கவில்லை. அவளை சாந்தப்படுத்த முயன்றேன். அவள் அழுகை மேலும் அதிகமாயிற்று.அவள் அழுகையினூடே ஒரு வார்த்தை சொன்ஞன். "அவள் உன்னைக் காதலிக்கிருள் விவேக புத்தியுள்ள நம்போன்றவர்களுக்கு அவர் இதயத்தி லடிக்கிற எண்ணப்புயல்களின் வேகமும் உணர்ச்சியலை களின் ஆழமும் எப்படிப்பட்டவை என்பது தெரிவதில்லை. எண்ணங்களை அவளால் தாக்குப்பிடிக்க முடிவதில்லை. அவைகள் சூருவளியைப்போல்அவளைக் கவ்விக்கொள்கின் றன. நீ அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் இருக்கிருய் என்றும் எனக்குத்தெரிகிறது" என்று காகின் சொல்லிக்கொண்டே போஞன் : " அவள் ஏன் இவ்வளவு தீவிரமாக உன் மீது காதல் கொண்டாள் என்பது எனக்கு விளங்கவில்லை. உன்னை முதல் முதலில் சந்தித்த அன்றே அவளுக்கு இந்த எண்ணம் ஏற்பட்டு விட்டதாம். அதஞல் அன்று 'என்னைத் தவிர வேறுயாரையும் நேசிக்கமாட்டேன்' என்று கூறி அழு தாள். அவளைப் பற்றிய விபரங்கள் பூராவும் உனக்குத் தெரிந்ததாலோ என்னவோ நீ அவளை அசட்டை செய்கிருய் என்று அவள் கருதுகிருள். அவள் கதையை உன்னிடம்

சொல்லியிருக்கிறேனு என்றுகூட கேட்டாள். நான் இல்லை என்று சொன்னேன். என்னமோ அவளது இயற்கை யுணர்வு பயங்கரமாக இருக்கிறது. ஒன்றே ஒன்றைத்தான் திருப்பித் திருப்பிச்சொல்கிருள். " இங்கிருந்து போய்விட வேண்டும், இந்தக் கணமே போய்விட வேண்டும்." நான் பொழுது விடியும் வரை அவளுடன் உட்கார்ந்திருந்தேன். மறு நாள் காலை 'நிச்சயமாக வேறு இடத்திற்கு கூட்டிக்கொண்டு போகிருயா?' என்று 'வாக்கு' வாங்கிக்கொண்டதற்குப் பிறகு தான் தூங்கிஞள். நான் சிந்தித்துச் சிந்தித்துப் பார்த்தேன் வேறு வழிகாண முடியவில்லை. உன்னிடமே சொல்லிவிடு வது என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். ஆஸ்யா சொல்வதுசரி என்றே எனக்குப் படுகிறது. நாங்கள் தனியே பிரிந்து வேறிடத்திற்குப் போவதுதான் நல்லது என்று படுகிறது. இன்று காலையே அப்படி போயிருப்பேன். ஆனல் ஒரு எண்ணம் என்னைத்தடுத்து நிறுத்தியது. ஒரு வேளை......... நீ என் தங்கையை விரும்புகிருயா ? அப்படியாஞல் நான் ஏன் அவளைத்தனியே பிரித்து அழைத்துப் போகவேண்டும்.

" எனவேதான், வெட்கத்தையெல்லாம் விட்டு...... சில வேளைகளில் நீங்கள் சந்தோஷமாகப் பேசிக்கொண்டு இருந்ததைப் பார்த்திருந்த போதிலும்கூட.........உன்னையே கேட்டுவிடுவது என்று முடிவு செய்தேன்." பாவம் காகின் கடைசியாகக் குழம்பிப்போய்ச் சொன்ஞன். " என்னை மன் னித்துவிடு, நான் இப்படிப்பட்ட சங்கடமான நிலையில் சிக்கி னதே இல்லை."

நான் அவன் கைகளைத்தாங்கிப் பிடித்தேன்.

நான் அழுத்தமான தொனியிலேயே சொன்னேன் " அப்படியாஞல் நான் உன் தங்கையை விரும்புகின்றேனு என்று கேட்கிருயா ? ஆம் விரும்புகின்றேன்........." என்றேன்.

காகின் என்னைப்பார்த்துக் கொண்டே கேட்டான் "ஆனால் நீ கல்யாணம் செய்து கொள்ள விரும்பவில்லை; அப்படியா ?"

"இந்தக் கேள்விக்கு நான் எப்படி பதில்சொல்வது இந்த சமயத்தில் என்னால் முடியுமா என்று நீயே யோசித்துப்பார்."

"எனக்குத்தெரியும், இது ரொம்ப சங்கடமான கேள்விதான். இதற்கு உன்னிடமிருந்து நேரடியாக பதில் கேட்க எனக்கு உரிமையில்லைதான், ஆனால் நான் என்ன செய்ய? உன்னால் இப்பொழுது அதைச் செய்ய முடியாது தான். உனக்கு ஆஸ்யாவைச் சரியாகப்புரியாது. இதனால் ஒருவேளை மறுபடியும் அவளுக்கு ஜுரம் வரலாம். அல்லது உன்னை எங்கேயாவது ஒரு இடத்திற்கு வரச்சொல்லி ஓடிவிடலாம் என்றுகூட எண்ணுவாள். மற்றப் பெண்களாக இருந்தால் கொஞ்சம் பொறுத்துக் கொள்வார்கள். ஆனால் ஆஸ்யா அப்படிப்பட்டவளல்ல. இப்பொழுதுதான் முதல் முதலில் அவளுக்கு இப்படிப்பட்ட ஒரு விஷயம் நடந்திருக் கிறது. என் காலைப் பிடித்துக்கொண்டு அவள் அழுத காட்சியை நீ கண்டிருந்தால் அது எப்படி இருந்திருக்கும் என்பது புரியும்."

காகின் சொன்ன "உன்னை எங்கேயாவது ஒரு சந்திக்குமிடத்திற்கு வரச்சொல்லி..." என்ற வார்த்தைகள் என் நெஞ்சைக் குத்தியதுபோல் இருந்தது. எனினும் அவ்வளவு திறந்த மனத்தோடு பேசும் காகினிடம் அப்படியே நானும் பேசாமலிருப்பது நல்லதல்ல என்று நினைத்தேன்.

"ஆம்; நீ சொல்வது சரிதான். ஒரு மணி நேரத்திற்கு முன்னால் எனக்கு இந்தக் கடிதம் வந்தது" என்று சொல்லி அந்தக் கடிதத்தை அவனிடம் நீட்டினேன்.

காகின் கடிதத்தை என்னிடமிருந்து பறித்து வேகமாகப் படித்தான். படித்து முடிந்ததும் கைகளைத் தொங்கப்போட்டு

என்னைப் பார்த்தான். அந்த பாவம் ரஸிக்கத்தக்கதாக இருந்தது. எனினும் நான் சிரிக்கக்கூடிய மனோநிலையில் இல்லை.

"நான் உன்னை ஒரு கனவான் என்று கொஞ்ச நேரத்திற்கு முன்னால் சொன்னேன். இப்பொழுது பார் அது சரி என்று நிர்ணயமாகிவிட்டது" என்றான். மேலும் தொடர்ந்து "ஆனால் இப்பொழுது என்ன செய்வது ? அவள் ஏன் இப்படி படபடக்கிறாள், அந்த ஆவேசத்தில் உனக்கு இந்தக் குறிப்பு எழுதியனுப்ப எப்படி நேரம் கிடைத்தது? இப்பொழுது என்னதான் செய்யவேண்டும் என்று எண்ணுகிறாள்? உன்னை அழைத்துக்கொண்டு எங்கேயாவது ஓடப் போகிறாளா ? அப்படியானால் எங்கே?"

நான் காகினை சாந்தப்படுத்தினேன். எவ்வளவு அமைதியாகப் பேச முடியுமோ அவ்வளவு அமைதியாக என்ன செய்யவேண்டும் என்பதைப்பற்றிப் பேசினோம்.

விளையக்கூடிய தகராறுகளைத் தவிர்க்கக்கூடிய முறையில் நாங்கள் கடைசியாக வந்த முடிவு இதுதான்: நான் ஆஸ்யா குறிப்பிட்டிருந்தபடி அந்தச் சந்திக்குமிடத்திற்குச் சென்று ஆஸ்யாவிடம் எல்லா விஷயங்களையும் பேசுவது, காகின் இந்த விஷயத்தை என்னிடம் சொல்லியதாகக் காட்டிக்கொள்ளாமல் வீட்டிலிருப்பது, பின்னர் அன்று மாலை இருவரும் சந்திப்பது.

என் கைகளைப் பிடித்துக்கொண்டே காகின் "நான் உன்னைத்தான் நம்பிக்கொண்டிருக்கின்றேன். எங்கள்மீது கொஞ்சம் கருணைகாட்டு. எப்படியும் நாங்கள் நாளை போய் விடுவோம். நீதான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ளப் போவதில்லையே" என்றான்.

"இன்று மாலைவரை எனக்கு அவகாசம் கொடு" என்றேன்.

“ நல்லது, ஆனால் நீ கல்யாணம் செய்துகொள்ளமாட் டாய ” என்று சொல்லிக்கொண்டே போய்விட்டான்.

நான் படுக்கையில் விழுந்தேன். என் தலை கனத்தது. எதிர்பாராமல் ஏற்பட்ட இந்தப் புதிய விஷயங்கள் புழுக்கள் போல் மண்டையைக் குடைந்துகொண்டிருந்தன. இவ் வளவு பச்சையாக அத்தனையையும் என்னிடம் பேசியதால் எனக்கு காகின்மீது, ஆஸ்யாமீதுகூட ஒரு வெறுப்புத்தான். எனினும் அவள் காதல் என்னை அலைக்கழித்தது. ஏன் அவள் இவ்வளவு அவசரப்பட்டு அப்படிப்பட்ட முடிவுக்கு வர வேண்டும் என்ற எண்ணங்களெல்லாம் என்னைச் சந்தேகங் களுக் குள்ளாக்கிக் குழப்பிக்கொண்டிருந்தன.

இப்படிப்பட்ட மனோபாவங்களுள்ள இந்த பதினேழு வயதுப் பாவையை நான் மணந்துகொள்வதா? அதெப் படி? என்னால் முடியும்?

## 15

குறித்த நேரத்தில் ரைன் நதியைக் கடந்து அக் கரைக் குப் போனேன். அங்கே காலையில் வந்திருந்த அதே பையன் நின்றுகொண்டிருந்தான். அவன் எனக்காகத்தான் காத்திருக்கவேண்டும்.

“ குமாரி கன்னெட்டிடமிருந்து ” என்று சொல்லி ஒரு துண்டுக் கடிதத்தை என்னிடம் நீட்டினான்.

ஆஸ்யா ‘சந்திக்குமிடத் ’தை மாற்றியிருந்தாள். இன்னும் ஒன்னறை மணி நேரத்தில் நான் அந்தக் கோவிலுக்குப் போவதாக இருந்தது. ஆனல் நான் இப்பொழுது மூன்ருவது மாடியிலிருக்கும் லூயி சீமாட்டியின் வீட்டிற்குப் போக வேண்டும்.

“இதற்கும் உங்கள் பதில் ‘ஆம்’ தானே” என்றான் பையன்.

‘ஆம்’ என்று சொல்லிவிட்டு ரைன் நதிக்கரையில் நடந்துகொண்டிருந்தேன். வீட்டிற்குப் போய் திரும்பி வருவதற்கு நேரம் இல்லை. ஊரைச் சுற்றிக்கொண்டிருக்கவும் நான் விரும்பவில்லை. அந்த ஊரின் எல்லையில் ஒரு சிறு பூங்கா இருந்தது. மதுபானம் குடிப்பவர்களுக்காக அதில் சில மேஜை நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அங்கு போனேன். மத்திய வயதுள்ள சில ஜெர்மானியர்கள் ‘நவ தாய ஆட்டம்’ (Skittles) ஆடிக்கொண்டிருந்தனர். அந்த மரப் பந்து சப்தமிட்டுக்கொண்டு உருண்டுகொண்டிருந்தது. அடிக்கொருதடவை ஆரவாரம் கேட்டது. கத்திக்கத்தி கண்களெல்லாம் சிவப்பேறிய ஒரு அழகிய பெண் (Waitress) எனக்கு ஒரு கோப்பை ‘பீர்’ கொண்டுவந்து வைத்தாள். நான் அவள் முகத்தை உற்றுப் பார்த்தேன் அவள் வேகமாகத் திரும்பிப் போய்விட்டாள்.

“ஹன்சன் இன்று சோகமாக இருக்கிறாள். அவள் ஒரு பட்டாளத்தானைக் காதலிக்கிறாள்” என்றான் எனக்குப் பக்கத்தில் உட்கார்ந்திருந்த சிவந்த கன்னங்களையுடைய தடித்தமனிதன். அவன் அந்த ஊர்க்காரன்.

நான் அவளைப் பார்த்தேன். ஒரு மூலையில் கைகளால் முகவாய்க்கட்டையைத் தாங்கிக்கொண்டு நின்றுகொண்டிருந்தாள். அவள் கைவிரல்களில் ஓரிருதுளி கண்ணீர் உருண்டோடியது. எவனோ பீர் வேண்டும் என்று கத்தினான். ஒரு கோப்பை பீர் கொண்டுவந்து அங்கே வைத்துவிட்டு மறுபடியும் தன்னிடத்திற்கே போய்விட்டாள். அவள் வேதனை என்னிலும் பிரதிபலித்தது. நான் சந்திக்கப்போகும் சம்பவத்தை நினைத்துப் பார்த்தேன். என் மனதில் கடுமையான, பரபரப்பான எண்ணங்கள் அலைபாய்ந்துகொண்

டிருந்தன. என் இதயம் பாரம் தாங்காமல் அழுந்தியது. அந்த இதயத்தோடு நான் அவளைச் சந்திக்கப்போகிறேன், இது ஏதோ பரஸ்பரம் காதலிக்கும் இருவரும் சேரப் போகும் சந்திப்பல்ல. வாக்குக் கொடுத்து விட்ட தால் அதைக் காப்பாற்றுவதற்காக நான் அங்கு போகிறேன். நீ அவளோடு சரஸமாட முடியாது என்று காகின் சொன்ன வார்த்தைகள் என் நெஞ்சில் வேலைப் பாய்ச்சியமாதிரி யிருந்தது. நான்கு நாட்களுக்கு முன்னல் நான் ரைன் நதியில் போய்க்கொண்டிருக்கும்பொழுது ஏதோ ஒரு பெரிய இன்பம் எனக்காகக் காத்திருக்கிறது என்று நான் எண்ணவில்லை? இன்று அதே இன்பம் எனக்காகக் காத்திருக்கிறது. நான் நினைத்தால் அதைவாரி எடுத்துக் கொள்ள முடியும். ஆனல் நான்தான் தாமதிக்கிறேன். நான் தான் அதைத் தள்ளிவிடுகிறேன். அப்படி தூரத் தள்ளிவிட வேண்டும் என்று ஏனே நான் நிர்ப்பந்திக்கப்படுகின்றேன், அந்தத் 'திடீர் அவசரம்' என்னைக் குழப்பத்தில் ஆழ்த்துகிறது. கவர்ச்சிகரமான ஆனல் விசித்திரமான எண்ணங்களை யுடைய ஆஸ்யாவின் கடந்தகாலம், அவள் வளர்ந்தவிதம் எல்லாம் என்னை அதிர்ச்சியுறச் செய்துவிட்டன என்பது வாஸ்தவம்தான். முரண்பட்ட கருத்துக்கள் ஒன்றை யொன்று வெல்ல வெகு நேரமாகவே போராடிக்கொண்டிருக் கின்றன. நான் அவளைச் சந்திக்கும் நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது.

நான் அவளைக் கல்யாணம் செய்துகொள்ள முடியாது. நான் காதலிக்கிறேன் என்பதுகூட அவளுக்குத் தெரியக் கூடாது. கடைசியாக எனது முடிவுக்கு வந்துவிட்டேன்.

நான் எழுந்து ஒரு நாணயத்தை எடுத்து 'ஹன் சன்' கையில் கொடுத்தேன். அவள் எனக்கு வந்தனம் கூட சொல்லவில்லை! லூயி அம்மை வீட்டை நோக்கிப் போனேன்.

மாலையின் நிழல் நீண்டுகொண்டே போயிற்று. அந்த இருண்ட தெருவின்மேல் வானத்திலே அஸ்தமிக்கும் சூரியனின் செவ்வொளிபட்டுத் தெறித்தது. நான் மெது வாக அந்த வீட்டுக் கதவை தட்டினேன். உடனே கதவு திறக்கப்பட்டது. உள்ளே போனேன். ஒரே இருட்டாக இருந்தது.

"இந்தப் பக்கமாகச் செல்லுங்கள், உங்களை எதிர் பார்த்துக்கொண்டே இருக்கிருள்" என்ருள் ஒரு கிழவி.

"நீங்கள்தான் லூயி சீமாட்டியா?" என்று கேட்டேன்.

"ஆம், அழகிய வாலிபனே, நான்தான்" என்ருள்.

என்னை அழைத்துக்கொண்டு மாடிப்படிகளில் ஏறினுள். மூன்ருவது மாடிக்கு ஏறியதும் நின்ருள். அங்குள்ள அறையி லிருந்துவந்த மங்கிய ஒளியில் மாஜி நகர அதிகாரியின் மனைவியின் சுருங்கிய முகத்தைக் கண்டேன். தேனெழுகும் சிரிப்பைச் சிந்திக்கொண்டு கண்களைச் சுழற்றி ஒரு சிறிய கதவைச் சுட்டிக்காட்டினுள். நான் நடுங்கிய கைகளோடு கதவைத் தள்ளினேன். நான் உள்ளே சென்றதும் கதவு படீரெனச் சாத்திக்கொண்டது.

# 16

அந்த அறை பூராவும் ஒரே இருட்டாகத் தோன்றிற்று. நுழைந்ததும் ஆஸ்யாவைக் காணவில்லை. பயத்தால் நடுங் கும் பறவையைப்போல உடம்பெல்லாம் ஒரு பெரிய போர்வையால் போர்த்திக்கொண்டு ஜன்னலுக்கருகில் மறுபக்கம் பார்த்துக்கொண்டு உட்கார்ந்து இருந்தாள். அவள் பெருமூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். உடம்பெல்லாம் நடுங்கிக்கொண்டிருந்தது. அவள் பார்வையே பரிதாபகர

மாக இருந்தது. நான் அவளருகில் போனேன். அவள் மேலும் அந்தப் பக்கம் திரும்பினுள்.

“ அன்ஞ நிகவ்லேஞ ” நான் கூப்பிட்டேன்.

அவள் தன்னைச் சரி செய்துகொண்டு என்னைப் பார்க்க எத்தனித்தாள். ஆனல் முடியவில்லை. அவள் கையைப் பிடித்தேன். ‘ஜில்’லென்று உயிரற்று என் கையில் கிடந்தது.

“ நான் நினைத்தது ...” என்று என்னவோ பேச ஆரம் பித்தாள். அவளது வெளிறிய உதடுகள் அசைய மறுத்தன. “நான் நினைத்தது......இல்லை. என்னல் சொல்ல முடிய வில்லை”என்று நிறுத்தினுள்; அவளால் பேசவே முடியவில்லை,

நான் மெதுவாக அவளருகில் உட்கார்ந்தேன்

“ அன்ஞநிகவ்லேஞ” மறுபடியும் கூப்பிட்டேன். ஆனல் ஏனே என்னலும் தொடர்ந்து பேச முடியவில்லை.

கொஞ்சநேரம் அமைதி நிலவிற்று. அவள் கைகளைப் பிடித்துக்கொண்டு அவள் முகத்தையே பார்த்துக்கொண் டிருந்தேன். அவள் போர்வைக்குள்ளே சுருண்டிருந்தாள், சிரமப்பட்டு மூச்சு விட்டுக்கொண்டிருந்தாள். தன்னை அடக் கிக்கொள்வதற்காக, அழாமலிருப்பதற்காக கீழுதட்டைப் பற் களால் அழுத்திக் கடித்துக்கொண்டிருந்தாள். அவளையேநான் பார்த்துக்கொண்டிருந்தேன். அவளது பரிதாபகரமான தோற்றம் வேதனையை யளித்தது. எப்படியோ சிரமப்பட்டு வந்து இந்த நாற்காலியில் விழுந்திருக்கிருள். என் மனம் உருகிக்கொண்டிருக்கிறது.

“ஆஸ்யா” நான் மெதுவாகக் கூப்பிட்டேன். ஒருவேளை நான் கூப்பிட்டது அவள் காதில் விழவில்லையோ என்னவோ.

மெதுவாகக் கண்களை உயர்த்தி என்னைப் பார்த்தாள். காதலினுல் உருகும் பெண்ணின் அந்த முகம் இருக்கிறதே, அதை வர்ணிப்பதற்கு வார்த்தைகள் ஏது? அந்தக்

கண்கள் கெஞ்சின, நம்பின, கேள்விகள் கேட்டன, பணிந்தன......அந்தப் பார்வையை என்னுல் தாக்குப்பிடிக்க முடியவில்லை. என் நரம்புகளிலெல்லாம் நெருப்புப் பொறிகள் பறப்பதைப்போன்றிருந்தன. நான் மெதுவாகக் குனிந்து அவள் கைகளை முத்தமிட்டேன். ஏதோ ஒருவித முணகல் சப்தம் கேட்டது. உடனே நடுங்கிய கரங்கள் என் தலையைத் தடவிக்கொண்டிருந்ததை உணர்ந்தேன். தலையை உயர்த்தி அவள் முகத்தைப் பார்த்தேன். அதற்குள் எவ்வளவு மாற்றம். இப்பொழுது அவள் முகத்தில் பயத்தின் சாயை இல்லை. 'இன்ப ஒளி' வீசிற்று. உதடுகள் கொஞ்சம் பிரிந்திருந்தன. நெற்றி சலவைக் கல்லைப்போலிருந்தது. அவளது சுருண்ட கேசம் காற்றில் அசைந்தாடிக்கொண்டிருந்தது. கொஞ்ச நேரத்தில் எல்லாவற்றையும் மறந்துவிட்டேன். அவள் கையைப் பிடித்து என் பக்கம் இழுத்தேன். என் கையோடு அவள் உடல் பூராவும் வந்தது. அவள் போர்த்தியிருந்த போர்வை நழுவி கீழே விழுந்தது. அவளது தலை மெதுவாக என் நெஞ்சில் சாய்ந்தது......

"நான் உன்னுடையவள்தான்" பட்டும் படாததுமாக இந்தச் சப்தம் காதில் விழுந்தது.

எனது கைகள் நழுவி அவள் இடுப்பைச் சுற்றின...... திடீரென காகின் சொன்னது மின்னலைப்போல் என் நினைவுக்கு வந்தது. "நாம் என்ன செய்கிறோம்" என்று கத்திவிட்டேன். "உன் அண்ணன்– அவனுக்கு எல்லாம் தெரியும். இப்பொழுது நான் உன்னைப் பார்க்க வந்ததுகூட அவனுக்குத் தெரியும்."

ஆஸ்யா அதிர்ச்சியால் பின்னடைந்தாள்.

'ஆம்' என்று சொல்லிக்கொண்டே எழுந்தேன். அந்த அறையின் அடுத்த மூலையில் போய் நின்றுகொண்டு, "உன் அண்ணனுக்கு எல்லாம் தெரியும். எல்லாவற்றையும் நான் சொல்லும்படி வந்துவிட்டது."

"சொல்லும்படி வந்துவிட்டதா?" என்று திருப்பிக் கேட்டாள். அவள் இன்னும் தன் நிலைக்கு வரவில்லை என்பது அவள் தோற்றத்திலிருந்து தெரிந்தது. எனவே நான் சொன்னதன் முழு அர்த்தத்தையும் அவள் விளங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

"ஆம். எல்லாம் உன்னால் வந்த வினைதான்" என்று அழுத்தமாகச் சொன்னேன். "நீ ஏன் இப்படி அலட்டிக் கொள்கிறாய்? ஏன் எல்லாவற்றையும் உன் அண்ணனிடம் நீ சொன்னாய்? இன்று அவன் என்னிடம் வந்து நீ சொன்னதையெல்லாம் சொன்னான்." ஆஸ்யாவைப் பார்க்காமலே அந்த அறையில் மேலும் கீழும் உலவிக்கொண்டிருந்தேன். "எல்லாம் கெட்டுவிட்டது. ஆம், எல்லாம்."

ஆஸ்யா ஏனோ இடத்தைவிட்டு எழுந்திருக்க எத்தனித்தாள். "ஒரு கனவானோடு பேசிக் கொண்டிருக்கிறாய். ஆம் கனவானோடு. கடவுள் சாட்சியாகச் சொல். ஏன் இப்படி நிலை தடுமாறி நிற்கிறாய்? என்னில் ஏதாவது மாற்றத்தைக் காண்கிறாயா? இன்று உன் அண்ணன் என்னைப் பார்க்க வந்தபொழுது உண்மையை என்னால் மறைத்துச் சொல்ல முடியவில்லை."

'நான் என்ன சொல்லுகின்றேன்' என்று என்னையே திருப்பிக் கேட்டுக்கொண்டேன். நான் அவளை ஏமாற்றுகிறேன். காகினுக்கு எங்கள் சந்திப்பு எல்லாம் தெரியும். இந்தக் குழப்பங்களெல்லாம் என் தலையைச் சுழற்றியது.

"நான் அண்ணனை அனுப்பவில்லை. அவனாகத்தான் வந்திருக்கின்றான்" என்றாள் ஆஸ்யா.

"ஆக, இப்பொழுது என்னசெய்ய வேண்டுமென்கிறாய்? எங்கேயாவது ஓடிப்போக விரும்புகின்றாயா?......"

"ஆம். நான் போய்த்தான் ஆகவேண்டும்" அவள் வார்த்தைகளில் முன்மாதிரியே அழுத்தம் இருந்தது. "உங்களிடம் விடைபெற்றுக்கொள்ளத்தான் உங்களை வரச் சொல்லியிருந்தேன்."

"நான் உன்னைப் பிரிவது என்பது அவ்வளவு சுலப மாக நடக்கக்கூடியது என்று எண்ணுகிருயா ?"

"ஆனுல் ஏன் என் அண்ணனிடம் இதைச் சொன் னீர்கள் ?" என்று குழப்பமடைந்த குரலிலேயே கூறினுள்.

"எனக்குச் சொல்லாமல் வேறு வழியே தோன்ற வில்லை, அதற்கு காரணம் உன் நிலைதான்......"

"நான்கதவைப் பூட்டிக்கொண்டு உள்ளே படுத்திருந் தேன். ஆனுல் அந்த வீட்டுக்காரியிடம் மற்ருெரு சாவி இருக்கிறது என்பது எவருக்கும் தெரியாது" என்ருள் ஆஸ்யா.

அந்தச் செய்தியை அவள் சொல்லிய மாதிரியில் எனக்கு ஆத்திரம்தான் வந்தது......ஆனுல் பாவம், உண் மையான நேர்மை மிகுந்த குழந்தையுள்ளம் கொண்டவள்.

"ஆம். இப்பொழுது எல்லாமே முடிந்துவிட்டது. நாம் தனித்தனியே பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை." என்றேன் நான். ஆத்திரத்தோடு அவளைப் பார்த்தேன். அவள் திடீரென சலனமுற்ருள். தன் நடவடிக்கைகளுக் காக வருத்தமுற்று மனம் நாணுபவளைப்போல காணப் பட்டாள். நானும் ஜுரம் பிடித்தவனைப்போல் பேசிக் கொண்டிருந்தேன் "நீ ஏன் அவ்வளவு சீக்கிரம் உணர்ச்சி வசப்பட்டுவிட்டாய் என்பது எனக்குப் புரியவில்லை. இப் பொழுதுதான் காதல் நம்மிடையே முளைவிட ஆரம்பித்தது. அது இன்னும் சரியாக வளரக்கூட இல்லை. அதற்குள் அதை நீ அழித்துவிட்டாய். என்னை உன்னுல் நம்ப முடிய வில்லை. சந்தேகிக்க ஆரம்பித்துவிட்டாய்"

நான் பேசிக்கொண்டிருக்கும்பொழுது ஆஸ்யா முன்னே குனிந்துகொண்டே வந்தாள். திடீரென அவள் முழங்கால்களில் விழுந்தாள். அவளது கைகள் தலையை

தாங்கிப் பிடித்துக் கொண்டிருந்தன. தேம்பித்தேம்பி அழுதாள். அவளருகே சென்று அவளை நிமிர்த்தப் பார்த் தேன். அவள் என்னைத் தடுத்தாள். ஒரு பெண்ணின் கண்ணீருக்கு முன்னால் நான் நிற்க சக்தியற்றவனானேன். அந்தக் கண்ணீர் என்னை என்னவோ செய்ததுபோல் இருந்தது.

"அன்னா நிகலவ்லேனா ஆஸ்யா" நான் மறுபடியும் கூப் பிட்டேன்: "உன்னைக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். தயவுசெய்து அழாதே. அழுகையை நிறுத்து......"மறு படியும் கைகளால் அவளை தூக்கி நிறுத்தப் போனேன்.

ஆனால் எதிர்பாராத முறையில் ஊர்ந்துகொண்டே கதவுப்பக்கம் போய் மின்னலைப்போல் மறைந்துவிட்டாள்.

சில விநாடிகள் கழித்து அந்த அறைக்கு லூயி சீமாட்டி வந்தாள். நான் மின்னல் தாக்குண்டவனைப்போல் அந்த அறையின் நடுவிலேயே அசைவற்று நின்றுகொண்டிருந் தேன் எதிர்பாராத முறையிலே அந்தச் சந்திப்பு ஒரு முடிவும் இல்லாமல் முடிந்துவிட்டதை எண்ணிப் பார்த்தேன். இன்னும் நான் சொல்ல வேண்டியதில் நூறில் ஒரு பாகம் கூட சொல்லியாகவில்லை. நான் சொல்லி முடித்த வற்றிலிருந்து என்ன நடக்குமோ என்றுகூட என்னால் கவனிக்க முடியவில்லை......"

"குமாரி கென்னெட்டி போய்விட்டாளா ?" என்று கண் ணிமைகளை உயர்த்தியபடியே லூயி சீமாட்டி கேட்டாள்.

நான் அவளை வெறிக்கப் பார்த்துக்கொண்டே வெளி யேறினேன்.

# 17

நான் நகர்ப்புரத்தைத் தாண்டி திறந்த வெளியை அடையும்வரை நடந்துகொண்டே இருந்தேன். களைப்பி லும், வெறுப்பிலும் நான் ஆழ்ந்துவிட்டேன். நான் என்னையே கடிந்துறைத்துக் கொண்டேன். ஏன் சந்திக்கு மிடத்தை மாற்றிஇந்தக் கிழவியின் வீட்டுக்கு வந்தாள்? அதற் குரிய காரணங்கள் என்ன என்பதைக்கூட நான் தெரிந்து கொள்ளவில்லை. அந்த அறையிலிருந்து அவள் வெளி யேறுவதை நான் தடுத்து நிறுத்தவில்லை. எங்கோ இருக் கும் இருண்ட அறையிலே தனியே இருக்கும்பொழுது அவளை மறுதளிக்கத் துணிந்தேன். அவளைத் திட்டக்கூட நான் தயங்கவில்லை. ஆனால் இப்பொழுது அவளது பிரமை என்னைத் துரத்திக்கொண்டே வந்தது. எனது செயலுக்கு மன்னிக்கும்படி கெஞ்சிக் கொண்டிருந்தேன். வெளிறிய முகம், கண்ணீர் தேங்கிய கண்கள், கழுத்தைச்சுற்றியிருந்த கேசச்சுருள், மெதுவாக தன் தலையை என் நெஞ்கின்மீது சாய்த்திருந்தது இத்தனையும் என் நினைவுக்கு வந்து என்னைச் சித்ரவதை செய்துகொண்டிருந்தது. "நான் உங்களுடைய வள்தான்" என்று அவள் சொன்னது திருப்பித் திருப்பி, என் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தது. "நான் மன சாட்சிப்படித்தான் நடந்துகொண்டேன்" என்று நான் என்னைச் சமாதானப் படுத்திக்கொண்டேன். ஆனால் அது உண்மைதானா? இதுதான் என் அபிலாஷைகளின் முடிவா? உள்ளபடியே என்னால் அவளைப் பிரிந்து தனியாக இருக்க முடியுமா? பைத்தியக்காரத்தனம். பைத்தியக் காரத்தனம்" என்று கசப்பான வேதனையோடு சொல்லிக் கொண்டேன்.

இரவு கவிந்துகொண்டிருந்தது. நான் ஆஸ்யாவின் வீட்டை நோக்கிப் போனேன்.

காகின் வெளியே வந்தான். தூரத்திலேயே என்னைப் பார்த்து "என் தங்கையைச் சந்தித்தாயா?" என்று கேட்டான்.

"அவள் வீட்டிலில்லையா?" என்று கேட்டேன்.

"இல்லை"

"இன்னும் அவள் திரும்பிவரவில்லையா?"

"இல்லை. ஆனால் என்னை மன்னித்துவிடு. நாம் பேசிக்கொண்டதைப்போல் நான் வீட்டிலில்லை. கோவிலுக்குச் சென்றேன். அவளை அங்கே காணோம். எனவே பிறகு வரவில்லை என்று நினைக்கிறேன்" என்றான்.

"அவள் கோவிலில் இல்லைதான்"

"அப்படியானால் நீ அவளைச் சந்திக்கவே இல்லையா?

நான் அவளைச் சந்தித்தேன் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

"எங்கே?"

"லூயி அம்மா வீட்டில். ஆனால் ஒரு மணி நேரத்திற்கு முன்னமேயே நாங்கள் பிரிந்து விட்டோம்" என்றேன். அவள் நிச்சயம் வீட்டிற்குத்தான் வந்திருப்பாள் என்று நம்பினேன்.

"அப்படியானால், நாம் காத்திருப்போம்." என்றான் காகின்.

நாங்கள் வீட்டிற்குப்போய் அருகருகே அமர்ந்தோம். ஒருவரும் பேசவில்லை. இருவருக்குமே ஒருமாதிரி அவமானமாகவே இருந்தது. காதைத் தீட்டிக்கொண்டு கதவுகளையே பார்த்தவண்ணம் உட்கார்ந்திருந்தோம். கடைசியில் காகின் எழுந்திருந்தான்.

"இது என்னால் பொறுக்கமுடியவே இல்லை. ஆஸ்யா எனக்குச் சாவைத்தான் தேடித்தரப்போகிருள். ஆமாம்...... சரி நாம் அவளைத்தேடிப் பிடிக்கலாம் வா."

ஆஸ்யாவைத்தேடி வெளியே சென்ருேம். அப்பொழுது நன்ருக இருட்டிவிட்டது.

காகின் தனது தொப்பியை முன்னுக்குத் தள்ளியவாறே "நீ அவளிடம் என்ன பேசினுய்?" என்று கேட்டான்.

"நான் அவளுடன் ஐந்து நிமிஷங்கள்தான் இருந்தேன். நாம் என்ன பேசிக்கொண்டோமோ அதைச் சொன்னேன்."

"நாம் இரண்டு பேரும் தனித்தனியாகத் தேடுவோம். அப்பொழுது அவளைச் சுலபமாகக் கண்டுபிடித்துவிடலாம். எப்படியிருப்பினும் இன்னும் ஒரு மணி நேரத்தில் மீண்டும் நாம் சந்திப்போம்" என்ருன்.

# 19

நான் திராட்சைத் தோட்டப்பக்கமாக இறங்கிப்போய் மீண்டும் வேகமாகவே நகர்ப் பக்கம் வந்தேன். தெருத் தெருவாக அலைந்து தேடினேன். ஹாயி அம்மையின் வீட்டைக்கூடப் பார்த்தேன். ரைன் நதிக்கரையின்மீது ஓடிக்கொண்டிருந்தேன். யாராவது ஒரு பெண்ணைப் பார்த்தால் அது ஆஸ்யா என்று நினைத்து நெருங்குவேன். அது வேறுயாராவதாக இருக்கும். ஆஸ்யாவைக் காணவே முடியவில்லை, நான் அவளைத் தேடிக் களைத்துப்போவது மட்டுமல்ல உள்ளூர ஒருபயமும் ஏற்பட்டது. எனக்கு ஏற்பட்ட பயம் மாத்திரமல்ல, கூடவே இன்னொரு உணர்ச்சியும் என்னை அலைக்கழித்தது. காதல். ஆம்; தெள்ளிய காதல்! என் கைகளைப் பிசைந்து கொண்டேன். அந்த

இரவின் இருளிலே 'ஆஸ்யா ஆஸ்யா' என்று அலறிப் பார்த்தேன். 'நான் உன்னைக் காதலிக்கிறேன் ஆஸ்யா' என்று திருப்பித் திருப்பிக் கத்தினேன். நான் நிச்சயமாக இனி அவளைப் பிரியவேமாட்டேன். அந்த சில்லென்ற கரங்களை மீண்டும் பற்றுவதற்காக, அந்த மெல்லிய குரலோசையை மறுபடியும் கேட்பதற்காக, அந்த முகத்தை இன்னொரு முறை காணுவதற்காக இந்த உலகத்திலுள்ள எதை வேண்டுமானாலும் இழக்கத்தயாராக இருந்தேன். அவள் எனக்கு வெகு அருகிலிருந்தாள். என்மீது முழு நம்பிக்கையோடு அங்கு வந்திருந்தாள். தெளிந்த உள்ளத்தோடு, கபடமறியா எண்ணத்தோடு, கரம்படாத முல்லையாக, புத்தம் புதிய மலராக—என்னிடம் வந்திருந்தாள். அவளை இழுத்துப் பிடித்து என் இதயத்தோடு ஒத்திக்கொள்ளாமல் எங்கேயோ தூர எறிந்துவிட்டேன் என்ற எண்ணம் என்னை பைத்தியமாக்கியது.

அவள் எங்கே போயிருப்பாள்? ஏதாவது செய்து கொண்டாளோ? ஒன்றும் செய்யமுடியாத வெறியிலே கத்தினேன். அந்த நதிக்கரையிலே ஏதோ வெண்மையாக தெரிவதைப் போலிருந்தது. அந்த இடம் எனக்குப் பழக்கமானதுதான். அங்கே எழுபது வருடத்திற்கு முன் இறந்து போன ஒருவனின் சமாதி. அதில் பழைய எழுத்துக்களில் பொறிக்கப்பட்ட ஒரு சிலுவைக்கல் பாதி புதைக்கப்பட்டிருக்கிறது. என் இதயம் நின்றுவிடும்போல் இருந்தது. நான் சிலுவையிடம் ஓடினேன். அந்த வெண்மையுருவம் மறைந்துவிட்டது. "ஆஸ்யா!" நான் அலறினேன். என்னுடைய பலத்த சப்தம் எனக்கே கேட்பதற்குப் பயங்கரமாக இருந்தது. ஆனால் யாருமே அதற்கு பதிலளிக்கவில்லை.

ஒரு வேளை தாகினுவது கண்டுபிடித்திருப்பானோ?

# 20

திராட்சைத் தோட்டத்துப் பக்கமாக வேகமாகப்போகும் பொழுது ஆஸ்யாவின் அறையில் விளக்கு எரிவதைக் கண்டேன்...... இது ஓரளவுக்கு மனச்சாந்தியை அளித்தது.

வீட்டிற்கு முன்னல் போனேன். வீடுசாத்தப்பட்டிருந்தது. கதவைத்தட்டினேன், கீழ்த் தளத்திலிருந்து ஒரு ஜன்னல் திறக்கப்பட்டது. அந்த அறை இருட்டாக இருந்தது. எனினும் அங்கே காகின் நிற்பது தெரிந்தது.

"அவளைக் கண்டுபிடித்தாயா?" என்று கேட்டேன்.

"அவள் வந்துவிட்டாள்" என்று ரகஸியமாய்ச் சொன்னன்: "இப்பொழுதுதான் தன் அறையில் உடுப்புகளை மாற்றிக்கொண்டு இருக்கிருள். கவலைப்பட வேண்டாம்."

"கடவுளுக்கு வந்தனம்" சொல்லமுடியாத மனத்திருப்யோடும் சந்தோஷத்தோடும் சொன்னேன். "கடவுளுக்கு நன்றி. சரிதான். ஆனல் நான் உன்னிடம் மறுபடியும் கொஞ்சம் பேசவேண்டும்"

"இப்பொழுதல்ல, மற்றொரு சமயத்தில். வணக்கம்" என்ருன் மெதுவாக ஜன்னலை பார்த்துக்கொண்டே.

"வணக்கம்—எல்லாவற்றையும், நாளைக்கு முடிவு செய்துவிடுவோம்" என்று சொன்னேன்.

"வணக்கம்" என்ருன் காகின் மறுபடியும். ஜன்னல்கள் சாத்தப்பட்டன.

ஜன்னலைத் தட்டலாமா? என்றுகூட யோசித்தேன். காகினைக் கூப்பிட்டு நான் உன் தங்கையை மணந்து

கொள்ளபோகிறேன். அதற்குத் தடையில்லையே?'' என்று கூற எத்தனித்தேன். ஆனால் அந்த நேரம் 'ஜோடிப்பொருத்தம்' பேசும் நேரமல்ல என்று எண்ணினேன். நாளைவரைக் காத்திருப்போம் என்று நினைத்தேன்: "மறுநாள் நான் மிகுந்த சந்தோஷமுள்ளவனாக இருப்பேன்."

அடுத்த நாள் சந்தோஷமாக இருக்க முடியும் என்று எண்ணினேன். ஆனால் சந்தோஷத்திற்கு நாளை என்பதும் நேற்று என்பதுமில்லை. சந்தோஷம் கடந்த காலத்தை மறந்து விடுகிறது, அடுத்த நாளையைப் பற்றி சிந்திப்பதில்லை. அதற்கு நிகழ்காலம்தான் தெரியும். அதுவும் அந்த நாள்முழுதும் அல்ல, அந்த நிமிஷம் தான்.

நான் எப்படி 'ச'—வுக்குத் திரும்பிப்போனேன் என்பது எனக்குத் தெரியாது. எனது கால்கள் அங்குகொண்டு செல்லவில்லை. படகுகூட அல்ல. அகலமான சக்திமிக்க இறக்கைகள்தான் என்னைக்கொண்டு சேர்த்திருக்கவேண்டும். அந்தப் புதர்களைத் தாண்டிப் போகும்போது ஒரு வானம்பாடி பாடிக்கொண்டிருந்தது. நீண்டநேரம் அங்கேயே நின்று அதைக் கேட்டுக்கொண்டிருந்தேன். எனது காதலைப் பற்றியும், என் சந்தோஷத்தைப் பற்றியுமே அது பாடிக் கொண்டிருந்ததாக எனக்குத்தோன்றியது.

## 21

அடுத்த நாள் காலை வழக்கம்போல் காகின் வீட்டிற்குப்போனேன். ஜன்னல்களும், கதவுகளும் நன்றாகத்திறந்து கிடப்பதைக்கண்டு நான் திடுக்கிட்டுப்போனேன். ஏதோ கொஞ்சம் கடிதத்துண்டுகள் வீட்டிற்கு முன்னால் இறைந்து கிடந்தன. ஒரு வேலைக்காரி வீட்டைப்பெருக்கிக் கொண்டிருந்தாள்.

நான் அவளிடம்போய் "காகின் இருக்கிருஞ ?" என்று கேட்பதற்குள் "அவர்கள் போய்விட்டார்கள்" என்று கூறிஞள்.

"போய்விட்டார்களா? என்ன? எங்கே போய் விட்டார்கள்?"

"இன்று காலே 6-மணிக்குத்தான் கிளம்பிப்போஞர்கள். ஆஞல் எங்கே போகிருர்கள் என்று சொல்லவில்லே. நீங்கள்தானே 'திருவாளர் ந,?' கொஞ்ச நேரம் இருங்கள் வருகிறேன்.

"சரி"

"அவர்கள் உங்களுக்காக ஒரு கடிதம் கொடுத்து விட்டுப்போயிருக்கிருர்கள்."

அந்த வேலேக்காரி மாடிப்படிகளில் ஓடிப்போய் திரும்பிவந்து "இந்தாருங்கள் இதுதான்" என்று நீட்டிஞள்.

"இருக்க முடியாது......அது எப்படி முடியும்?" என்று நான் உளறினேன். கொஞ்ச நேரம் என்னே வெறிக்கப் பார்த்துவிட்டு மறுபடியும் கூட்ட ஆரம்பித்தாள் அவள்.

கடிதத்தைப் பிரித்துப்பார்த்தேன். அது காகின் எழுதியது. ஆஸ்யாவிடமிருந்து ஒரு வரிகூட இல்லே. என்னி டம் சொல்லிக்கொண்டு போகாததற்கு மன்னிக்கும்படி கேட்டிருந்தான். பூரா விஷயங்களும் தெரிந்தால் அந்த முடிவை நான் கூட ஒப்புக்கொள்வேன் என்று குறிப்பிட்டி ருந்தான். இதைத்தவிர வேறு நல்ல வழியே அவனுக்குத் தோன்ற வில்லேயாம், "நேற்றிரவு ஆஸ்யாவைத்தேடி இருவரும் தனித்திருக்கும்பொழுது நாம் நிச்சயம் பிரிந்து தான்ஆகவேண்டும் என்ற முடிவுக்கு வந்துவிட்டேன். சில துர்அபிமானங்கள் இருக்கின்றன. அவற்றை நானும் மதிக்கி றேன். உன்ஞல் ஆஸ்யாவை மணம் செய்துகொள்ள முடி

யாது என்பதை உணர்கிறேன். அவள் எல்லாவற்றையும் என்னிடம் சொன்னாள். நான் வேறு வழியின்றி ஆஸ்யாவின் இந்த விருப்பத்தையேனும் நிறைவேற்றவேண்டி ஏற்பட்டு விட்டது'' என்று எழுதியிருந்தான். அதோடு இந்த நட்பு இவ்வளவு சீக்கிரம் முடிந்துவிட்டதற்கு வருந்துவதாகவும், எனது நல்வாழ்க்கைக்கு தனது ஆசியளித்தும், தங்களை தயவு செய்து எங்கேயும் தேடவேண்டாம் என்றும் கேட்டுக் கொண்டிருந்தான்.

''என்ன துர்அபிமானம்?'' என்று கத்தினேன், ஏதோ எதிரே அவன் நின்று கொண்டிருப்பதைப் போல ''என்ன முட்டாள்தனம். என்னிடமிருந்து ஆஸ்யாவைப் பிரிக்க உனக்கு என்ன உரிமை இருக்கிறது?'' என்று என் நெற்றிப் பொருத்தைத் தேய்த்துக்கொண்டேன்.

அந்த வேலைக்காரிஒரே சப்தமாக வீட்டுக்காரியைக் கூப் பிட்டாள். அந்தச்சப்தத்தில் என் நிலையுணர்ந்தேன். எனக்கு ஒரே ஒரு எண்ணம்தான் திருப்பித்திருப்பி ஏற்பட்டது. எப்படியேனும் அவர்களைப் பிடித்துவிடவேண்டும். ஆம், எப்பாடுபட்டாகிலும்! அந்த அதிர்ச்சியை என்னால் தாங்கவே முடியவில்லை. என் மனத்திற்கு வேறு எந்த சமாதானமும் அளிக்க முடியவில்லை. காலை ஆறு மணிக்குப் புறப்படுகிற கப்பலில் புறப்பட்டுவிட்டார்கள் என்று வீட்டுக்காரியிட மிருந்து தகவல் கிடைத்தது. உடனே டிக்கெட் ஆபீஸிற்கு ஓடினேன். அவர்கள் கலோனுக்குப் போயிருக்கிறார்கள் என்பது தெரிந்தது. அடுத்த கப்பலேறி அவர்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்ற எண்ணத்தோடு வீட்டிற்கு ஓடி னேன். நான் லூயிசீமாட்டி வீட்டைக்கடந்து கொண்டிருக்கும் பொழுது என் பெயரைச் சொல்லி யாரோ கூப்பிடுவது போல் இருந்தது. வீட்டின் மேலே பார்த்தேன். அந்த மாஜி நகராதிகாரியின் விதவை மனைவி நான் நேற்று ஆஸ்யாவைச் சந்தித்த அதே அறையில் நின்றுகொண்டிருந்தாள். என்னைப்

பார்த்து ஒரு விஷமச் சிரிப்புச் சிரித்தாள். நான் வேகமாகப் போக நினைத்தேன், ஆனால் எனக்கு ஏதோ ஒரு செய்தி வைத்திருப்பதாகக் கூறினாள். அந்தச் சொற்கள் காதில் விழுந்ததும் திரும்ப அவள் வீட்டிற்குப் போனேன். அந்த அறையில் நுழைந்தபொழுது என்மனம் இருந்த இருப்பை என்னால் வர்ணிக்கவே முடியாது.

"நீயாக இந்தப் பக்கம் திரும்பிவந்தால் இந்தக்கடிதத்தைக் கொடுக்கச் சொன்னாள் ஆஸ்யா" என்று சொல்லி அதைக்கொடுத்தாள்.

நான் அந்தக் காகிதத்தை வாங்கிக்கொண்டேன்.

ஒரு சிறிய காகிதத்தில் கீழ்க்கண்ட விஷயங்கள் வேகமாகப் பென்ஸிலால் கிறுக்கப்பட்டிருந்தன:

"இறுதி வணக்கம். இனி நாமிருவரும் சந்திக்கவே போவதில்லை. நான் இப்படிப் போவதற்குக் காரணம் ஏதோ எனக்கொரு கௌரவம் என்று நான் போகவில்லை. ஆனால் இதைத்தவிர வேறு எனக்கு வழி யில்லாததால் தான் போகிறேன். நேற்றைக்கு உங்கள் முன்னால் நான் அழுது கொண்டு நின்றபோது என்னிடம் ஒரே ஒருவார்த்தை சொல்லியிருந்தால் போதும், நான் போக வேண்டியே ஏற்பட்டிருக்காது. ஆம்; ஒரே ஒருவார்த்தை! நீங்கள் சொல்லவில்லை. ஒருவேளை எல்லாம் நன்மைக்குத்தானோ என்னவோ ?...வருகிறேன். என் இறுதி வணக்கத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்."

ஒரே ஒருவார்த்தை...நான் எவ்வளவு பெரிய பைத்தியக்காரன். அந்த வார்த்தையை முந்தியநாள் கண்ணீரினூடே சொன்னேன். ஆம், திறந்த வெளிகளில், திருப்பித் திருப்பிச் சொன்னேன். ஆனால் அவளிடம் சொல்லவில்லை. நான் அவளைக் காதலிப்பதாக அவளிடம் சொல்ல

வில்லே. அந்தத் துரதிஷ்டம் பிடித்தஅறையிலே அவளேச் சந் திக்கும்பொழுது என்ஞல் சொல்ல முடியவில்லே. அவளது சகோதரனுக்குப் பக்கத்தில் அவளேத் தேடிக்கொண்டு உட் கார்ந்திருக்கும்பொழுது கூட எனக்குச் சொல்லக்கூடிய உணர்ச்சி வரவில்லே. அதற்கும் கொஞ்ச நேரத்திற்குப் பின்தான், அவளுக்கு ஏதேனும் ஆபத்து வந்திருக்குமோ என்று நினைக்கும்பொழுதுதான் எனக்குஅப்படி ஓர்எண்ணம் வந்தது. ஆஞல் அது காலங்கடந்த செய்கைதான். ஆஞல் அது நடக்கமுடியாதது என்று நீங்கள்சொல்லலாம். அது நடக் கக்கூடியதா என்பது எனக்குத்தெரியாது. ஆஞல் அது உண்மை என்பது மட்டும் எனக்குத்தெரியும். நான் அவளே காதலிக்கிறேன் என்று கொஞ்சம் தெரிந்திருந்தாலும் கூட நிச்சயம் ஆஸ்யா போயேயிருக்கமாட்டாள். அவள் நிலே மிகக் கேவலமாகப் போயிற்று. மற்றப் பெண்களேப்போல் அவளால் அதைத் தாங்கிக் கொண்டிருக்க முடியாது. அதை நான் புரிந்துகொள்ளவே இல்லே. கடைசி நேரத்தில் காகினே அந்த இருட்டில் ஜன்னலில் கண்டபோதுகூட ஒரு ஒருவார்த்தை சொல்லியிருக்கலாம்—கடைசியாகப் பிடித்துக் கொள்ளக்கூடிய அந்த வைக்கோல் துரும்பையாவது பிடித் திருக்கலாம்-அதைக்கூட சொல்ல ஒட்டாமல் எனது பேய் மனம் மௌனம் சாதித்துவிட்டது.

அதேநாள் நான் ‘ல’-வுக்கு எனது மூட்டைமுடிச்சுக ளோடு திரும்பவந்து கலோனுக்குப் பயணமானேன். கப்பல் போய்க்கொண்டிருக்கும்போது நான் அந்த ஊரிடமிருந்தும், தெருக்களிடமிருந்தும் விடை பெற்றுக்கொண்டுபோனேன். நான் மறக்க முடியாத அந்த இடங்களிலிருந்து விடைபெற் றுக்கொண்டேன். அப்பொழுது ‘ஹன்ச்செனே’ப் பார்த் தேன். அவள் அந்த நதிக்கரையில் ஒரு பலகையின்மீது அமர்ந்திருந்தாள். அவள் முகம் வெளுத்திருந்தது. ஆஞல் வாட்டமாக-வருத்தமாக—இல்லே. ஒரு அழகான இளேஞன்

அவளருகில் நின்று கொண்டு எதையோ சொல்லிச் சிரித்துக்கொண்டிருந்தான். அந்த ரைன் நதியின் அக்கரையில் அந்த அசோக மரத்தினடியில் உள்ள கன்னிமேரியின் சிலை எப்பொழுதும்போல் என்னைப் பார்ப்பதுதெரிந்தது.

## 22

குலோனில் அவர்கள் தங்கிவிட்டுப்போன சுவடுகள் தெரிந்தன. அவர்கள் லண்டனுக்குப் போயிருப்பதாகக் கேள்விப்பட்டேன். அங்கேயும் போனேன். ஆனால் லண்டனில் அவர்களைக் கண்டுபிடிக்கவேண்டும் என்ற எனது முயற்சி எல்லாம் வியர்த்தமாயின. ரொம்பநாள் வரை மனத்துயர் ஆருமல் அவர்களைத் தேடிக்கொண்டே இருந்தேன். கடைசியில் அவர்களைக் கண்டுபிடிக்க முடியும் என்ற என் நம்பிக்கையெல்லாம் போய்விட்டது.

மறுபடியும் நான் அவர்களைப் பார்க்கவே இல்லை. மீண்டும் நான் ஆஸ்யாவைச் சந்திக்கவே இல்லை. அவளைப்பற்றி ஏதாவது ஒரு செய்தி எப்பொழுதோ காதில் விழும். ஆனால் அவள் என்னைவிட்டு வெகுதூரத்திற்குப் போய்விட்டாள்.

அவள் உயிரோடு இருக்கிருளா, செத்துவிட்டாளா என்பதுகூட எனக்குத் தெரியாது. சில ஆண்டுகளுக்குப் பின்னல் நான் வெளி தேசத்திலிருந்தபொழுது ஒருநாள் ஒரு ரயில் பெட்டியில் அவளைப்போன்றேஇருந்த ஒரு பெண்ணைப் பார்த்தேன், ஆனல் சந்தேகமே இல்லை.... தோற்றம் என்னை ஏமாற்றிவிட்டது. எனது சந்தோஷமான வாழ்நாளில் தோன்றிய அந்த ஆஸ்யா, சிறிய மர நாற்காலியில் சுருண்டு உட்கார்ந்திருந்த அந்தக் கடைசி காட்சியிலிருந்த

ஆஸ்யா எப்பொழுதுமே எனது மன அரங்கத்தில் வீற்றிருந்தாள்.

நான் அதற்காகவே அதிக நாட்கள் வருந்திக்கொண்டு இல்லை என்பதை சொல்லிவிடவேண்டும். இன்னும்கூட சொல்லப்போனால் ஆஸ்யாவை விதி என்னுடன் இணைக்காதது நல்லதுதான் என்று கூடப்பட்டது. அவளைப்போன்ற ஒரு மனைவி இருந்திருந்தால் என் வாழ்நாள் பூராவும் நிறைந்த நிம்மதியாய் இருந்திருக்காது. அப்பொழுது நான் இளைஞனாக இருந்தேன். உண்மையிலேயே குறைந்தகால அளவுள்ள வாழ்க்கை மிகுந்த ருசிகரமாகவும், எல்லையற்றதாகவும் எனக்குத் தெரிந்தது. "இன்னும் நன்றாக, இன்னும் அழகாக இருக்க வேண்டும்" என்று என்னுள்ளேயே சொல்லிக்கொண்டேன். அப்புறம் நான் மற்றொரு பெண்ணோடு பிரியமாக இருந்தேன், ஆனால் அந்தக் கண்டிப்பான போக்குள்ள, இளகிய மனதுடைய, எல்லையற்ற அன்பைச் சொரிந்த அந்த ஆஸ்யா ஏற்படுத்தியதைப் போன்ற ஒரு உணர்ச்சியை நான் அனுபவித்ததே இல்லை. என்மீது நம்பிக்கையோடு பார்த்த அந்த அழகிய கண்களைப்போல் வேறு எந்தக் கண்களும் என்னைப்பார்க்கவில்லை.

எனது நெஞ்சத்தின் மீது சாந்தி தேடிய அந்த இதயத்தைப்போல், வேறு எந்த இதயத்திற்கும், அவ்வளவு இனிமையான சந்தோஷமான எதிரொலிப்புகள் இல்லை. தொல்லைதரும் அந்த 'பிரம்மாச்சாரி' வாழ்க்கையிலே தனித்திருந்து அவதிப்பட்டது போயிற்று என்றாலும் அந்த எண்ணத்தை அகற்ற முடியவே இல்லை—அன்று அந்த ஜன்னலிலிருந்து அவள் எறிந்த புஷ்பத்தில் மக்கிப்போன வாசனையை இன்னும் நுகரத்தான் முடிகிறது. இன்று வரை அந்தப்பூவைத் தூக்கியெறிந்த கைகளை — அவற்றை ஒரு முறைதான் நான் முத்தமிட்டிருக்கிறேன்— அதை நினைவு

வைத்திருக்கிறேன். இந்நேரம் ஒருவேளை அவை கல்லறையில் புதையுண்டு போயினவோ என்னவோ தெரியவில்லை. அப்புறம் நான் — நான் என்ன ? அந்த இனிமைதரும் நினைவுகளைத்தவிர வேறு என்ன என்னிடம் இருக்கிறது. அந்த அற்பமான மலரின் மெல்லிய மணம், ஒரு மனிதனின் இன்ப துன்பங்கள் இறந்துபட்ட பின்பும்கூட வீசிக் கொண்டே இருக்கிறது. அந்த மனிதனே மறைந்தாலும்கூட அந்த மணம் வீசிக்கொண்டே இருக்கும்.

MADURAI UNIVERSITY LIBRARY
24 JUN 1971

No
Rs.